விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail : valampurii@sltnet.lk
valampurii@yahoo.com

WESTERN UNION MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அடைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
(C-3636)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 தை 22 வெள்ளிக்கிழமை (05.02.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 048

## ஐ.நா.தீர்மான அமுலாக்கலின் போது

# நாட்டின் நலன்களை

# அரசு பாதுகாக்கும்

## சுதந்திரதின நிகழ்வில் ஜனாதிபதி உரை

(கொழும்பு) நாட்டில் யுத்தம் முடிவடைந்த பின்னர் முக்கிய கரிசனைகளிற்கு தீர்வை காண்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் ஐக்கிய நாடுகள் தீர்மானம் மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்காது என தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நடைமுறைப் படுத்தும்போது நாட்டின் கௌரவத்தையும், படையினரது கௌரவத்தையும் அரசாங்கம் காப்பாற்றும் என உறுதியளித்துள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கையின் சுதந்திரதின நிகழ்வில் தமிழிலும் தேசிய கீதம் பாடப்பட்டது

(கொழும்பு)

நாட்டின் நேற்றைய தேசிய சுதந்திரதின விழாவில் தமிழ் மொழியிலும் சிங்கள மொழியிலும் நாட்டின் தேசிய கீதம் பாடப்பட்டுள்ளது.

காலிமுகத்திடலில் சுதந்திரதின நிகழ்வுகள் நேற்றுக் காலை இடம் பெற்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காலையில், இலங்கையின் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார்.

அதையடுத்து சிங்களத்தில் தேசிய கீதம் வழக்கம் போலப் பாடப்பட்டது.

அதையடுத்து, ஜனாதிபதியின் உரை, முப்படை களினதும் இராணுவ அணி வகுப்புகள் இடம் பெற்றன. 24ஆம் பக்கம் பார்க்க....

## 68ஆவது சுதந்திர தின நிகழ்வில் சுமந்திரன், சம்பந்தன் பங்கேற்பு

### மகிந்த அணி புறக்கணிப்பு



(கொழும்பு)

கொழும்பு காலி முகத்திடலில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்ற இலங்கையின் 68ஆவது சுதந்திரதின நிகழ்வுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளு மன்ற உறுப் 24ஆம் பக்கம் பார்க்க....


## "சிறுபான்மையினரின் ஆதரவின்றி எதையும் செய்ய முடியாது"

(கொழும்பு)

சிறுபான்மை மக்களது ஆதரவின்றி ஜனாதிபதியாகவோ, அரசு அமைக்கவோ, நாடாளுமன்றத்தில் ஆதிக்கம் செலுத்தவோ எவராலும் முடியாது என்று நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

அத்துடன், கட்சியைப் பிளவு படுத்த முயற்சிப்பவர்கள், எண்ணுபவர்கள் கட்சித் துரோகிகள் என்றும் அவர் சாடினார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை சுதந்திரக் கட்சி வாராந்த ஊடக வியலாளர் 23ஆம் பக்கம் பார்க்க....

## கேபியிடம் தொடர்ந்தும் வாக்குமூலம் பதிவு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கையில், கே.பி என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதனின் தொடர்பு பற்றிய விசாரணையின் முன்னேற்ற அறிக்கையை, மேன் முறையீட்டு நீதி மன்றத்தில் 24ஆம் பக்கம் பார்க்க....

## சம்பந்தன் கண்களில் கண்ணீர்

(கொழும்பு)

சுதந்திரதின நிகழ்வின் இறுதியில் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்ட போது, எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனின் கண்கள் பனித்து கண்ணீர் முட்டியதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சுதந்திரதின நிகழ்வில் பங்கெடுத்த அமைச்சர் ஒருவரை மேற்கோள்காட்டியே கொழும்பு ஊடகம் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. இலங்கையின் வரலாற்றில், சுதந்திரதின 24ஆம் பக்கம் பார்க்க....

## பிரேமதாசவின் பாரியார் சம்பந்தனுக்கு உதவி

### ஆசனத்திலிருந்து எழுந்திருக்க



(கொழும்பு)

கொழும்பு காலிமுகத் திடலில் நேற்று நடை பெற்ற தேசிய சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொண்டி 24ஆம் பக்கம் பார்க்க....

## தெருத்தெருவாய் அலைகிறோம்!

(கொழும்பு)

இந்த சுதந்திரதினத்தை எப்படி நாங்கள் சுதந்திரமாக கொண்டாடுவது. எங்கள் வாழ்க்கை இருண்டு போயுள்ளது. இதை நாங்கள் நல்லாட்சி என்பதை ஏறறுக்கொள்ள முடியாது என காணாமல் 24ஆம் பக்கம் பார்க்க....



தங்களது உறவினர்கள் தொடர்பில் நியாயம் வழங்கப்படாத நிலையில் சுதந்திரதினம் கொண்டாடப்படுவதை எதிர்த்து காணாமல் போனவர்களின் உறவினர்கள் வவுனியாவில் நேற்று கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

## தமிழ் மக்களுக்கு அரசு கௌரவம் அளித்துள்ளது

### இனவாதிகளே இழிவு படுத்தாதீர் – அகிலவிராஜ்

(கொழும்பு)

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக நீண்ட வருடங்களுக்கு பின்னர் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டுள்ளது.

இது தமிழ் மக்களுக்கு அரசாங்கம் அளிக்கும் கௌரவமாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் கல்வி அமைச்சருமான அகில 24ஆம் பக்கம் பார்க்க....

## மைத்திரியுடன் இணைய சீனா விருப்பம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து செயற்பட சீனா விரும்புவதாக அந்நாட்டு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு அனுப்பியுள்ள வாழ்த்து செய்தியில் இதனை குறிப்பிட்டுள்ளார். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவை முன்னேற்ற சீனா விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் இரண்டு நாடுகளும் நன்மை பெறும்வகையில் உறவு மேம்பட வேண்டும் என்றும் அவர்கூறியுள்ளார்(செ-12)





காரைநகர்

## கிழவன்காடு கலாமன்றம்

நடத்தும்

சற்குரு ஸ்ரீ தியாகராஜர் சுவாமிகளின் 169-வது ஆராதனை விழா

இடம் : கிழவன்காடு கலாமன்றமனோன்மணி கலையரங்கு,காரைநகர்
காலம் : 2016.02.07 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 - 5.30 மணிவரை

நிகழ்ச்சி நிரல்

- மன்றக் கொடியேற்றல்
- தொடக்கவுரை
- மங்கல இசை : ஈழத்துப் பிரபல தவில் நாதஸ்வர கலைஞர்கள்
- இசை அர்ச்சனை : ஈழத்து பிரபல இசைக்கலைஞர்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

குறிப்பு : நிகழ்வுக்கான இலவச போக்குவரத்து கலாமன்ற யாழ்க்கிளையில் (இல.11, கஸ்தூரியார் 1-வது ஒழுங்கை, யாழ்ப்பாணம் - உதயன் பணிமனை அருகிலுள்ள ஒழுங்கை) இருந்து பி.ப 2.30 மணிக்கு ஆரம்பமாகும்.

கிழவன்காடு கலாமன்றம், காரைநகர். (சி-3638)



### யாரிடம் பேசுவது?

நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது.
நான் என்ன செய்வது?
என்று எண்ணுகின்றீர்களா ......

எம்முடன் பேசுங்கள்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

திங்கள் முதல் வெள்ளி வரை மு.ப 9.00 முதல் பி.ப 1.00 வரை
சனி, ஞாயிறு தினங்களில் மு.ப 9.00 முதல் பி.ப 5.00 வரை

104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

• மதசார்பற்றது • ரகசியம் பேணப்படும்

021 222 8117, 077 900 8776

*Sponsored by Enlightenment Circle , UK*

(C-3608)


# 250க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்பு

## தெளிவுபடுத்துகிறது இலங்கை ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டத்தில் 250க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பங்குபற்றியதாக இலங்கை ஆசிரியர் சங்கம் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

இதுதவிர ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களும் நேற்றைய தினம் வலம்புரி அலுவலகத்துக்குவருகைதந்து 250க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளருக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக தெரிவித்துள்ளனர்.

இதற்கான சான்றாதாரங்களையும் அவர்கள் முன்வைத்தனர்.நேற்றைய தினம் வலம்புரியின் 9-ம் பக்கத்தில் வெளிவந்த துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளரை ஆதரித்தும் எதிர்த்தும் இரண்டு பேரணிகள் என்ற செய்தியில் வலயக்கல்விப் பணிப்பாளருக்கு எதிரரீக 50 பேருக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்த கொண்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இது தொடர்பிலேயே இலங்கை ஆசிரியர் சங்கமும் சம்மந்தப்பட்ட ஆசிரியர்களும் வலம்புரி அலுவலகத்துக்கு நேரில் வந்து 250க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்பதை தெரியப்படுத்தியுள்ளனர். (ந)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திரு.மு.கணேசானந்தன் அவர்களின் அன்புத் தாய்

### முருகையா இராசம்மா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சோமாஸ்கந்தப் பெருமானை வேண்டுகின்றோம்.

யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர். (3497) ஆசிரியர் நலன்புரிக் கழகம்



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி பா.ஜீவரஞ்சினி அவர்களின் அன்புத் தாய்

### கந்தசாமி பாலாம்பிகை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சோமாஸ்கந்தப் பெருமானை வேண்டுகின்றோம்.

யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர். (3497) ஆசிரியர் நலன்புரிக் கழகம்


# மாணவன் மீது தாக்குதல்

(மிருசுவில்)

மாட்டினை களவாடியவர்களை அடையாளம் காட்டினார் என்ற சந்தேகத்தில் 16 வயது பாடசாலை மாணவன் ஒருவன் சில நபர்களினால் கடுமையாக தாக்கப்பட்டதில் படுகாயமடைந்துள்ளான்.

இச்சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் மிருசுவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் மிருசுவில் ஜீ.ரி.எம்.எஸ் இல் கல்வி கற்கும் அதே இடத்தினைச் சேர்ந்த ச.டிசாந் (வயது16) என்ற மாணவனே சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மிருசுவில் பகுதியில் கடந்த மாதம் மாடுகள் பல களவாடப்பட்டிருந்த வேளை இது தொடர்பாக பொலிஸ் விசாரணையில் படுகாயமடைந்த மாணவன் மாடுகளை களவாடியவர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் அளித்துள்ளான்.

பொலிஸார் குறித்த நபர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணையின் பின்னர் விடுதலை செய்திருந்தனர்.

இந்நிலையிலேயே மேற்படி தாக்குதல் சம்பவம் நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள வேளை பொலிஸார் சந்தேக நபர்களைத் தேடி வருகின்றனர். (செ-85)


ALREADY ISSUED 24000 CERTIFICATES

**தெல்லிப்பளையில்**

MICOM THE GREAT SINCE 1997 IN COLOMBO

## School of Law & English



- ACCA, CIMA, AAT, CMA, IBSL
- Law Subjects
- LLB Law college subjects
- Law Entrance Exams

(English Medium and Tamil Medium) Classes also start in Colombo very soon.

**Course Fees - 17000.00**

## English Classes

IELTS - course Fees - 15000.00, Spoken English with Grammer Diploma in English- English A/L, O/L - course Fees Rs -1500.00 monthly

### Conducted by

Mohanarajah Joganantham
(M.Raja Joganantham)
L.L.B.(Col.Uni)
Dip in Journalism
Reading for LL.M
Proprietor of MICOM

An old Student of Honourable Prof. Dr.G.L.Peries,
Prof.Madam Savithiri Kunasekere
Prof.Dr.S.Sornaraja
Prof.Madam. N.Chandrakasan
Regiee michel - the chief Editor of daily mirror



• Tellipalai Classes Have Been Going on. Tellipalai
• Micom The Great Infornt of old AGAS office

Contacting Numbers:
077 284 2556,076 707 7558, 077 395 0215
Contactable person Mr.Joganantham

Lectured on Law at, University of Ballarat (Australia), University of ICFAI (Hydrabad), OXONIA, IAS, Ladies College,London Business School, MICOM International

(C-3633)



## துயர் பகிர்கின்றோம்

வண்.மேற்கு வைத்தியசாலை (Dr.கங்காதரன்)



### முருகேசு அப்புத்துரை

யாழ் போதனா வைத்தியசாலை மகப்பேற்று வைத்திய நிபுணர் Dr.A.சிறீதரன் அவர்களின் அன்புத் தகப்பனார் முருகேசு அப்புத்துரை (PWD) காலமானதையிட்டு அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் ஆழ்ந்தஅனுதாபங்களைத்தெரிவிப்பதோடுநாமும் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

வண்.மேற்கு வைத்தியசாலை. (Dr.கங்காதரன்) (3495) பணிப்பாளரும், பணியாளரும்.



## கண்ணீர் அஞ்சலி



### சூசைமுத்து அன்ரன் றொபேட்

பிறப்பு : 1965.03.14 - இறப்பு : 2016.02.02

எமது பாடசாலையின் முதல்வர் திரு.சு.நடராசா அவர்களின் மைத்துனரும் எமது ஆசிரியை திருமதி நடராசா அவர்களின் சகோதரருமான சூசைமுத்து அன்ரன் றொபேட் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள். கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்.

(சி-3637)



**வலம்புரி**


விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

## சுதந்திர தினத்திற்கு எதிர்ப்பு

# யாழ்.பல்கலையில் கறுப்புக் கொடி!





(யாழ்ப்பாணம்)

**இலங்கையின் 68 ஆவது சுதந்திர தினத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று கறுப்புக் கொடி கட்டப்பட்டுள்ளது.**

சுதந்திர தினமன்று கறுப்பு கோடி கட்டியமையால் சம்பவ இடத்திற்கு பொலிஸார் வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதனால் யாழ்.பல்கலைக்கழக சூழலில் நேற்றைய தினம் பதற்ற நிலை காணப்பட்டது. யாழ். பல்க லைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கு மற்றும் கலைப் பீட கலையரங்கு ஆகியவற்றிலேயே கறுப்பு கொடி கட்டப்பட்டு மாணவர்களால் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தமிழர் தரப்பு கடந்த பல தசாப்தங்களாக இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுகளை புறக்கணித்தே வருகின்றனர். எமது மக்களின் அபிலாசைகள், உரிமைகள் மறுக்கப்பட்டு அடக்கப்பட்டு வந்தமை தான் இதற்கு காரணமாகும். இந்த அடக்கு முறைகள் கால்ம் காலமாக ஏதோ ஒரு வகையில் தொடர்ந்தே வருகின்றன.

மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இருந்த சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டு, புதிதாக வந்தவர்கள் மீது அதிகளவு நம்பிக்கை வைத்து பெருமளவில் திரண்டு எமது மக்கள் வாக்களித்தார்கள். ஆனால் அவர்கள் ஆட்சி ஏற்றபின்னர் எமது மக்கள் எதிர்பார்த்த மாற்றம் இன்னமும் நடைபெறவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவரகள் காணாமல் போனவர்களாகவே இருந்து வருகின்றனர். அரசியல் கைதிகள் தொடர்ந்தும் சிறைகளுக்கு உள்ளேயே உள்ளனர். காணிகள் விடு விக்கப்படவில்லை, இரா ணுவ வெளியேற்றம் நடைபெறவில்லை, இவ்வாறு கடந்த காலங்களில் இருந்து வந்த எமது மக்களின் பிரச்சினைகள் இப்போதும் மாற்றங்களின்றி தொடர்ந்தவண்ணமேயுள்ளன.

ஆகையால்நாங்கள்என்ன சாதித்து விட்டோம்? எங்கள் மக்களுக்காக எதை பெற்றுக் கொடுத்தோம் என்று இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுகளினை கொண்டாடுவது ஆகையால் எங்கள் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரையில் நாங் கள் இலங்கையின் சுதந்திர நிகழ்வு தமிழர்களுக்கான சுதந்திர தின நிகழ்வு அல்ல.

புதிய அரசாங்கம் தனது நல்லிணக்க நடவடிக்கைகளை செயலில் காட்ட வேண்டும் வெறுமனே கருத்துக்களை மட்டும் கூறிக்கொண்டு இருப்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ் மக்களுக்கான நனமை விடயங்களை தமது செயலில் காட்டட்டும் நாங்கள் சேர்ந்து சுதந்திர தினத்தை கொண்டாடுவோம்.

அதுவரை இலங்கை யின் சுதந்திர தினம் எமக்கு கறுப்பு தினமாகவே இருக்கும் என மாணவர்கள் சிலர் தெரிவித்த அதேவேளை துண்டுப் பிரசுரங்களும் ஒட்டப்பட்டுள்ளன. (இ-4-9)

## கிணற்றுக்குள் தவறிவிழுந்த வயோதிபப் பெண் உயிரிழப்பு

தோட்டக்கிணற்றுள் தவறி விழுந்த வயோதிபப் பெண் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் சுன்னாகம் தெற்கில் இடம்பெ-ற்றது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை கனகமணி (வயது-80) என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த வயோதிபப் பெண்ணின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக் காக வைக்கப்பட்டுள்ளது.(இ-5-30)

## தேசிய கீதம் தமிழில் பாடப்பட்டமை புதிய பயணத்தின் ஆரம்பம்-ஏரான்

தேசிய கீதம் தமிழ் மொழியில பாடப்பட்டமையானது நாட்டின் புதிய பயணத்திற் கான ஆரம்பம் என அரச கைத்தொழில் அபிவிருத்தி பிரதியமைச்சர் ஏரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார். டுவிட்டரில் செய்துள்ள பதிவில் பிரதியமைச்சர் இதனை கூறியுள்ளார்.

அதேவேளை தனது டுவிடடர் கணக்கில் பதிவொன்றை செய்துள்ள அமைச்சர் மனோ கணேசன், தேசிய கீதம் தமிழில் பாடப்பட்டமையானது நல்லிணக்கத்தின் சிறிய செயற்பாடு எனவும் மேலும் நண்ட தூரம் செல்ல வேண்டியுள் ளது எனவும் தெரிவித்தார். (இ)

## இரண்டு நீர் இறைக்கும் இயந்திரங்கள் திருட்டு

தோட்டத்தில் வைக்கப்பட்டிருந்த இரண்டு நீர் இறைக்கும் இயந்திரங்கள் திருடப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு ஒன்றுபதிவுசெய்யப்பட்டுள்ளது.

இத்திருட்டுச்சம்பவம்நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு வடமராட்சி மந்திகை முறாவில் பகுதியில் உள்ள தோட்டப் பகுதியில் இடம்பெற்றது.

இதுதொடர்பாகவிசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(இ-5-60)

## சுதந்திர தினத்தை முன்னிட்டு 600 கைதிகளுக்கு விடுதலை

சுதந்திர தினத்தை முன்னிட்டு சுமார் 600 சிறைக் கைதிகள் பொதுமன்னிப்பின் கீழ் நேற்று விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறசேன இதற்கான அனும தியை வழங்கியுள்ளதாக சிறைச்சாலைகள் வட்டாரங்களிலிரு ந்து தெரிய வந்துள்ளது.


சிறு சிறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளில் இருந்தே 600 பேர் பொது மன்னிப்பு பெற்றுள்ளனர்.

இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் இருக்கும் 28 சிறைச்சாலைகளில் இருந்து குறித்த சிறைக்கைதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனினும் கொலை, கொள்ளை, வன்புணர்வு போதைப் பொருள் வர்த்தகம், திட்டமிட்ட குற்றச் செயல்கள் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பொது மன்னிப்பின் கீழ் விடுதலை வழங்கப்படுவதில்லை.

அதே போன்று பொதுமன்னிபபின் கீழ் எந்தவொரு தமிழ அரசியல் கைதியும் விடு தலை செய்யப்படவில்லை என்றும் உறுதியான தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

## யாழ். சிறையிலிருந்து இருவர் விடுதலை

இலங்கையின் 68ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ். சிறைச்சாலையில் இருந்து இரண்டு கைதிகள் பொது மன்னிப் பின் கீழ் நேற்றைய தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.சிறு குற்றங்கள் புரிந்து தண்டப்பணம் செலுத்த முடியாததால் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த இவர்கள் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (இ-9)




## ஆகாயம் எரித்த சாம்பல்!

முள்ளி வாய்க்கால் போயிருந்தேன் - அந்த
முல்லைத் தீவையும் மோதிவந்தேன்
முள்ளில் கிழிந்தஎன் கண்களிலே - நீர்
முட்டித் தெறித்ததை யாரறிவார்?

ஆனந்த புரத்தைக் கடக்கையிலே - என்
ஆவி துடித்ததை என்னசொல்ல?
நானந்தத் துயரம் சொல்வதற்கு - என்
நாபடும் பாடு கொஞ்சமல்ல

இந்த இடம்தான் அந்தஇடம் - எம்
இலட்சம் உயிர்களைக் கொன்றஇடம்
சொந்தம் சொல்லி நானழுதால் - விண்
சுற்றும் கோள்கள் நின்றுவிடும்

சாகாத காற்றின் சப்தங்களில் - எம்
சனங்களின் அழுகுரல் கேட்டறிந்தேன்
ஆகாயம் எரித்த சாம்பல்துகள் - மண்ணில்
ஆங்காங் கலைவதைக் கண்டறிந்தேன்

எரிவாய்ப் பட்ட சருகுகளாய் - உடல்
இற்றுப் போனவர் எத்தனையோ?
நரிவாய்ப் பட்ட நண்டுகளாய் - ஈங்கு
நசுங்கிய சிசுக்கள் எத்தனையோ?

தாயிடம் பால்கொண்ட பிள்ளையரை - ஒரு
தடயம் இன்றியே எரித்தாராம்
ஆயிரம் எலும்புக் கூடுகளைச் சீன
அமிலம் ஊற்றியே அழித்தாராம்

படர்ந்து கிடக்கும் வெறுமையிலே இனம்
பட்ட பெருந்துயர் சிலஅறிவோம்
நடந்த மெய்க்கதை மொத்தமென்ன ஏ
நந்திக் கடலே நீயறிவாய்

தோண்டு மிடத்தில் தங்கம்வரும் என்று
சொல்லிக் களித்த ஈழத்தில்
தோண்டு மிடத்தில் குருதிவரும் என்று
சொல்லிப் புலம்பும் நிலையுற்றோம்

மைநீட்டிச் செய்த நிறம்படைத்த பல
மங்கையர் கூந்தலில் பூவுமில்லை
கைநீட்டிப் பார்த்தேன் தோழர்களே சிலர்
கரங் களுமில்லை கைகுலுக்க

மண்ணில் விழுந்த மழைத்துளிகள் அவை
மண்ணில் தொலைந்து போவதில்லை
எண்ணில் அடங்கா உயிர்த்தியாகம் வெறும்
இறப்புக் கணக்கில் சேர்வதில்லை

அழிந்து போனது போலிருக்கும் ஆயின்
அருகம் புல்லுக் கழிவேது?
பொழியும் ஒருதுளி பட்டவுடன் அது
பொட்டென் றெழுமே அழியாது

எந்த யுகத்தில் போர்களில்லை? அட
எந்த யுகத்தில் தோல்வியில்லை?
அந்த யுகத்தை எருவாக்கு நீ
அடுத்த யுகத்தை உருவாக்கு

கவிப்பேரரசு வைரமுத்து

## மஹேல அதிரடி சதம்

# மாஸ்டர்ஸ் சம்பியன்ஸ் லீக் கிரிகெட் சகிட்டாரியஸ் ஸ்ட்ரைக்கர்ஸ் வெற்றி




இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் மஹேல ஜெயவர்த்தனவின் அதிரடி சதத்தால் கில்கிறிஸ்டின் அணி அபார வெற்றி பெற்றது.


மாஸ்டர்ஸ் சம்பியன்ஸ் லீக் தொடர ஐக்கிய அரபு நாடுகளில் நடைபெற்று வருகிறது.

நேற்று நடைபெற்ற ஒரு லீக் போட்டியில் சகிட்டாரியஸ் ஸ்ட்ரைக்கர்ஸ்- லிப்ரா லிஜென்ட்ஸ் அணிகள் மோதின. சகிட்டாரியஸ் ஸ்ட்ரைக்கர்ஸ் அணிக்கு கில்கிறிஸ்ட் கப்டனாக இருக்கிறார். லிப்ரா லிஜென்ட்ஸ் அணிக்கு கலிஸ் கப்டனாக இருக்கிறார்.

கில்கிறிஸ்ட் அணி நாணயச் சுழற்சியில் வென்று பட்டிங் தேர்வு செய்தது. தொடக்க வீரர்களாக கில்கிறிஸ்ட் மற்றும் ஜெயவர்தன தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். கில்கிறிஸ்ட் 28 பந்தில் 3 பவுண்டரி, 3 சிக்சர்களுடன் 38 ஓட்டங்கள் சேர்த்தார்.

அடுத்த வந்த இம்ரான் பர்ஹத் 18 ஓட்டங்கள் சேர்த்தார். ஆனால் ஜெயவர்தன அதிரடியாக விளையாடினார். அவர் 60 பந்தில் 10 பவுண்டரிகள், 9 சிக்சர்களுடன் 124 ஓட்டங்கள் குவித்தார். இதனால் கில்கிறிஸ்ட் அணி 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 227 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் 228 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கலிஸ் அணி களம் இறங்கியது. அந்த அணியால் 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 164 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதனால் கில்கிறிஸ்ட் அணி 63 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (க)




# மெஸ்சி, சுவாரஸ் ஹாட்ரிக் கோலால் பார்சிலோனா அபார வெற்றி




கோபா டெல் ரெய் அரையிறுதி போட்டி ஒன்றில் பார்சிலோனா- வாலேன்சியா அணிகள் நேற்று முன்தினம் மோதின. அரையிறுதியில் இரண்டு அணிகளும் இரண்டு முறை மோத வேண்டும்.

முதன் அரையிறுதி லீக் போட்டி நேற்று முன்தினம் தொடங்கியது. தொடக்கம் முதலே பார்சிலோனாவின் மெஸ்சி மற்றும் சுவராஸ் அதிரடியாக விளையாடி கோல் மழைகள் பொழிந்தன.

12 நிமிடத்திற்குள் பார்சிலோனா இரண்டு கோல்கள் அடித்தது. 7-வது மற்றும் 12-வது நிமிடத்திலும் சுவாரஸ் அடுத்தடுத்து இரண்டு கோல்கள் அடித்தார். 29-வது நிமிடத்தில் மெஸ்சி ஒரு கோல் அடித்தார். இதனால் முதல பாதி நேரத்தில் பார்சிலோனா 3-0 என முன்னிலையில் இருந்தது.

இரண்டாவது பாதி நேரத்திலும் பார்சிலோனாவின் கையே ஓங்கியது. 58-வது மற்றும் 74-வது நிமிடத்தில் மெஸ்சி மேலும் இரண்டு கோல்கள் அடித்தார். அதன்பின் சுவாரஸ் 83 மற்றும் 88-வது நிமிடத்தில் அடுத்தடுத்து கோல்கள் அடித்தார். பார்சிலோனாவின கோல் மழைக்கெதிராக வாலேன்சியா அணியால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை.

இதனால் பார்சிலோனா 7-0 என வெற்றி பெற்றது. இரண்டு அணிகளும் மேலும் ஒரு அரையிறுதி போட்டியில் விளையாடுகிறது. இந்த இரண்டு போட்டிகளில் கிடைக்கும் வெற்றி அடிப்படையில் ஒரு அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறும். (க)

## திருமண பந்தத்தில் இணைகிறார் ஜடேஜா



ரோஹித், ஹர்பஜன், யுவராஜ் சிங் வரிசையில் திருமண பந்தத்தில் இணையவிருக்கிறார் சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜா.

இந்திய அணி வீரர்களுக்கு இது மிகவும் சந்தோஷமான காலம் போலும், அனைவரும் வரிசையாக திருமணம் செய்து கொள்கின்றனர்.

சுரேஷ் ரெய்னா, ரோஹித் சர்மா, ஹர்பஜன் சிங், மோகித் சர்மா, யுவராஜ் சிங் வரிசையில் தற்போது இணைந்துள்ளார் சகலதுறை வீரர் ஜடேஜா.

சிறப்பாக பந்துவீசி எதிரணியினரை மிரள வைத்த ஜடேஜாவுக்கு இன்று, ராஜ்கோட்டை சேர்ந்த ரீவா என்ற பெண்ணுடன் நிச்சயதார்த்தம் நடைபெறவுள்ளது.


ரீவா மெக்கானிகல் இன்சினியரிங் பட்டதாரி என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## இந்திய வேகப்பந்து வீச்சாளர்களுக்கு பந்து வீசும் அறிவு இல்லை!

# சொயிப் அக்தர் தெரிவிப்பு

பாகிஸ்தான் அணியின் ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ் என்று அழைக்கப்பட்டவர் அதிவேகப் பந்துவீச்சாளர் சொயிப் அக்தர். பாகிஸ்தான் அணியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு தற்போது கிரிக்கெட் வர்ணனையாளராக உள்ளார். இவர் ஒரு தொலைக்காட்சிக்கு பேட்டியளித்தார்.

அப்போது இந்திய வேகப்பந்து வீச்சாளர்களர் போதுமான அளவு பந்து வீசும் அறிவை



பெறவில்லை என்றார்.

இதுகுறித்து அக்தர் மேலும் கூறுகையில் "இந்திய வேகப்பந்து வீச்சாளர்கள் அவர்களது பந்து வீச்சை சீராக்க விரும்பினால் குறைந்தது 6 வாரமாவது பாகிஸ்தான் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர்களான வாசிம் அக்ரம் மற்றும் வக்கார் யூனிசிடம் பயிற்சி பெறவேண்டும்.

ஒருநாள் கிரிக்கெட் புதிய விதிமுறை வந்ததில்இருந்து இந்திய வேகப்பந்து வீச்சாளர்களுக்கு பந்தை ரிவர்ஸ் ஸ்விங் செய்ய முடியவில்லை. இந்தியாவின் ஜாகீர்கான் புதிய பந்து மற்றும் பழைய பந்தில் அபாரமாக பந்து வீசக்கூடியவர். அவர் இந்தியாவிற்காக சிறந்த பந்து வீச்சை வெளிபபடுத்தியுள்ளார்.

தற்போது உலகளவில் இந்தியாவின் அஸ்வின் தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளராக உள்ளார். இருபது-20 உலகக்கோப்பையை வெல்வதற்கான சிறந்த அணியாக இந்தியா உள்ளது" என்றார். (க)

# யோஷித மற்றும் ஐந்து பேருக்கும் வீட்டிலிருந்து சிறைச்சாலைக்குச் செல்கிறது உணவு

சி.எஸ்.என் தொலைக்காட்சி நிறுவனத்தில் இடம்பெற்றதாக சந்தேகிக்கப்படும் நிதி முறைகேடுகள் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இளைய மகன் யோஷித ராஜபக்ஷ மற்றும் ஐந்து சந்தேக நபர்கள், சிறைச்சாலையில் வழங்கப்படும் உணவை உண்பதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சிறைச்சாலைப் பேச்சாளர் துசார உப்புள்தெனிய தெரிவிக்கையில்,

சந்தேகநபர்கள் தமக்கான உணவை தமது வீடு களில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் இந்த உணவைப் பெறுவதற்கோ அல்லது அதனை நிராகரித்து வெளியிலிருந்து பெறுவதற்கோ எந்தவொரு சிறைக் கைதிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை முதல் அவர்கள் தமது உணவை வெளியில் இருந்து பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சிறைச் சாலைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் உணவைப் பெறுவதற்கு ஆரம்பத்தில் அவர்கள் இணக்கம் தெரிவித்திருந்த போதும் பின்னர் அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர். (3)

# மணி விழா வாழ்த்து



சமூக நேய அர்ப்பணிப்பாளனும் எமது இல்லத்தின் குழந்தைகளை வளர்ப்பதற்கு பேருதவியாற்றிவரும் "**பொன்மனச் செம்மல்**" "**மனிதநேய ஈகையாளன்**" "**கல்விக் காருண்யன்**" ஆகிய உன்னத கௌரவப் பட்டங்களைப் பெற்று மணிவிழாக்காணும் உயர் திரு. E.S.P.நாகரத்தினம் அவர்களுக்கு எமது வாழ்த்துக்களை இல்லக் குழந்தைகள் சார்பாக தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

வாழ்க வளமுடன்

**தலைவர்-தி.இராசநாயகம்**
**இல்லப்பணிப்பாளர்கள், பணியாளர்கள்,**
**இல்லக் குழந்தைகள்**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்**
**ஜெயந்திநகர்,கிளிநொச்சி.**

(அ-3635)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் -2016

யாழ்.பொது நூலக சிற்றுண்டிச்சாலையை 16.03.2016ஆம் திகதி முதல் 31.12.2016 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் : ரூபா 500.00 (வரி நீங்கலாக)
கேள்விப் படிவம் விநியோகித்தல் : 05.02.2016-18.02.2016ஆம் திகதி வரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் : 19.02.2016 காலை 9.30 மணிவரை
கேள்வி திறத்தல் :19.02.2016 முற்பகல் 10.00 மணிக்கு

குறிப்பு:

1.கேள்வியில் சித்தி பெறுபவர் குத்தகைக்கு எடுக்கத் தவறின் இரண்டாவது கேள்விதாரருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

2.கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை என்பவற்றுக்கு 11% VAT 2% NBT சேர்த்து செலுத்துதல் வேண்டும்.

3.கேள்விப்பத்திரம் பெற வருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் ஒளிப்படப்பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் தங்கள் பகுதி கிராம சேவையாளர் மூலம் தங்கள் வதிவிடத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

4.சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ்.மாநகரசபைக்கே உரியது.

5.கேள்விப் பத்திரங்களைப் பெறுபவர்கள் முன்பு மாநகரசபைக்கு எந்தவித கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

| விபரம் | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|
| யாழ்.பொதுநூலக சிற்றுண்டிச்சாலை | 5000.00 | 190,000.00 |

மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**மாநகர சபை அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**

**பொ.வாகீசன்**
**ஆணையாளர்,**
**யாழ். மாநகர சபை**

# கல்யாண மாலை

## இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 15
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/பிரான்ஸ் PR
தொ.இ: G/3780

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 18
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:Software Eng/ வங்கி முகாமையாளர்
தொ.இ: B/3783

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 37சூரிசெவ் 11 இல்
உயரம்: 174cm
தகைமை/தொழில்:NCT/ QS
தொ.இ: B/3789

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 20செவ் 2 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்
தொ.இ: B/3790

## இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 27செவ் 2 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:Diploma/ NGO
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/4262

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 7
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: G/4304

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 85 செவ் 8 இல்
உயரம்: 165cm
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/4312

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 48 செவ் 12 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/4316

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# இராசி பலன்

**05.02.2016**
**(தை 22, வெள்ளிக்கிழமை)**
**சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு,**
**துவாதசி முன்னிரவு 11.56 மணிவரை**
**மூலம் மாலை 6.31 மணிவரை**
**சுபநேரம் 6.35-8.05மணிவரை**
**இராகுகாலம் 11.05-12.35 மணிவரை**
**அமிர்தசித்தம்**

**வளவன்**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் ரோகினி, மிருகசீரிடம் | | |
| சூரி | | | ராகு |
| புத சுக் சந் | சனி | செவ் | குரு |

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு, ஆரோக்கிமான நாள்.

**மேடம்:** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**இடபம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, வெளியூர் பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம்,உடல் நலனில் கவனம் தேவை.

**மிதுனம்:** ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**கும்பம்:** வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும் சமயோசிதப் புத்தியால் பலரையும் கவர்வீர்கள், தொலைபேசி மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம் அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கடகம்:** பொதுநல ஈடுபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், பழைய கடன்களை அடைக்க புதிய வழிகளைக் கையாள்வீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும், கௌரவமான நாள்.

**மகரம்:** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, சுப விரயங்கள் கூடும் நாள், வழிபாடு காரிய வெற்றி தரும், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்:** பிள்ளைகளின் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம் பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**தனுசு:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சோம்பலை விலக்குவது நல்லது, ஆழ்ந்த சிந்தனையுண்டு, தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்திணைவர்.

**விருச்சிகம்:** வருங்கால நலன்கருதி சேமிக்க நினைப்பீர்கள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**துலாம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், இளைய சகோதரர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்,

**கன்னி:** விரதம், வழிபாடுகளில் நம்பிக் கை கூடும் நாள், இல்லத்தில் சுகங்களும்,சந்தோசங்களும் அதிகரிக்கும், தூரத்து உறவினர்களால் நன்மையுண்டு, சுப செலவுகள் கூடும் நாள்.






இலங்கையின் 68 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று காலை 8.50 மணியளவில் யாழ்.மாவட்ட செயலகத்தில் தேசிய கொடியேற்றப்பட்டு பின்னர் மாவட்டச் செயலக வளாகத்தில் மரநடுகையும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள் - உ.சாளின், பொ.சோபிகா)

## ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 169 ஆவது ஆராதனை விழா

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபை நடத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 169 ஆவது ஆராதனை விழா எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு வட இலங்கைச் சங்கீத சபையின் தற்பரானந்தன் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

விழாவிற்கு கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், பாடசாலை மாணவர்கள், 2016 ஆம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றும் யாழ்.மாவட்ட தேர்வு நாடிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விழாவில் பஞ்சரத்தின கீர்த்தனாஞ்சலி செய்ய விரும்பும் கலைஞர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்குமுன் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அல்லது 021 224 2319 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும்வட இலங்கைசங்கீத சபை கேட்டுள்ளது. (இ-5)

## நிழல் நூல் வெளியீட்டு விழா

யாழ். மாவட்டத்திலுள்ள தொண்டு நிறுவனங்களின் வெளியீடான நிழல் என்னும் கட்டுரைத்தொகுப்புநூல்வெளியீட்டு விழா நிகழ்வு நாளை சனிக்கிழமை சுன்னாகம் வாழ்வகசெல்லாமண்டபத்தில்காலை 9.30 மணிக்குநடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை தலைவர் பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ளஇந்நூல்வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவ ட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் ஆ. சிறி, கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன், வட மாகாண பண்பாட்டலுவல் கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம் மற்றும் யாழ். தினக் குரல் பத்திரிகை பிரதம ஆசிரியர் வீ.அற்புதானந்தன் ஆகி யோர் கலந்து கொள்வது டன் கௌரவ விருந்தினர்களாக சுன்னாகம் வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன், நல்லூர் பிர தேச செயலக கலாசார உத்தி யோகத்தர் திருமதி ரஜனி குமாரசாமி மற்றும் கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் த. கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## இல்லமெய்வல்லுநர் போட்டி

யாழ். அல்லைப்பிட்டி றோ.க.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமைபிற்பகல் ஒருமணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் வி.என்.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக அல்லைப்பிட்டி மண்டைதீவு பங்குத்தந்தை அருட்தந்தை எம்.டேவிற், வேலணை பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி.எ.வெங்கிபுஸ்பராஜ் ஆகியோர் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக அல்லைப்பிட்டி கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் அ.சிலுவைராசா, அல்லைப்பிட்டி அபிவிருத்திக் குழுத் தலைவர் ஜி.அலன்எட்விசன், வெண்புரநகர், அல்லைப்பிட்டி கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் கி.கிறிஸ்துராஜா, பாடசாலை அபிவிருத்திக் குழுவின் முன்னாள் செயலாளர் யே.யூலியஸ் வினோதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

யாழ்.சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயமும் யாழ்.சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலையும் இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்றுவெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் இ.சிறீதரன், சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் ஆ.பிரான்சிஸ் சேவியர்ஆகியோரின்இணைத் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலர் அ.சோதிநாதன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக சங்கானை கோட்டக்கல்வி அலுவலர் சூ.நோபேட் உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

துறைசார் விருந்தினராக வட மாகாண நன்னடத்தை சிறுவர் சேவை பதில் கணக்காளர் ந.சுதேஸ்குமார் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக மன்னார் நானாட்டன் இலகடிப்பிட்டி றோ.த.க. பாடசாலை ஆசிரியர் வி.இராகவன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

யாழ்.அல்வாய்வடக்குஇந்து தமிழ் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ந.இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வட மாகாணசபை உறுப்பினர் வே.சிவயோகன் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக வட மாகாணசபை உறுப்பினர் க.தருமலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5-60)

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

(கரணவாய்)

யாழ்பருத்தித்துறைபுலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலையின் தற்காலிக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி.பி.தயாநிதி தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக ஜி.ஜெகதீசன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5-60)

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையை அதிசிறப்பு வைத்தியசாலையாக தரமுயர்த்துக

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையை மட்டக்களப்பில் உள்ள அஷ்ரப் ஞாபகார்த்த அதிசிறப்பு வைத்தியசாலை போன்று, தரமுயர்த்தப்படவேண்டும் என்று வலி.வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 4 வருடங்களின் பின்னர் இணைத்தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் சுகாதாரம் தொடர்பான விவாதத்தின்போது வலி.வடக்கு பிரதேச சபையின் முன்னாள உறுபபினரும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத் தலைவருமாகிய லயன் சி.ஹரிகரன் மேற்படி தீர்மானத்தை முன் வைத்துஉரையாற்றினார்.

சுகாதாரம் தொடர்பான விவாதத்தின்போது, வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம.கே.சிவாஜிலிங்கம், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு உள்ளது. 'அதற்குரிய வளங்களைப் பெற்றுக்கொடுப்பதில் மாகாண சபை பல்வேறுபட்ட சிக்கல்களை எதிர்கொண்டுள்ளது. புற்றுநோயாளர்களுக்கான மருந்துகள் மிகவும் பெறுமதி வாய்ந்தவை. இந்த வைதத்தியசாலையை மத்திய அரசிடம் கையளித்தால் இதற்குரிய வளங்கள் சரியான முறையில் கிடைக்கலாம் என எண்ணுகின்றேன். இது தொடர்பில் இந்த அவையினரின் கருத்தையும் எதிர்பார்கின்றேன் என்றார்.

இந்தக் கருத்தை அடுத்து உரையாற்றியதெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் லயன் சி.ஹரிகரன், இலங்கையிலே எங்குமில்லாதவாறு புற்றுநோய் வைத்தியசாலை எமது வடக்கு மாகாண சபையின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது. ஏனைய புற்றுநோய் வைத்தியசாலைகள் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழேயே உள்ளன.எமதுவடக்குமாகாண சபை இதனை ஒரு சவாலாக ஏற்று திறம்பட செயலாற்ற முடியும்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, உள நல சிகிச்சைப் பிரிவு ஆகிய இரு பிரிவுகள் உள்ளன. யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கான கற்கைக்குரிய அலகாகவும் இந்த வைத்தியசாலை செயற்படுகின்றது. 1990 ஆம் ஆண்டு மாவட்ட வைத்தியசாலை என்ற தரப்படுத்தலில் உள்ள ஆளணியினரே தற்போதும் உள்ளனர். நடைபவனியூடாக விசாலமான கட்டடங்களைக் கட்டியிருக்கலாம். பல மில்லியன்கள் நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டிருக்கலாம். வைத்தியசாலையை இயக்கு த ற்கு கட்டடங்கள் மட்டும் போதாது. அதற்குரிய ஆள ணிகள் உருவாக்கப்பட வேண்டும்.

எமது வைத்தியசாலையை மாகாணப் பொது வைத் திய சாலையாகவோ அனுமதிமாவட்டப் பொது வைத தியசாலையாகவோ தரமுய ர்த்த வேணடிய கடப்பாடு வடக்கு மாகாண சபைக்கு உள்ளது. இரண்டும் இல்லா விட்டால் மட்டக்களப்பில் அஷ்ரப் ஞாபகார்த்த அதிசிறப்பு வைத்தியசாலை உள்ளமை போன்று, இதனையும் அதிசிறப்பு வைத்தியசாலையாகத் தரமுயர்த்தி, மத்தியுடன் இணைந்து அதன்மூலம் விசேட ஆளணி உருவாக்கத்தைமேற்கொண்டு வைத்தியசாலையைச் சிறப்பான முறையில் இயங்க வைக்க முடியும் என்றார்.


மீண்டும் உரையாற்றிய சிவாஜிலிங்கம், இது ஒரு நல்ல யோசனை. உடனடியாக இந்த வைத்தியசாலையை அதிசிறப்பு வைத்தியசாலையாக மாற்ற வேண்டும்.

இங்கு இதனைத் தீர்மானமாக நிறைவேற்றுங்கள். மாகாணசபையிலும் இதற்குரிய அழுத்தங்களைத் தன்னால் பிரயோகிக்கமுடியும் என்றார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையை அதிசிறப்பு வைத்தியசாலையாக உடனடியாகத் தரமுயர்த்த வேண்டும் என்ற தீர்மானத்தை தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி வழிமொழிய ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. (இ)



# தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட முன்வரைபு



**தமிழ் மக்கள் பேரவையின் நிபுணர் குழுவால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வுத் திட்ட முன்வரைபு 31.01.2016 அன்று பிற்பகல் 3 மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வெளியிடப்பட்டது.**

(தொடர்ச்சி)

27. நீதி நிர்வாகம்

28. மத்திய அரசுக்கான கைத்தொழில் ஆராய்ச்சியும் பயிற்சியும்

29. தரநிர்ணயம் மேம்பாடு சம்பந்தமான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள்

30. ஆக்கவுரிமைகள், புத்தகக்காட்சிகள், வடிவமைப்புகள், பதிப்புரிமை, புலமைத்துவ வியாபாரக் குறிகள், வணிகக் குறிகள்.

31. ஏகபோகவுரிமை இணைப்புகள்

32. மத்திய தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

33. மத்திய தொல்பொருட்கள் மற்றும் நூதனசாலைகள்

34. மத்திய விளையாட்டுத்துறையின் நிர்வாகம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி

35. இயற்கை அழிவு, பேரிடர் ஏற்படும் சந்தர்ப்பங்களில் தலையீடு செயதல்

36. தொழில் தரம் மற்றும் ஒழுங்குபடுத்தல்கள்

37. பிரஜாவுரிமை

## 9. காணிகள்

9.1 காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் "அரச காணி" என வரையறுக்கப்பட்டவை மாநிலங்களிற்கு உரித்தாகும்.

9.2 மத்திய நிரலின் கீழான விடயங்கள் தொடர்பில் நியாயமாக தேவைப்படும் காணிகள் தவிர தற்போது மத்தியின் கட்டுப்பாட்டில் இருக்கும் காணிகள் அனைத்தும் மாநிலங்களுக்கு உரித்தாகும். இது தொடர்பில் பிணக்கு ஏதும் இருப்பின் அப்பிணக்கானது மத்தியஸ்தத்திற்கு விடபபட்டு இறுதியாக அரசியலமைப்பு நீதிமன்றினால் தீர்க்கப்படலாம்.

9.3 தற்போது மத்திய நிரலில் இல்லாத விடயம் ஒன்று தொடர்பான அரச காணி மத்தியின் கட்டுப்பாட்டில் இருப்பின் அது மாநிலத்தைச் சேரும்.

9.4 மத்தியின் கட்டுப்பாட்டில் அல்லது ஆட்சியில் உள்ள தனியார் காணிகள் அனைத்தினதும் உடமை அவற்றின் சட்டபூர்வ உரித்தாளரிற்கு கையளிக்கப்படல் வேண்டும்.

9.5 காணி கைமாற்றம், காணி அபிவிருத்தி, காணிச் சீர்திருத்தம், காணி பயன்பாடு, காணி விற்பனை, உள்ளடங்கலாக காணி தொடர்பில் அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு மாநிலங்களிற்கு பூரண உரித்து உண்டு.

9.6 நடைமுறையில் இருக்கும் சட்டங்கள், ஒழுங்கு விதிகள் அல்லது சுற்று நிருபங்கள் போன்றவை மாநிலத்திற்கு உரித்தாகிய காணி அதிகாரங்கள் தொடர்பில் முரணாக இருக்குமிடத்து அவை வலிதற்றவையாகும்.

9.7 மாநிலத்தினுள் உள்ள காணி ஒன்றை மத்திய நிரலில் உள்ள விடயம் ஒன்றிற்கு பயன்படுத்த மத்தி விரும்புமிடத்து, அதனை மத்திய அரசாங்கம் மாநிலத்திடம் கோரலாம். இது தொடர்பில் பிணக்கு ஏதும் இருப்பின் அப்பிணக்கானது மத்தியஸ்தத்திற்கு விடப்பட்டு இறுதியாக அரசியலமைப்பு நீதிமன்றினால் தீர்க்கப்படலாம்.

9.8 மத்திய நிரலில் உள்ள விடயம் ஒன்றிற்கு மாநிலத்தினால் காணி ஏதாவது வழங்கப்பட்டிருக்குமிடத்து மத்திய அரசாங்கம் அத்தேவைக்கு மாத்திரமே அதனைப் பயன்படுத்தலாம்.

## 10. உள்ளூராட்சி மன்றங்கள்

10.1 உள்ளூராட்சி சபைகளின் கட்டமைப்பு, அதிகாரங்கள், அமைவு போன்றவை தொடர்பில் மாநிலம் சட்டங்களை இயற்றும்.

10.2 அவ்வுள்ளூராட்சி சபைகள் குறிக்கப்பட்ட மாநிலத்திற்கு பொறுப்புக் கூற வேண்டும் என்பதுடன் அச்சபைகள் சட்டத்தின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட விடயங்களை செயற்படுதுவதுடன் அவ்விடயங்கள் தொடர்பில் குறிப்பிட்ட மாநிலத்தின் முகவராகவும் தொழிற்படும்.

10.3 உள்ளூராட்சி சபைகள் உட்பட நிர்வாக அலகுகளின் எல்லை நிர்ணயம் தொடர்பில் மாநிலங்கள் அதிகாரமுடையதாக இருக்கு

## 11. பொலிஸ், சட்டம் மற்றும் ஒழுங்கு

11.1 பொது ஒழுங்கு உள்ளிட்ட சட்டம் மற்றும் ஒழுங்கும் பொலிஸ் அதிகாரங்களும் மாநிலங்களின் அதிகாரங்களாக இருக்க வேண்டும். ஆயினும் கொழும்புத் தலை நகரப் பிராந்தியத்துக்கும் ஸ்ரீஜயவர்த்தனபுர கோட்டே உள்ளிட்ட அதன் சுற்றுப்புறங்களுக்குமாக மத்திக்கும் ஒதுக்கப்படலாம்.

11.2 ஒவ்வொரு மாநிலத்திலும் பொலிஸ் படையொன்று இருக்க வேண்டும் என்பதுடன் அது மாநிலத்துக்குள் பொது ஒழுங்கைப் பேணுவதற்கும் அத்தகைய குற்றங்களைத் தடுத்தல், கண்டுபிடித்தல் புலன் விசாரணை செய்தல் மற்றும் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களில் வழக்குரைத்தல் போன்ற செயற்பாடுகளுக்கும் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

11.3 பொலிசுக்குள் கரையோரப் பாதுகாப்பு பிரி வொன்று உருவாக்கப்படுவதுடன் குறித்த பிரிவானது மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், மீன்பிடி உரிமைகளை உறுதிப்படுத்தவும் கரையோர வளங்களைப் பாதுகாக்கவும் வேண்டும்.

11.4 மத்திய அரசுக்கான நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு எதிரான குற்றங்களை தடுத்தல், கண்டுபிடித்தல், புலன்விசாரணை செய்தல் மற்றும் வழக்குரைதல் போன்ற செயற்பாடுகளுக்கும் சர்வதேச குற்றங்கள் மற்றும் தலைநகரப் பிராந்தியத்தில் இடம்பெறும் குற்றங்கள் போன்றவற்றுக்கு பொறுப்பாக மத்திய புலனாய்வுத் திணைக்களமொன்று உருவாக்கப்படுதல் வேண்டும்.

11.5 ஒவ்வொரு மாநிலத்திலும் பொலிஸ் ஆணைக்குழுவொன்று உருவாக்கப்படுவதுடன் மத்திய அளவில் மத்திய பொலிஸ் ஆணைக்குழுவொன்றும் உருவாக்கப்படல் வேண்டும்.

11.6 மத்திய பொலிஸ் ஆணைக்குழுவிற்கான அங்கத்தவர்கள் அரசியலமைப்புச் சபையினால் நியமிக்கப்பட வேணடும். மாநில பொலிஸ் ஆணைக்குழுவிற்கான அங்கத்தவர்கள் மாநில நல்லாட்சிச் சபையினால் நியமிக்கப்பட வேண்டும்.

11.7 மாநில அரசுக்குள்ளாக ஒரு கடுமையான நிலை ஏற்படுகின்ற போது இராணுவத்தை நிலைநிறுத்த வேண்டி, குறித்த மாநில அரசின் முதலமைச்சர் மத்திய அரசின் ஜனாதிபதியின் தலையீட்டைக் கோரலாம். இரண்டு வாரங்களுக்கிடையில் மாநில சட்டவாக்க சபை குறித்த முடிவினை பலப்படுத்தாது விட்டால் முதலமைச்சரின் வேண்டுகோள் காலாவதியாகிவிடும்.

## 12. வெளியுறவுக் கொள்கை

12.1 வெளியுறவுக் கொள்கை மத்திய நிரலுக்குரிய விடயமாக இருக்கும். எப்படி இருப்பினும் மாநில நிரலுக்குரிய விடயம் ஒன்று வெளியுறவுக் கொள்கைத் தீர்மானத்திற்குரிய விடயமாக உள்ள போது, மாநில அரசின் அத்தியாவசிய நலன்கள் மற்றும் அதிகாரங்கள் தொடர்பிலான குறித்த விடயம் பற்றி வெளியுறவுக் கொள்கைத் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது மாநில அரசு அதில் பங்கெடுக்கும். மாநில அரசுகளின் அதிகாரங்கள் பற்றியதாக ஒரு விடயம் உள்ளபோது, மாநில அரசின் பங்களிப்பு காத்திரமானதாக இருத்தல் வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் மாநில அரசுகள் பொருத்தமான வகையில் சர்வதேச இணக்கப்பாடுகளில் பங்கெடுக்கும்.

12.2 வட-கிழக்கு மாநில அரசு தனது பொருளாதார, கல்வி, கலாசார நலன்களை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அரசுக்குரிய தூதுவராலயங்கள்/உயர்ஸ் தானிகராலயங்களில் தனக்கான ஒரு அலகினை ஏற்படுத்திக் கொள்வதற்கான உரித்தினைக் கொண்டிருக்கும்.

## 13. பொதுச் சேவை

13.1 பிரதம செயலாளர், முதலமைச்சரின் செயலாளர், அமைச்சர்களின் செயலாளர்கள் ஆகியோர் முதலமைச்சரினால் மாநில அமைச்சரவையின் ஆலோசனையுடன் நியமனம் செய்யப்படுவர்.

13.2 மாநிலத்தின் அதிகாரத்திற்குட்பட்ட விடயங்களை மேற்கொள்வதற்கு மாநில பொதுச் சேவைகள் ஒன்று ஏற்படுத்தப்படும்.

13.3 அரசியலமைப்பின் கீழ் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு பொதுச் சேவைகள் ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்படும். ஒவ்வொரு மாநில பொதுச் சேவைகளிற்கான ஆட்சேர்ப்பு, நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு, பதவி விலக்கல், ஒழுக்காற்று கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு இவ்வாணைக்குழு பொறுப்பாக இருக்கும். மாநில பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மாநில நல்லாட்சிக்கான அவையின் பரிந்துரையின் மீது முதலமைச்சரினால் நியமிக்கப்படுவர்.

13.4 மாநிலத்திற்குட்பட்ட கிராம சேவகர்கள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் ஆகியோரின் நியமனங்கள், இடமாற்றம், மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் என்பவற்றை மாநில பொதுச சேவைகள் ஆணைக்குழு கொண்டிருக்கும். மேற்குறித்த உத்தியோகத்தர்கள் பிரதம செயலாளர் அல்லது மாநில அரசாங்கத்தின் ஊடாக மத்திய அரசினால் ஒதுக்கப்பட்ட பல்வேறுபட்ட செயற்பாடுகளையும் மேற்கொள் வர்.

13.5 மத்திய பொதுச் சேவைகள் ஆணைக்குழு மத்திய அரசாங்கத்தின் செயற்பரப்பினுளடங்கும் மத்திய நிரலில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்தும்.

13.6 மத்திய பொதுச் சேவைகளிற்கான ஆட் சேர்ப்பு, நியமனம், இட மாற்றம், பதவி உயர்வு, பதவி விலக்கல், ஒழுக் காற்றுக் கட்டுபாடுகள் ஆகியவற்றிற்கு மத்திய பொதுச் சேவைகள் ஆணைக் குழு பொறுப்பாக இருக்கும். மத்திய பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அரசியலமைப்புச் சபையின பரிந்துரையின் மீது பிரதம மந்திரியால் நியமிக்கப்படுவர்.

## 14. ஆட்சேர்ப்புக் கொள்கை

14.1 மத்திய பொதுச் சேவைகளுக்கும் பாதுகாப்பு படைக்குமான ஆட்சேர்ப்பானது முழு நாட்டினதும் இன விகிதாசாரத்தினைப் பிரதிபலித்தல் வேண்டும்.

14.2 மாநில பொதுச் சேவைகளுக்கும் காவல் துறைக்குமான ஆட்சேர்ப்பானது அப்பிராந்திய இன விகிதாசாரத்தினைப் பிரதிபலித்தல் வேண்டும்.

## 15. கல்வி

15.1 கல்வி என்னும் விடயமானது மாநிலங்களுக்கு பாரப்படுத்தப்படல் வேண்டும். இது ஆரம்ப, இடைநிலை மற்றும் பல்கலைக்கழகங்கள் உள்ளடங்கலான மேல்நிலைக் கல்வி ஆகியவற்றையும் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் சார் கல்வி போன்றவற்றை வழங்கும் நிறுவகங்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

15.2 ஏதேனும் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வேறு ஏதேனும் மேல்நிலைக் கல்வி நிறுவகம் என்பனவற்றை ஆரம்பிப்பதோ அல்லது கொண்டு நடாத்துவதோ மாநிலங்களின் விடயப்பரப்புக் குள் அமைந்திருத்தல் வேண்டும்.

15.3 கல்வி நிறுவகங்களில் ஆளணியினரை வேலைக்கமர்த்தல் மற்றும் அவர்கள் மீதான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு போன்றவை மாநில கல்விச் சேவைகள்ஆணைக்குழுவின் கீழ் கொண்டு வரப்படுதல் வேண்டும். (தொடரும்)



இலங்கையின் 68 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்றுக் காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் ஆரம்பமானது. இதன்போது விருந்தினர்கள் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்துவரப்பட்டதும் 8.50 மணிக்கு தேசியக் கொடி ஏற்றப்பட்டது.தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன் உயிரிழந்தவர்களிற்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.இந் நிகழ்வில் பொலிஸ் மற்றும் இராணுவ உயரதிகாரிகள் மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட செயலக ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பொது மக்கள் என பெருமளவானோர் பங்கேற்றிருந்தனர். (படங்கள்:- மல்லாவி செய்தியாளர்)

### விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட

# 7,000 மெற்றிக் தொன் நெல் முல்லைத்தீவு களஞ்சியத்தில்

(மல்லாவி)

நெல்சந்தைப்படுத்தும் சபையினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்தாண்டு காலபோகம் சிறுபோகம் ஆகிய அறுவடையின் போது விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட 7 ஆயிரம் மெற்றிக் தொன்நெல் மாவட்டத்திலுள்ள 5 நெற் களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

ஆதலால் நடப்பாண்டில்அறுவடை செய்யப்பட்ட காலபோக நெல்லை கொள்வனவு செய்ய முடியாதுள்ளதாக நெல் சந்தைப்படுத்தும் சபையின் முல்லைத்தீவுமாவட்டத்திற்கானபொறுப்பதிகாரி கடந்த 25 ஆம் திகதி திங்கட்கிழமைநடைபெற்ற முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்திஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியூதீன், நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.கே. மஸ்தான், வைத்திய கலாநிதி எஸ். சிவமோகன் ஆகியோர் இணைத் தலைவர்களாக பங்கேற்றிருந்தனர்.

இதன்போது விவசாய பிரதிநிதிகளினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடப்பாண்டில் காலபோக அறுவடையின் போது அறுவடையாகும் நெல்லை அரசாங்கம் விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லையெனவும் இதனால் விவசாயிகள் தனியார் துறையினிடம் குறைந்த விலையில் நெல்லை விற்பனை செய்யும் அவலநிலை காணப்படுவதாகவும் தெரிவித்தபோது இணைத் தலைவர்களினால் நெல் சந்தைப்படுத்தும் சபை அதிகாரியிடம் இது தொடர்பில் வினா எழுப்பப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

நடப்பாண்டில் காலபோக நெற்செய்கையின் போது 10 ஆயிரம் மெற்றிக்தொன் நெல் அறுவடையாகும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இதனைக் கொள்வனவு செய்வதற்கான நிதியும் களஞ்சியப்படுத்துவதற்கான களஞ்சியசாலைகளும் எம்மிடம் தற்போது இல்லை என அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து இணைத் தலைவர்களில் ஒருவரான வர்த்தகவாணிப கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன்மாவட்டத்திலுள்ளபலநோக்கு கூட்டுறவு சங்கங்களினது களஞ்சிய சாலைகளை குறைந்த வாடகையில் நெல்லைக் களஞ்சியப்படுத்துவதற்கு பெற்றுக் கொள்ளுமாறும் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கான பணத்தை தாம் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் கலந்துரையாடி பெற்றுத் தருவதாகவும் வாக்குறுதி வழங்கினார்.

ஆயினும் இதுவரை முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசாங்கத்தினால் நெல் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லையென பாதிக்கப்பட்ட விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.(2-3-15)

# முல்லை.ஊர்சுற்றும் மரதனுக்கு பதிவு செய்யுமாறு அறிவுறுத்து

(குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்ட சகல பிரதேச செயலகங்களுக்கும் உட்பட்ட விளையாட்டு வீர. வீராங்கனைகளுக்கான ஊர்சுற்றும் மரதன் ஓட்டப்போட்டி நாளை சனிக்கிழமை நடைபெறும் என மாவட்ட விளையாட்டு பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் சகல பிரதேச செயலகங்களின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் வீர, வீராங்கனைகளுக்கான ஊர் கடந்து ஓடும் மரதன் ஓட்டப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலக முன்றலில் ஆரம்பமாகவுள்ளது.

ஆண்களுக்கான 12 கிலோ மீற்றர் மரதன் ஓட்டப்போட்டியும். பெண்களுக்கான 8 கிலோமீற்றர் மரதன் ஓட்டப்போட்டியும் இடம்பெறவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் முல்லைத்தீவு மாவட்ட வீர. வீராங்கனைகள் மாவட்ட செயலக விளையாட்டு உத்தியோகத்தர்களிடம் தமது பெயர்களை பதிவு செய்யவும்.

தவறவிடுபவர்கள் போட்டி ஆரம்பமாகும் முன்னர் போட்டி ஆரம்பமாகும் இடத்திற்கு வந்தும் தமது பெயர் விபரங்களை பதிவு செய்து போட்டியில் பங்கேற்க முடியும்.

வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவிதுள்ளார். (2-250)

# முன்பள்ளி வளாகத்தை துப்புரவு செய்து கற்றலுக்கான சூழலை ஏற்படுத்துக




(வற்றாப்பளை)

முல்லைத்தீவு முள்ளியவளை கிழக்கில் அமைந்துள்ள சரஸ்வதி முன்பள்ளி வளாகம், அதன் சிறுவர் விளையாட்டு முற்றம் என்பன பற்றைகள் சூழ்ந்து காணப்படுவதாகவும் அதனை துப்புரவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, நாளாந்தம் மேற்பார்வையாளர்கள்,முன்பள்ளி கல்வி அதிகாரிகள் எனப் பலதரப்பட்டோர் வருகை தந்து செல்லும் மேற்படி முன்பள்ளியில் காணப்படும் இக்குறைப்பாடானது எவரதும் கண்களில் படாது இருப்பது வேதனைக்குரிய விடயமென பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக முன்பள்ளி வளாகத்தை துப்புரவு செய்து சிறுவர்கள் மகிழ்வாக கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்கக்கூடிய சூழலை உருவாக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(2-310)

# பெரும் பீலி பாலத்திற்கு அருகில் குவிந்து கிடக்கும் கழிவுகள்



(வற்றாப்பளை)

முல்லைத்தீவு மூன்றாம் கட்டையூடாக வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு பயணிக்கின்ற பிரதான வீதியில் பெரும் பீலி பாலத்திற்கு அண்மையாக சில விசமிகளால் சூழலுக்கு பாதிப்பு ஏற்படக் கூடிய வகையில் கழிவுகள் கொட்டப்படுகின்றன.

இவ்வாறு குப்பைகளை கொட்டுபவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதோடு அக்குப்பைகளை அகற்றி குப்பைகளை கொட்டுவதற்கு என பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் கொட்டுவதற்கு கரைதுறைப்பற்று பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தினுள் பிரசித்தி பெற்ற தலங்களில் ஒன்றான வற்றாப்பளை அம்மன் ஆலயத்திற்குச் செல்லும் பிரதான வீதியிலேயே இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கை இடம்பெறுகின்றன.

அப் பிரதேசத்தைச் சுற்றிலும் விவசாய நிலங்கள் உள்ளதால் இக் குப்பைகள் காரணமாக விவசாய நிலங்களும் பாதிப்படையக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-3-310)




# பொதுக்கூட்டம்

(உருத்திரபுரம்)

உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் திருக்கோயில் பொதுக்கூட்டம் 12 வருடங்களின் பின் நாளை சனிக்கிழமை நடைபெறுமென நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

காலத்திற்குக் காலம் பலமுறை பொதுக்கூட்டம் கூட்டப்படுமென அறிவித்தும் பிற்போடப்பட்டு வந்த நிலையில் இப் பொதுக்கூட்டம் கோயில் நிர்வாகத்தாலும் புதிய தற்காலிக குழுவின் முயற்சியாலும் மேற்படி திகதியில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டம் கிளிநொச்சி உதவி அரச அதிபர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்திற்கு கோயில் உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றது. (2-3-298)

# ஏ-9 வீதியில் காணப்பட்ட மாடுகள் பொலிஸாரால் மடக்கிப் பிடிப்பு

## உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் சட்ட நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ-9 வீதியில் காணப்பட்ட கட்டாக்காலி மாடுகள் கடந்த 29 ஆம் திகதி கிளிநொச்சிப் பொலிஸாரினால்மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளன.

இரவு நேரங்களில் அதிகளவான மாடுகள் ஏ-9 வீதிகளிலும் வீதிக்குக் குறுக்காகவும் சென்று வீதியில் செல்லும் வாகனங்களுடன் அடிக்கடி மோதுண்டு விபத்துக்கள் நடைபெறுவதனால் இவ் வீதி விபத்துக்களைத் தவிர்க்கும் நோக்கில் கிளிநொச்சி மாவட்ட வீதிப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸாரால் ஏ-9 வீதியில் அலைந்து திரிந்த 5 மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளன.

பிடிக்கப்பட்ட 5 மாடுகளும் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன.

இதனையடுத்து மாடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளும் பொருட்டு பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-3-27)



முல்லைத்தீவு,கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நேற்றுக் காலை இலங்கையின் 68ஆவது சுதந்திரதின நிகழ்வு இடம்பெற்றபோது ... (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று வவுனியாவில் கறுப்புக்கொடி ஏந்தி உண்ணாவிரதம்



(குருமன்காடு)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் நேற்று கறுப்புக் கொடியேந்தி உண்ணா விரதப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒப்படைக்கப்பட்டு, கடத்தப்பட்டு, கைதுசெய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் உண்ணாவிரதப்போராட்டமானது வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெறும் என அறிவிக்கபப்ட்டிருந்தபோதிலும் வவுனியா நகரசபை நிர்வாகத்தினால் அனுமதி மறுக்கப்பட்டதையடுத்து நகர சபை வாயிலில் அமைக்கப்பட்டுள்ள பொங்குதமிழ் தூபிக்கு முன்பாக காணா மல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஒன்றுகூடி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்கள் வாயை கறுப் புத்துணியால் கட்டியவாறு கறுப்பு நிறக்கொடிகளையும் பதாதைகளையும் ஏந்தியவாறு குடும்ப சகிதமாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான இவ் உண்ணாவிரதப்போராட்டத்தில் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும், நாங்கள் எங்கள் சொந்த ஊருக்கு போக வழிவிடு, படித்தவனை நம்பினோம் படுகுழியில் தள்ளுகின்றான்,தமிழ் இனத்தை, இராணுவமே எமது காணிகளை விட்டு வெளியேறு என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் தாங்கியிருந்தனர்.

இப் போராட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்,வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எஸ். தியாகராசா,எஸ்.நடராஜா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-250-303)

## எமது உறவுகளை ஒப்படைக்காவிட்டால் குடும்பத்துடன் தற்கொலை செய்வோம்

### காணாமல் போனோரின் உறவுகள் முல்லையில் கதறல்

இலங்கையின் 68 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது காணாமல் போனோரின் உறவுகள் கறுப்புக் கொடிகள், பதாதைகள் மற்றும் காணாமல் போன தமது உறவுகளின் படங்களோடு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் முல்லைத்தீவு கச்சேரிக்கு அருகிலுள்ள மக்கள் வங்கிக்கு அருகில் ஒன்றுகூடிய பெற்றோர் உறவினர்கள் அவ்விடத்திலிருந்து கச்சேரி வரை ஊர்வலமாக சென்று கச்சேரிக்கு முன்பாக கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்



அங்கு கூடியிருந்த பெற்றோர் கருத்துத் தெரிவிக்கையில், ஏழு வருட காலமாக நாங்கள் கண்ணீர் வடிக்கின்றோம்.எங்களது கருத்துக்களை கேட்டு எங்களது பிள்ளைகளை உறவுகளை கண்டுபிடித்து தர யாரும் முன் வரவில்லை நல்லாட்சி அரசு கூட எமக்கு திருப்திகரமான பதிலெதனையும் வழங்கவில்லை. மாறாக எமக்கு நட்டஈடு பெறறுத் தருவதாக கூறிக் கொண்டிருக்கின்றனர் எமக்கு நட்டஈடு வேண்டாம் எமக்கு எமது உறவுகளே வேண்டும் எமது உறவுகளை எமக்கு ஒப்படைக்காவிட்டால் நாம் இந்த கச்சேரிக்குமுன்பாக வந்து குடும்பத்துடன் தற்கொலை செய்வோம்.

மகிந்தவின் மகன் கைத்து செய்யப்பட்டதற்கு மகன் எங்கு இருக்கிறார் என்று தெரிந்தும் கூட அந்த தாய் கண்ணீர் வடிக்கிறார்,அழுது புலம்புகிறார் அதற்கு பலர் ஆதரவு வழங்குகின்றனர். நாங்கள் ஏழு வருட காலமாக எமது பிள்ளைகள்,உறவுகள் எங்கு இருக்கிறார்கள் என்று கூட தெரியாது வீதி வீதியாக கிடந்து அழுது புலம்புகின்றோம். அரசாங்கம் கொண்டாட்டங்களில் ஈடுபடுகிறது.நாங்கள் வீதியில் கிடக்கிறோம்.தயவு செய்து இந்த நல்லாட்சி அரசு எமது பிள்ளைகளை, உறவுகளை எம்மிடம் கண்டுபிடித்து ஒப்படைக்க வேண்டும் என்று கூறினார்கள். (2-3-281)

## வவு.சிறைச்சாலையில் இருந்து 14 கைதிகள் நேற்று விடுதலை




இலங்கையின் 68 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து 14 பேர் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

காலை 9.30 மணியளவில் சிறைச்சாலையின் பொறுப பதிகாரி டபிள்யு.ஜி.ஏ. நிரஞ்சன் பெர்ணாந்துவினால் இக் கைதிகள் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

சிறு குற்றங்கள் மற்றும் அபராதம் செலுத்த முடியாமல் சிறையில் இருந்த 11 ஆண் சிறைக்கைதிகளும் 3 பெண் சிறைக்கைதிகளுமே விடுதலை செய்யப்பட்டிருந்தனர். (2-250)




## உரிமைகள் அனைத்தும் மறுக்கப்பட்ட நிலையில் சுதந்திர தினத்தை எவ்வாறு கொண்டாடமுடியும்

### கிளிநொச்சியில் ஒன்றுகூடிய மக்கள் கண்ணீருடன் கேள்வி



இலங்கையின் 68 ஆவது சுதந்திர தினத்தை துக்க தினமாக காணாமல் போனோரின் உறவுகள் கிளிநொச்சியில் கடைப்பிடித்துள்ளனர். கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக நேற்றுக்காலை காணாமல் போனோரின் உறவுகள் கறுப்புத் துணிகளைக் கட்டியவாறும், அரசாங்கத்துக்கு எதிரான சுலோகஙகளைத் தாங்கியவாறும், கோஷங்களை எழுப்பி காணாமல்போன தம் பிள்ளைகளின் நிலையை எண்ணி மிகவும் துயரமடைந்த நிலையில் கதறி அழுது தமது எதிர்ப்பினை வெளிக்காட்டியுள்ளனர்.

அங்கு கூடிய மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

சுதந்திரக் காற்றை வெறுமனே ஒரு நாட்டினுடைய பெரும்பான்மையினத்தவர் மட்டும் சுவாசிப்பதில்லை. அந்த நாட்டிலே வாழக்கூடிய அனைத்து இனமக்களும்சுதந்திரக்காற்றை சுவாசிக்க வேண்டும். ஆனால் இலங்கையில் முற்று முழுதாக அந்த உரிமைகள் மறுக்கப்பட்ட நிலை கடந்த 68 வருடங்களாக சுதந்திரத்துககாக ஏங்கி நிற்கும் தமிழ் மக்களாகிய நாங்கள் எவ்வாறு இந்த நாட்டின் சுதந்திர தின நிகழவுகளை கொண்டாட முடியும்.

அத்தோடு இதுவரை சரணடைந்த எம் பிள்ளைகளின் நிலை என்ன? எம் மக்களின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு அவர்களை கொன்று குவித்த ஒரு நாட்டின் சுதந்திர தினத்தை எவ்வாறு கொண்டாட முடியும் என இப் போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர். (2-281)

## வளவாளர் பதவிநிலை வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின்கீழுள்ளவவுனியா தெற்கு கல்வி வலயத்திலுள்ள மாகாண தகவல் தொழில் நுட்ப நிலையத்தில் காணப் படும் வளவாளர் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப் பங்களை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்இ.இரவீந்திரன்கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

வவுனியா மாகாண தகவல் தொழில்நுட்ப நிலையத்தின் மூன்று தொழில்நுட்ப வளவாளர் பதவி வெற்றிடங்களுக்கு வடக்கு மாகாணத்தில்கடமையாற்றுகின்றஇலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்ப பட்டதாரி அல்லது தகவல் தொழில் நுட்பத்தை ஒரு பாடமாகக் கொண்ட விஞ்ஞானமானி பட்டதாரி ஆகியோரிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளார்.

இதன்போது தகவல் தொழில் நுட்பத்தை பாடமாகக் கொண்ட விஞ்ஞான முதுமாணி பட்டத் தகைமை மேலதிக தகைமையாகக் கொள்ளப் படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் அல்லது தாம் கடமையாற்றுகின்ற பாடசாலைகளின் வலயக் கல்வி அலுவலகங்களில் விண் ணப் பப்படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி வலயக்கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் செயலாளர்,கல்வி அமை ச்சு, வடக்கு மாகாணம்,செம்மணி வீதி,நல்லூர்,யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 5மணிக்கு முன்பாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

## சிங்கராஜ ஆய்வு முகாமில் மாணவர்கள்,ஆசிரியர்கள் பங்கேற்பு

சி.சி.எச்.நிறுவனமானது (Centre For Children's Happiness(Gte) Ltd) வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் 'இயற்கை ஊக்குவிப்பு கழகத் தின்' ஊடாக பல்வேறு விதமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

இதனடிப்படையில் சி.சி. எச்.நிறுவனம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழக விலங்கியல் துறையின் இலங்கை களப்பறவையியல் குழு வுடன் இணைந்து பேராசிரியர் சரத் கொட்டகம தலைமையில் சிங்கராஜ ஆய்வுமுகாம் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 12ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஆய்வு முகாமில் மு/ஐயன்கன் குளம் அ.மி.த்.க.பாடசாலை மாணவர்கள்,ஆசிரியர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக நிகழ்ச்சி திட்டமுகாமையாளர் ஸ்ரீ. கஜேந்திரன் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களுக்கு 0772658002 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என அவர் கேட்டுள்ளார். (2)

# நல்லிணக்கத்துடன் செயற்படுவதாக அரசு வெளி உலகுக்கு காட்ட முயற்சி

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க தெரியாத இலங்கை அரசாங்கம் சாதாரணமாக தேசிய கீதத்தை தமிழில் பாடி தான் நல்லிணக்கத்துடன் செயற்படுவதாக உலகுக்கு காட்ட முயல்வதாக சம உரிமை இயக்கம் குற்றம் சுமத்தியுள்ளது. இது தொடர்பில் அவ்வியக்கத்தினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இம்முறை நடைபெற்ற சுதந்திர தின விழாவில் தேசிய கீதம் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் பாடப்பட்டு இருந்தது. நாட்டின் பெரும்பாலான மக்களின் சுதந்திரம் புதைக்கப்பட்டுள்ள நிலையில் சுதந்திர தினத்தை நினைவு கூருவது ஒரு புறம் கேலிக்கூத்தாகும். ஆகவே போலி சுதந்திர தினம தொடர்பில் கடுமையான விமர்சனம் எமக்கு உண்டு.

மேலும், தமிழ் மொழி பேசும் மக்கள் எதிர்கொண்டுள்ள தேசிய ஒடுக்குமுறையலிருந்து அவர்களை மீட்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது. யுத்தத்திற்குப் பின்பு சரிந்திருக்கும் வடக்கு மக்களின் வாழ்க்கையை மீளமைப்பதற்கும், அம்மக்கள் மத்தியில் உருவாகியுள்ள சந்தேகம்மற்றும்அவநம்பிக்கையை களைவதற்கும் எடுக்க வேணடிய ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுப்பதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது.

சகல அரசியல் கைதிகளினதும் விடுதலை, காணாமல் போன சகலரினதும் தகவல்களை வெளியிடுதல், மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட காணிகளை அவர்களிடம் மீள ஒப்படைத்தல் ஆகியன முக்கிய விடயங்களாக உள்ளன. என்றாலும், அந்த விடயங்கள் சம்பந்தமாக அரசாங்கம் ஊமையாகவே இருக்கின்றது. நிலைமை இப்படியிருக்க, தமிழ் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக அரசாங்கம் நல்லெண்ணத்துடன் செயற்படுவதாக நாட்டுக்கும் உலகுக்கும் காட்டும் நோக்கில் தேசிய கீதத்தை தமிழில் பாடியுள்ளது.

ஏற்கனவே குறிப்பிட்டவாறு, போலி சுதந்திர தினமும் அந்த தேசிய கீதமும் சம்பந்தமாக எமக்கு பல விமரசனங்கள் உள்ளன. ஆனால், அந்த தேசிய கீதத்தை தமிழில் பாடுவதை எதிர்க்கும், தனது இருப்பிற்காக இனவாதத்தை கையிலெடுத்த சில அரசியல்வாதிகள் ஊடக சந்திப்புக்களை நடத்தி பலவிதமான எதிர்ப்புகளை முன்வைக்கும் விதத்தை இந்நாட்களில் காண முடியும்.

ஒரே தேசிய கீதத்தை தமிழ் மொழியில் பாடும் உரிமையை ஏற்றுக் கொள்ள முடியாமல் உருவாகி வரும் இந்த இனவாதிகளின் எதிர்ப்பை நிபந்தனையின்றி தோற்கடிக்க வேண்டும். (இ)



இலங்கையின் 68 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்றைய தினம் நாடளவிய ரீதி யில் கொண்டாடப்பட்ட நிலை யில் வடமராட்சி பருத்தித்துறை நீதிமன்றத்திலும் நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன. பருத்தித்துறை மாவட்ட நீதி மன்ற நீதவான் பெ.சிவகுமார் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தேசிய கொடி ஏற் றப்பட்டு தேசிய கீதமும் இசை க்கப்பட்டது. (படங்கள்-கரணவாய் செய்தியாளர்)



யாழ்.வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக முதலாம் வருட கலைப்பிரிவு மாணவி செல்வி நே.பத்மலதாவுக்கு மடிக்கணனி ஒன்று அன்பளிப்பாக அண்மையில் வழங்கப்பட்ட போது... (படம்: மல்லாவிச் செய்தியாளர்)

# எலிசபெத் மகாராணி மைத்திரிக்கு வாழ்த்து

(கொழும்பு)

இலங்கை, தனது 68 ஆவது சுதந்திர தின நிகழ்வை கொண்டாடுவதற்கு இங்கிலாந்து நாட்டின் எலிசபெத் மகாராணி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில், "இலங்கை ஜனாதிபதிக்கு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதை எண்ணி பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இனிவரும் வருடங்களில் இலஙகை மக்கள் சந்தோஷமாகவும் அதிர்ஷ்டம் மிக்க ஆண்டாக இருப்பதற்கும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை, இலங்கை வாழ் மக்களுக்கு, 68ஆவது சுதந்திர தின நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்" என்று தெரிவித்துள்ளார். (இ)

# மைத்திரியின் செயற்பாடுகளுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும்


## பிரணாப் முகர்ஜி தெரிவிப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நோக்கத்துக்காக இந்தியா தொடர்ந்தும் ஆதரவு அளிக்கும் என இந்திய குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

இலங்கையின் 68 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு அனுப்பியுள்ள செய்தியிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இந்தியா இலங்கையின் நெருங்கிய அயல்நாடு என்றும் அவர் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

68ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் இலஙகை மக்களுக்கு தமது வாழ்த்துக்களை முகர்ஜி வெளியிட்டுள்ளார்.



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பல நூற்றாண்டு உறவு உள்ளது.

இந்தநிலையில் சிறிசேனவின் தலைமையின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு இந்தியா ஆதரவளிக்கும் என்றும் முகர்ஜி மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# மூங்கில் தோப்பில் விசமிகள் தீ வைப்பு



ஹற்றன் பொகவந்தலாவ பிரதான வீதியின் டிக்கோயா வனராஜா கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள மூங்கில் தோப்பிற்கு, நேற்று காலை இனந்தெரியாத நபர்களால்தீவைக்கப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரிவித்தனர்.

மூங்கில் தோப்பு தீயினால் எரிந்து பிரதான வீதியில் விழுந்ததன் காரணமாக அவ் வீதியினூடான போக்குவரத்து சுமார் ஒரு மணி நேரம் தடைப்பட்டிருந்ததாக, ஹற்றன் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பொலிஸ் பிரிவினர் தெரிவித்தனர்.

எனினும் பொலிஸாரும் பொது மக்களும் இணைந்து இந்த தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். அதன் பிறகு போக்குவரத்து வழமைக்கு திரும்பியுள்ளது.

இந்த தீ விபத்தினால் அந்த பகுதியில் அமைந்துள்ள தொலைபேசி கம்பத்திற்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கும் பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)



இலங்கையின் முதலாவது பிரதமர் டீ.எஸ். சேனநாயக்கவின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கும் நிகழ்வு நேற்று காலை சுதந்திர சதுக்கத்திலுள்ள அவரது உருவச் சிலைக்கு அருகில் இடம்பெற்றது.கொழும்பு மாநகர சபை மேயர் முஸம்மில் உருவச் சிலைக்கு முதலில் மலர்மாலை அணிவித்தார்.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன உட்பட வசந்த சேனாநாயக்க, ருக்மன்

# மரண அறிவித்தல்

## முருகேசு அப்புத்துரை

### (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் PWD)



மலேசியா கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும் பொன்னாலை வீதி மானிப்பாயில் வசித்தவருமாகிய முருகேசு அப்புத்துரை (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் PWD) 04.02.2016 வியாழக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு- பொண்ணு தம்பதியினரின் அன்பு மகனும் செல்லம் அவர்களின் அன்புக் கணவரும் சிறிதரன் (மகப்பேற்று மருத்துவ நிபுணர்- யாழ். போதனா வைத்தியசாலை), கெங்காதரன் (முகாமையாளர்- தேசிய சேமிப்பு வங்கி சாவகச்சேரி), புஸ்பவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் தயானந்தி (மருத்துவ பட்டப்பின் படிப்பு- கொழும்பு பல்கலைக்கழகம்), சந்திரவதனா (உதவி முகாமையாளர்- தேசிய சேமிப்பு வங்கி மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரியங்கன் (St. Peter's College, Colombo), சாரங்கன் (Royal College, Colombo), ஆரபி (Ladies College, Colombo), வைஷ்ணவி (வேம்படி மகளிர் கல்லூரி), தரன்ஜா (வேம்படி மகளிர் கல்லூரி), ரக்ஷனா (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான மாதவர், இரத்தினேஸ்வரி, பொன்னுத்துரை மற்றும் மாரிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பொன்னாலை வீதி மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (05.02.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச். செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொன்னாலை வீதி,
மானிப்பாய்.

**தகவல்:மகன்மார்**

Dr.அ.சிறிதரன் (071 683 1554)

அ.கெங்காதரன் (077 911 6301)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# குறைவான காபன் பொருளாதாரத்தின் வளர்ச்சியும் உயிர்ச் சுவட்டு எரிபொருள் யுகத்தின் முடிவும்

## பாரீஸ் மகாநாடு பற்றிய ஒரு பார்வை

இரு நூற்றாண்டுகளுக்கு மேலாகக் கட்டுப்பாடற்ற முறையில் இடம்பெற்று வந்த சுவட்டு எரிபொருள், குறிப்பாக நிலக்கரி, நிலநெய் ஆகியவற்றின் பயன்பாட்டினால் ஏற்பட்டுள்ள தாக்கங்களைக் குறைப்பதற்கு 1997 இல் மேற்கொள்ளப்பட்ட கியாட்டோ ஒப்பந்தம் போதுமானதாக இருக்கவில்லை. அத்துடன் தாழ்நிலங்களைக் கொண்ட நாடுகளும்பூகோள வெப்பமடைதலை இட்டு மிகக் கவலை கொண்டுள்ளன. சுவட்டு எரிபொருள் யுகம் முடிவடைந்து விட்டதை அரசாங்கங்கள் சுட்டிக்காட்டி பச்சைவீட்டு வாயுக்களின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான ஒப்பந்தத்தின் அவசியத்தை வலியுறுத்தி நின்றன.

பாரீஸ் நகருக்கு அருகிலுள்ள ஒரு மண்டபத்தில் இரு வாரங்களாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் 200 நாடுகள் பங்குகொண்டிருந்ததுடன் ஒரு சட்ட ரீதியான ஒப்பந்தத்திலும் கையொப்பமிட்டன. வெப்பநிலை உயர்வினை மட்டுப்படுத்தக்கூடிய பேரார்வமிக்க இலக்குகளை இந்நாடுகள் தீர்மானித்தன. இந்த இலக்குகளை அடைந்து கொள்வதைப் பொறுத்தவரையில் நாடுகளே இனிமேல் பொறுப்புக் கூறவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இந்த விடயம் சர்வதேச சந்தைகளுக்கு ஒரு வலுவான செய்தியை அனுப்பியது. சுவட்டு எரிபொருள் நிலையிலிருந்து விலகித் தெளிவான சக்தி வலுப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட விரைவானதொரு நிலை மாற்றம் நோக்கி நடைபோட இது வழிவகுத்ததாக அரசுகளும் தொழில் அதிபர்களும் தெரிவித்தனர்.

ஆறு ஆண்டுகளுக்கு முனனர் 2 பாகை செல்சியஸ் என ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம் தற்பொழுது 1.5 பாகை செல்சியஸ் ஆக இலக்கு வைககப்பட்டது. கோளின் எதிர்காலம் மற்றும் பூகோள வெளியேற்றங்கள் என்பவற்றைப் பொறுத்தவரையில் இந்த ஒப்பந்தம் எதனைக் கூறியது என்பது மிக முக்கியமானது. பிரான்ஸ் நாட்டு ஜனாதிபதி கொலன்டே (Francois Hollande) இந்த ஒப்பந்தத்தை முன்னெடுத்துச் செல்வதில் பல இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டார். இந்த முயற்சிற்காக ஏராளமான முதலீட்டைச் செய்தவர். உலக நாடுகள் புதிய வரலாற்றை உருவாக்குவதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம் இதுவென அவர் தெரிவித்தார். "நாங்கள் ஒரு மிக முக்கியமான காலப்பகுதியில் இப்பணியைச் செய்கின்றோம். அத்துடன் இப்பொழுது நாம் ஒரு சமனிலைப் படுத்தப்பட்ட ஓர் ஒப்பந்தத்தைத் தயாரித்துள்ளோம் என்று நான் திட்டவட்டமாக நம்புகிறேன்" என அவர் தெரிவித்தார். இந்த ஒப்பந்தம் ஐக்கிய நாடுகளைப் பொறுத்தவரை ஒரு பெரு வெற்றியாகும்.

ஐக்கிய நாடுகள் கடந்த நான்கு ஆண்டுகளாகப் பல தடைகளைக் கடக்க உதவி செய்தது. அரசியல் ரீதியான அக்கறையின்மையைத் தவிர்க்கப் பாடுபட்டது. செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்கும் இடையில் காணப்பட்ட வேறுபாடுகளைக் களைந்து இந்த ஒப்பந்தம் உருவாக வழிகோலியது. ஐக்கிய நாடுகளின் காலநிலைத்துறைத் தலைவர் 'கிறிஸ்டியானா பிகரஸ்' இந்தப் பேச்சுவார்த்தைக்கு வழிகாட்டியாக நினறு செயற்பட்டார். எம்மால் நிச்சயமாக முடியும் என்றே அவர் சொல்லி வந்தார். ஒப்பந்தம் நிறைவேறியதும் இன்று நாங்கள் இதனை செய்து காட்டி விட்டோம் எனத் தெரிவித்தார்.


அமெரிக்காவின் ஜனாதிபதி 'பராக் ஒபாமா' இந்த ஒப்பந்தத்தைப் போற்றிப் புகழ்ந்தார். கோளின் எதிர்காலத்தினை உறுதிப்படுத்த இது ஒரு முக்கியமான நடவடிக்கை என்று அவர் கூறினார். வலுவான கொள்கையுடன் கூடிய அமெரிக்கத் தலைமைத்துவத்திற்கு இது ஒரு வெற்றி என்றும், எமது கோளினைக் காப்பாற்றுவதற்கான ஒரு சிறந்த முயற்சியாக இந்த ஒப்பந்தம் அமைகின்றதென்றும் அவர் தெரிவித்தார். ஆனால் அவரது நோக்கில் இந்த ஒப்பந்தம் நிறைவானதல்ல. ஐரோப்பிய யூனியனின் காலநிலை ஆணையாளரான "மிகு வெல் அரியஸ்" என்பவர் "இந்த ஒப்பந்தமானது ஐக்கிய நாடுகளின் செயன்முறையின் மீது கொண்டுள்ள நம்பிக்கையை மீளுறுதிப்படுத்துகின்றது என்றும் ஐக்கிய நாடுகளின் செயன்முறைக்குக் கிடைத்த இறுதிச் சந்தர்ப்பம் இதுவே" எனவும் குறிப்பிட்டார்.

1977 ஆம் ஆண்டு செய்யப்பட்ட கியாட்டோ காலநிலை உடன்படிக்கையை (Kyoto Climate Treaty) தயாரிக்க உதவிய முன்னாள் அமெரிக்கத் துணை ஜனாதிபதி "அல் கோர்" (Algore) இம்மகாநாட்டு மண்டபத்தில் இருந்தார். அவர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் "இந்த உலகளாவிய ஒப்பந்தமானது அரசாங்கங்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் முக்கிய செய்தியை அனுப்பியுள்ளது. எமது உலக பொருளாதாரத்தின் உருநிலை மாற்றமானது அழுக்கான சக்தி வலுவிலிருந்து இயக்கப்பட்ட நிலைமையிலிருந்து மாறி இனிமேல் நிலைப்பேண் பொருளாதார வளர்ச்சியினால் தவிர்க்க முடியாத படி உறுதியாக இயக்கப்படவிருக்கின்றது" எனக் குறிப்பிட்டார்.

கொப்பனேகன் கால நிலை உச்சி மகாநாடு (Copenhagen Climate Summit) முடிவடைந்து ஆறு ஆண்டுகளின் பின்னர் இடம்பெற்ற தற்போதைய ஒப்பந்தம் பாரஸ ஒப்பந்தம் (Paris Agreement) எனப்படுகின்றது. இந்த ஒப்பந்தமானது செல்வந்த நாடுகளையும், எழுச்சியடைந்து வரும் நாடுகள் மற்றும் வறிய நாடுகளையும் வெளியேற்றங்களைக் கட்டுப்படுத்துவதில் ஒத்துழைத்துச் செயற்பட வைத்துள்ளது. செல்வந்த நாடுகள் 2020 ஆம் ஆண்டளவில் 100 பில்லியன் டொலர் நிதியமொன்றை உருவாக்கி வறிய நாடுகள் தமது பொருளாதாரங்களை மேம்படுத்துவதற்கு உதவ இணங்கியுள்ளன. ஒட்டுமொத்தமாக ஒப்பந்தமானது சட்ட ரீதியாக யாவரையும் கட்டுப்படுத்துகின்றது. ஆனால் சில அம்சங்களைப் பொறுத்தவரை உதாரணமாக தனிப்பட்ட நாடுகள் வெளியேற்றங்களை கட்டுப்படுத்துவதாகக் கூறும் உறுதி மொழிகள் மற்றும் காலநிலை நிதி அம்சங்கள் தொடர்பாகக் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை.

இந்த ஒப்பந்தமானது தொழிலதிபர்களுக்கு தெளிவான ஒரு செய்தியை வழங்குவதாக பாராட்டப்பட்டது. ஏறக்குறைய 13 றில்லியன் சொத்துகளை முகாமை செய்யும் வலைப்பின்னலைக் கொண்ட காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச முதலீட் டாளர் குழுவொன்று இது பற்றி கூறும் பொழுது "இந்த ஒப்ப ந்தத்தின் தீர்மானமானது சுவட்டுஎரிபொருளிலிருந்து புதுப்பிக்கக் கூடிய சக்தி வலுவை நோக்கி அதிகளவிலான முதலீடு கள் திசைதிரும்ப உதவும்" எனக் குறிப்பிட்டது. இந்த சர்வதேச குழு இவ்விடயம் பற்றித் தொடர்ந்தும் கூறும் போது "ஐரோப்பா முழுவதும் உள்ள முதலீட்டாளர்கள் உயர் காபன் சொத்துக் களிலிருந்து எழுகின்ற அபாயங்களை எதிர் கொள்ள அதிகளவான நம்பிக்கையைத் தற்பொழுது கொண்டுள்ளனர். அத்துடன் அவர்கள் குறைந்தளவான காபன மாற்றத்துக்கான சந்தர்ப்பங்களையும், வாய்ப்புக்களையும் நாடி நிற்கின்றனர். இந்த மாற்றமானது உலக சக்தி வலுமுறைமை, கட்டமைப்பு என்ப வற்றில் ஏற்கனவே ஒரு நிலையான மாற்றத்தை ஏற்படுத்தி இருககின்றது என இந்தக் குழு தெரிவித்தது. உலக வளங்கள் நிறுவனத்தின் சுற்றாடல் சிந்தனைக் குழுவைச் சேர்ந்த "ஜெனிபர் மோகன்" குறிப்பிடும் போது "நீண்ட கால இலக்கு என்பது நிலை மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதுடன்சந்தைகளின்இதயப் பகுதிக்கு முக்கிய செய்திகளை அனுப்புகின்றது."என அவர் தெரிவித்ததை இந்த முதலீட்டாளர் குழு சுட்டிக் காட்டியுள்ளது.(தொடரும்)

பேராசிரியர்
எஸ்.ஏ.நோர்பேட
புவியியல் துறை
கொழும்பு
பல்கலைக்கழகம்




## வாரத்திற்கு ஒரு புதிர்! 153

அண்மையில் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் தாக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் நுளம்பால் பரவும் வைரஸ் யாது?

புதிர் 153 இற்கான விடைகளை 15.02.2016 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கு.குணாளன்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர் (தகுதிகாண்)
மீன்பிடி விஞ்ஞானத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**புதிர் 152 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கே.உமாகாந்த்
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

**புதிர் 152க்கான கேள்வியும் விடையும்:**


தமிழ் நாட்காட்டியில் மாசி மாதத்திற்கான தமிழ்ப்பெயர் என்ன?
கும்பம்

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 153**

சரியான விடை:-..................................
முழுப்பெயர்:-..................................
முகவரி:-..................................
தொ.பே. இல:..................................
கையொப்பம்:..................................









இலங்கையின் 68 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம் கொழும்பு காலி முகத்திடலில் கோலாகலமாக நேற்று நடைபெற்றது. 68 ஆவது சுதந்திர தின நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க , அமைச்சர்கள், இராஜதந்திரிகள் மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உட்பட பலர் கலந்து கொண்டனர். சபாநாயகர் கரு ஜயசூரிய சம்பிரதாயபூர்வமாக நிகழ்வில் முதலில் கலந்து கொண்டார். இதனை தொடர்ந்து உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அரங்கிற்கு வருகை தந்தார். அதனைத தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுதந்திர தின நிகழ்விற்கு வருகை தந்தார். இதேவேளை எதிர்க்கட்சித் தலைவரும் த.தே.கூ. தலைவருமான இரா.சம்பந்தன் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.








இலங்கையின் 68ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் நேற்று காலை யாழ்.பொதுநூலக முன்றிலில் தேசிய கொடி ஏற்றப்பட்டு பொலிஸ் அணிவகுப்பு நடைபெற்றது. இதன் போது தேசிய கொடியை பிரதி பொலிஸ்மா அதிபர் பெரேரா ஏற்றி வைத்ததுடன் பொலிஸ் அணிவகுப்பு மரியாதையையும் பாரவையிட்டார். மேலும் இந்நிகழ்வினை உதவி பொலிஸ் அத்தியட்சகர் பியசிறி பெர்னாண்டோ உள்ளிட்டோர் நெறிப்படுத்தி இருந்தனர். இதேவேளை யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கீத்சிறி ஜெயலத் வழிகாட்டலில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பியசிறி பெர்னாண்டோ ஆலோசனைக்கு அமைய யாழ்.நகரப் பகுதியை அண்டிய பகுதிகள் மற்றும் பண்ணைக்கடற்கரையோர பிரதேசங்கள், வெற்றுக்காணிகளில் உள்ள குப்பைகள் பொலிஸாரினால் சிரமதானம் செய்யப்பட்டு எரியூட்டப்பட்டன. இச்சிரமதானத்தில் யாழ் .குற்றத்தடுப்பு பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம்.ஆர் சேனநாயக்க, சுற்றுச்சூழல் பொறுப்பதிகாரி உட்பட பொலிஸார் பலர் சிரமதான பணியில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்:-பொ.சோபிகா)

# சரக்கு கப்பல் கடலில் கவிழ்ந்தது



3,600 டன் மரத்தடிகள், கட்டுமான தளபாடங்களை ஏற்றிச்சென்ற 'மாடர்ன் எக்ஸ்பிரஸ்' என்ற சரக்கு கப்பல், ஸ்பெயின் நாட்டில் பில்பாவ் துறைமுகம் அருகே மோசமான வானிலை, கடல் கொந்தளிப்பு காரணமாக கவிழ்ந்ததை படத்தில் காணலாம். அதன் மாலுமிகள் பத்திரமாக வெளியேற்றப்பட்டு விட்டனர்.

# இந்தோனேசியாவில் 5.2ரிக்டரில் நிலநடுக்கம்; வீடுகள் இடிந்தன



இந்தோனேசியாவில் கிழக்கு பகுதியில் உள்ள திமோர் தீவில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் அங்குள்ள குபாங் நகரம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகள் குலுங்கின.

அதிகாலை 4.30 மணி அளவில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் உறக்கத்திலிருந்த மக்கள் பீதி அடைந்தனர். அச்சத்தில் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் ஓட்டம் பிடித்தனர்.

நிலநடுக்கம் காரணமாக வீடுகள் மற்றும் கட்டடங்கள் இடிந்தன. இதனால் ஏற்பட்ட உயிர்ச்சேதம் மற்றும் காயம் அடைந்தவர்கள் விவரம் வெளியிடப்படவில்லை.

அங்கு 5.2 ரிக்டரில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. வழக்கத்துக்கு அதிகமான உயரத்தில் கடல் அலைகள் எழும்பின. இருந்தும் சுனாமி எச்சரிக்கை எதுவும்விடப்பட வில்லை.

பொதுவாக இந்தோனேசியா பசிபிக் கடல் பிராந்தியத்தில் பூகம்ப ஆபத்து பகுதியில் உள்ளது. இதனால் இங்கு அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுகிறது. (இ)

### போர்க் கதாநாயகனாக பாராட்டப்பட்ட

# 10வயதுச்சிறுவன் சுட்டுப் படுகொலை



இராணுவத்தில் பணியாற்றி தங்களுக்கு எதிராக போராடிய பத்து வயது சிறுவனை தலிபான் தீவிர வாதிகள் சுட்டுக்கொன்றுள்ளனர்.

ஆப்கானிஸ்தானை சேர்ந்தவர் சிறுவன் வசில் அகமத். இவரது மாமா தலிபான் இயக்கத்தில் இருந்துள்ளார்.

பின்னர் தனது ஆதரவாளருடன் அரசு படையில் இணைந்து தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிராக தாக்குதலில் ஈடுபட்டுள்ளார்.

இந்த தாக்குதலில் வசில் அகமத்தின் தந்தை உள்ளிட்ட பலர் பலியாகினர். அவரது மாமாவும் காயமடைந்தார்.

இதையடுத்து அவரது படைக்கு தலைமை தாங்கிய அகமத் தலிபான் தீவிரவாதிகள் எதிராக சிறப்பாக போர் புரிந்துள்ளார்.

இதையடுத்து அவரை போர் கதாநாயகன் என்று இராணுவத்தினர் பாராட்டினர். பின்னர் அகமத் தனது பாடசாலை படிப்பை தொடர்ந்துள்ளார்.

இந்நிலையில் அகமத்தை தலையில் சுட்டுக்கொன்றுள்ளதாக தீவிர வாதிகள் தெரிவித்துள்ளனர்.

காய்கறி வாங்குவதற்காக தனது வீட்டில் இருந்து வெளியே வந்த அகமத்தின் தலையில் இரண்டு தோட்டாக்களை பிரயோகித்து அவர்கள் கொலை செய்துள்ளனர்.


இது குறித்து ஆப்கான் சுதந்திர மனித உரிமைகள் ஆணையத்தின் செய்தியாளர் ரஃபுல்லா பைடர் கூறியதாவது. போரில் சிறுவர்களை பயன்படுத்துவது தவறு.

ஆனால் இராணுவமும் தீவிர வாதிகளும் தொடர்ந்து அவர்களை பயன்படுத்தி வருகின்றனர்.

மேலும் அகமத்தை படையை தலைமை தாங்குவதற்கு அனுமதித்து மாகாண அரசு சட்டத்தை மீறியுள்ளது.

அதேவேளையில் வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்த பத்து வயது சிறுவனான அகமத்தை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றதுக்கும் அவர் கண்டனம் தெரிவித்துள்ளார். (இ)

# காணாமற்போனோரின் உறவுகள் மன்னாரில் கண்டன ஊர்வலம்





இலங்கையில் 68 ஆவது சுதந்திரதினமான நேற்று காணாமற் போன உறவினர்களை கண்டு பிடித்துத்தரக்கோரியும், விசாரணைகள் எதுவும் இன்றி சிறை வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரியும் மன்னாரில் கண்டன ஊர்வலம் இடம் பெற்றது.

மன்னார்பிரஜைகள்குழு, காணா மல் ஆக்கப்பட்ட குடும்ப உறவுகள் மற்றும் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனம் ஆகியன இணைந்து குறித்த கண்டன ஊர்வலத்தை மேற்கொண்டன. முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் இருந்துகாணாமல் போனவர்களின் உறவினர்கள் மற்றும் அரசியல் கைதிகளின் உறவினர்கள் ஊர்வலமாக மன்னார் பஸார்பகுதிக்குச் சென்றனர்.

இதன்போது கண்டன ஊர் வலத்தில் கலந்துகொண்டவர்கள் நாட்டுக்கு சுதந்திரம் எமக்கோ கண்ணீர் இனியும்வேண்டாம்; இந்ததுயரம், காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளின் உண்மை நிலை குறித்து அரசே எமக்கு பதில் சொல்க போன்ற வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு க்ண்டன ஊர் வலத்தில் கலந்து கொண்டனர்.

பின்னர் மன்னார் பஸார் பகுதியில் அமைக்கப்பட்ட தந்தை செல்வாவின் சிலைக்கு அருகாமையில் கூடி நின்று தமது கண்டனத்தை வெளிப்படுத்தினர்.

குறித்த கண்டன ஊர்வலத்தில் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இ.செபமாலை, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ்நிர்மலநாதன், மன்னார் சமாதான அமைப்பின் தலைவர் பீ.ஏ. அந்தோனிமார்க், இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணிச் செயலாளர் வி.எஸ். சிவகரன், மன்னார் நகரசபையின் முன்னாள் உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ், சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் ஏ.ஜான் சன்பிகிராடோ, மன்னார் திருமறைக்கலா மன்றத்தின் மாவட்ட இணைப்பாளர் ஏ.ரிமேகன் ராஜ் உட்பட காணமல் போனவர் களின் உறவினர்கள்என பலர்கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2-281)



இலங்கையின் 68 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வடமாகாண ஆளுநரின் அலுவலகத்தை சுற்றியுள்ள பகுதிகளில் நேற்றைய தினம் சிரமதானப் பணிகள் நடைபெற்றன. வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற இச் சிரமதானத்தில் ஆளுநரின் அலுவலகத்தைச் சுற்றியுள்ள பற்றைக் காணிகளை ஆளுநர் அலுவலகத்தில் உள்ள அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் இணைந்து குப்பைகளை அகற்றி எரியூட்டும் பணியில் ஈடுபட்டனர்.

# ஆயுதம் வைத்திருந்தார்; வாஸ் குணவர்த்தனவின் மனைவி மீது குற்றச்சாட்டு

துன்புறுத்தக்கூடிய ஆயுதம் வைத்திருந்தார் என முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தனவின் மனைவி சியாமளி பிரியதர்சனி பெரேரா மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கொழும்பு நீதவான் நீதிமன்றில் இது தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணைகளுக்காக எதிர்வரும் 17 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேலதிக நீதவான் நிசாந்த பீரிஸ், வாஸ் குணவர்தனவின் மனைவிக்கு உத்தரவிட்டுள்ளார்.

அழைப்பாணையை சந்தேக நபரின் கைகளில் நேரடியாக ஒப்படைக்குமாறு நீதவான் தெரிவித்துள்ளார். துன்புறுத்தக் கூடிய ஆயுதம் வைத்திருந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் தொடரப்பட்டுள்ள வழக்கில் வாஸ் குவணர்தன, அவரது மகன் உள்ளிட்ட மேலும் ஐந்து பேர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வாஸ் குணவர்தனவின் மனைவி இந்த வழக்கின் ஆறாம் பிரதிவாதி என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பிலான வழக்கு எதிர்வரும் 17 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (இ)

# இணையத்தளத்தை தடை செய்ய கோரும் மருத்துவ அதிகாரிகள் சம்மேளனம்

தமக்கு எதிரான கருத்துக்களை பரப்பிவரும் ஆங்கில இணையத்தளம் ஒன்றை தடைசெய்யுமாறு இலங்கை மருத்துவ அதிகாரிகள் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் சம்மேளனம், ஏற்கனவே பொலிஸ் மா அதிபரிடமும் இணைய குற்றப்பிரிவிடமும் முறைப்பாடுகளை செய்துள்ளதாக சம்மேளனத்தின் தலைவர் வைத்திய கலாநிதி அநுருத்த பாதெனிய தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சட்டவிரோத சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் தனிப்பட்ட வைத்தியர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் தமது சம்மேளனம் கருத்துக்களை கூறவில்லை என்று குற்றம் சுமத்தியே குறித்த இணையத்தளம் விமர்சனங்களை வெளியிட்டு வருகிறது.

எனினும் அந்த விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் ஊடக தத்துவ உரிமையை குறித்த இணையத்தளம் வழங்க மறுப்பதாகவும் பாதெனிய குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே இந்த இணையத்தளம் இலங்கையில் தடைசெய்யப்பட வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்லப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 120 | 120 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 50 | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 180 | 240 | 250 | 250 |
| தக்காளி | 60 | 60 | 50 | 80 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 40 | 40 | 40 |
| கோவா | 80 | 100 | 80 | 100 | 120 | 80 |
| கரட் | 250 | 200 | 160 | 220 | 400 | 200 |
| பூசணி | 50 | 60 | 55 | 60 | 80 | 50 |
| புடோல் | 60 | 60 | 50 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 45 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 75 | 100 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 60 | 100 | 50 | 80 | 70 | 70 |
| பாகற்காய் | 80 | 100 | 90 | 70 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 80 | 120 | 160 | 140 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | — | 80 | 80 | 70 |
| பயற்றங்காய் | 120 | 100 | 120 | 120 | 120 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 100 | 100 | 80 | 100 | 120 | 150 |
| கறிமிளகாய் | 250 | 300 | 160 | 240 | 280 | 200 |
| முருங்கைக்காய் | 1000 | 600 | 500 | 800 | 800 | — |
| போஞ்சி | 60 | 60 | 60 | 80 | 120 | 100 |
| க்த்தரிதம்புள்ள | 60 | — | 100 | — | 70 | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 10 | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 80 | 70 | 40 | 80 | 50 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 30-40 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 100 | 100 | 90-100 | 160 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 80 | 100 | 80 | 70 | 120 | 80 |
| முள்ளங்கி | 20 | 40 | 30 | 40 | 80 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 50 | — | — | 120 | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## பாலசிங்கம், சந்திரஹாசன் நாடு கடத்தப்பட்டனர் 97

....அவர்கள் நாடு கடத்தப்பட்டதால் தமிழ்நாட்டில் குடியேறியுள்ள ஒரு லட்சம் தமிழ் அகதிகள் இடையே பதற்ற நிலை நிலவுகிறது. தங்கள் எதிர்காலம் பற்றி நிச்சயமற்ற நிலை இருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள்.

அவர்கள் பயத்தைப் போக்க, நாடு கடத்தல் உத்தரவை இந்திய அரசு ரத்துச் செய்ய வேண்டும்.

அவர்கள் நலன் பாது காக்கப்படும் என்று உறுதிமொழி அளிக்க வேண்டும். அவர்களை நாடு கடத்தியது, இலங்கையில் வாழும் தமிழர்களுக்கும் அதிர்ச்சி அளித்துள்ளது.

இவ்வாறு அமிர்தலிங்கம் கூறினார்.

### கொந்தளிப்பு

இலங்கைப் பிரமுகர்கள் இந்தியாவில் இருந்து வெளியேற்றப்பட்டதற்குத் தமிழ்நாட்டில் எதிர்ப்பு எழுந்தது. நாடு கடத்தல் உத்தரவுக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்நாடு முழுவதும் மாணவர்கள் ரெயில் மறியல் போராட்டம் நடத்தினார்கள்.

### கருணாநிதி

இலங்கைத் தமிழர் தலைவர்களை மத்திய அரசு வெளியேற்றியது பற்றி ஆலோசனை நடத்த தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்பு (டெசோ) சார்பில், தி.மு.க தலைவர் கருணாநிதி தலைமையில் கூட்டம் நடந்தது.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:-

திம்பு நகரில் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும்போதே சிங்கள இராணுவத்தினர் திருகோணமலை, வவுனியா போன்ற பகுதிகளில் குண்டுமாரி பொழிந்து 500 இற்கும் மேற்பட்ட தமிழர்களைக் (குழந்தை குட்டிகள் உட்பட) கொன்று குவித்து பல கிராமங்களையே கொளுத்தி சாம்பல் மேடாக்கி விட்டனர்.

இந்தச் செயல் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு எதிரானது என்று கண்டிக்கவோ, உரிய நடவடிக்கை எடுத்திடவோ முன்வராத இந்திய அரசு, தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்துமாறு தமிழ் ஈழத் தலைவர்களை வற்புறுத்துகிறது.

இந்தச் சூழலில் இலங்கையில் இருந்து உரிமையுடன் தமிழ்நாட்டுக்கு வந்து புகலிடம் பெற்று- அதே சமயத்தில் இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கும் உரிய யோசனைகளை வழங்கிக்கொண்டிருந்தவர்களுமான பாலசிங்கம், சந்திரஹாசன், சத்தியேந்திரா ஆகியோரை நாடு கடத்தியதைக் கண்டித்துத் தமிழர் எழுச்சி பேரணி நடைபெறும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டிருந்தது.

இதன்படி 25.08.1985 அன்று பிற்பகல் 3 மணிக்குச் சென்னையில் பிரமாண்ட பேரணியும் பொதுக்கூட்டமும் நடைபெற்றன.

### ராஜீவ் காந்திக்குக் கோரிக்கை

பாலசிங்கம், சந்திரஹாசன் ஆகியோரை நாடு கடத்தியதால் ஏற்பட்ட பிரச்சினை குறித்துப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் பேச்சு நடத்த, அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரனை, முதலமைச்சர் எம்.ஜி.ஆர். டெல்லிக்கு அனுப்பி வைத்தார். அவர் டெல்லி சென்று நாடு கடத்தல் உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினார்.

இந்த நாடு கடத்தல் உத்தரவை வாபஸ் பெற்று அவர்கள் மீண்டும் இந்தியாவுக்குத திரும்பிவர அனுமதிக்க வேண்டும் என்று தமிழ்ப் போராளிகள் வற்புறுத்தினார்கள்.

இதற்காக அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் இணைச் செயலாளர் ப.சிதம்பரத்தை ஈழ தேசிய விடுதலை முன்னணி பிரதிநிதிகள் சந்தித்து தங்களது கோரிக்கையைப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் தெவிக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

இதன்பேரில் ப.சிதம்பரம் டெல்லியில் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசினார்.

இதன் பிறகு அவர்களிடம் ப.சிதம்பரம் கூறுகையில், நாடு கடத்தப்பட்ட இலங்கைத் தமிழர் பிரதிநிதிகளை இந்தியா திரும்ப அனுமதிக்குமாறு தமிழ்ப் போராளிக் குழு சார்பிலும் என் சார்பிலும் எடுத்துக் கூறினேன்.

இதுபற்றி தக்க நேரத்தில் பரிசீலிப்பதாக பிரதமர் கூறி இருக்கிறார் என்றார்.

பிரதமர் ராஜீவ் காந்தி மீது முழு நம்பிக்கை வைத்துள்ளோம்.

அவர் காட்டும் வழியில் நடப்போம் என்று இலங்கைத் தமிழ்ப்போராளிகள் தெரிவித்தனர்.

இ.காங்கிரஸ் எம்.பி.க்கள் குழுவும் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து பாலசிங்கம், சந்திரஹாசன் நாடு கடத்தப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் உள்ள நிலைமையை எடுத்துக் கூறினார்கள்.


நாடு கடத்தல் பிரச்சினையில் கடுமை காட்டாமல் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்வேன் என்று தூதுக்குழுவினரிடம் ராஜீவ் காந்தி தெரிவித்தார்.



(தொடரும்)

# இலங்கையைப் பொறுப்புக்கூற வைத்த பான் கீ மூனுக்கு கௌரவ கலாநிதி பட்டம்





ஐ.நா.பொதுச்செயலர் பான் கீ மூனுக்கு, பிரித்தானியாவில் புகழ்பெற்ற கேம்பிரிஜ் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளது.

2007ஆம் ஆண்டு தொடக்கம், ஐ.நா.பொதுச்செயலராக பணியாற்றியுள்ள காலத்தில்,

அவர் ஆற்றிய மனிதாபிமானப் பணிகள், பெண்கள் உரிமைக்கான ஆதரவு, உலக அமைதி மற்றும் பாதுகாப்புக்காக அளித்த பங்கு என்பனவற்றுக்காகவே ஐ.நா பொதுச்செயலருக்கு இந்த கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

இவரது காலத்தில், போரின் போது பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளை தடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அது தொடர்பான கண்காணிப்பை மேற்கொள்வதற்கு சிறப்பு அறிக்கையாளரும் நியமிக்கப்பட்டார்.

ஐ.நா அமைதிப்படை நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கான முயற்சிகளும் இவரது பதவிக் காலத்தில் முன்னெடுக்கப்பட்டன.

காசா, கினியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணைகளை முன்னெடுத்து அவை பற்றிய உயர்மட்ட கவனிப்புக்கு கொண்டு சென்றதன் மூலம், ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் பொறுப்புக்கூறலுக்கான அழுத்தங்களைக் கொடுத்திருந்தார் என்றும் கேம்பிரிஜ் பல்கலைக்கழகம் சுட்டிக்காட்டியுள்ளது.

கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஐ.நா பொதுச்செயலருக்கு இந்த கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது.

கேம்பிரிஜ் பல்கலைக்கழகம் கடந்த 500 ஆண்டுகளாக இந்த கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கி வருகிறது.

1493ஆம் ஆண்டில், கவிஞர் ஜோன் ஸ்கெல்டனுக்கு முதல்முதலாக இந்த கௌரவ பட்டம் அளிக்கப்பட்டதாக கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக பதிவுகள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பாக தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக மர்சுகி தருஸ்மன் தலைமையிலான நிபுணர் குழுவொன்றை ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் 2010ஆம் ஆண்டு நியமித்திருந்தார்.

அந்தக் குழுவின் அறிக்கையின் அடிப்படையிலேயே, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஊடாக இலங்கையில் இடம்பெற்ற மீறல்களுக்குப் பொறுப்புக்கூற வைக்கும் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டுடன் ஐ.நா பொதுச்செயலர் பதவியில் இருந்து பான் கீ மூன் ஓய்வு பெறவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# இன்று ஒரு தகவல்

## புத்துணர்ச்சி பெறுவது எப்படி?

திரும்பத் திரும்ப ஒரே மாதிரியான செயல்களைச் செய்து கொண்டிருப்பதுதான் புத்துணர்ச்சி இன்மைக்குக் காரணம்.

மற்றவர்களுடன் பழகும் முறைகளை மாற்றிப் பார்க்க வேண்டும்.பிரச்சினைகளை அணுகும் முறையில் சிலமாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். புதிய முறை பிடித்திருக்கிறதா,பலனளிக்கிறதா என்று அனுபவித்து அறிய வேண்டும்.

நம்மைக் கண்டு பொறாமைப்படும் கூட்டத்தில் வாழும் போது,அவர்களை விட நாம் உயர வேண்டும். நம்மாலும் சிறப்பாக வாழ முடியும் என்று அவர்களுக்குக் காண்பிக்க வேண்டும் என்றெல்லாம் எண்ணத் தோன்றும். இத்தகைய எண்ணங்களுக்கு உரமூட்டினால அவையே புத்துணர்ச்சியாக மலர்ந்து விடும். கடுமையாக உழைக்க வேண்டும் என்று மனவேகம் ஏற்படும்.

ஒவ்வொருவரும் புத்துணர்ச்சியைப் பெறுவதற்கு வெவ்வேறு வழியைப் பின்பற்றக் கூடும்.அவை என்னென்ன என்று பட்டியலிட்டால் அவை நீளும். அவரவரும் தத்தமது நிலையிலிருந்து புத்துணர்ச்சி பெறக் கூடிய வழிகளை எண்ணிப் பார்த்துச் செயற்பட வேண்டும்.

புதிதாகப் பல்வேறு விடயங்களைக் கற்றுக் கொள்ளும் முறை புத்துணர்ச்சியை அளிக்கக் கூடியதாக இருக்கும்.

அலுவலகம-வீடு: கடை-வீடு என்று செக்கு மாடுகள் மாதிரி செயற்படாமல்,மனத்திற்கு உற்சாகம் தரும் செயல்களில் இறங்க வேண்டும்.

பழைய நண்பர்களைச் சந்திக்கலாம்.பிடித்த நண்பர்களுடன் சுவாரஸ்யமான விடயங்களைப் பற்றி பேசலாம்.மிகப் பிடித்த மாணவர்களுடன் பிக்னிக் செல்லலாம்.அப்படிச் சென்று விட்டு வந்தால் வழக்கமான பணிகளை மேலும் ஒன்றரை மடங்கு உற்சாகமாகச் செய்ய முடியும்.

மனத்தைக் கெடுக்கும் புத்தகங்களையல்லாமல் உற்சாகத்தைக் கிழறக்கூடிய புத்தகங்களாகப் பார்த்து வாங்கிப் படிக்க வேண்டும்.அதிலும் சாதாரணமாகப் பிறந்து , வாழ்வில் உயர்ந்து மனிதர்களின் வரலாறும்,அவர்கள் படைப்புகளும் மிகுந்த பலனை அளிப்பனவாக இருக்கும்.படிப்பது என்பது பொழுது போக்கிற்காக மட்டுமல்ல:நம்மை நாமே உயர்த்திக் கொள்வதற்காகவும் அமைய வேண்டும்.

இப்படியெல்லாம் செய்து வந்தால் நம் மனம், ரீ சார்ச் செய்யப்பட்ட பற்றரியாக மட்டுமல்ல,புது பற்றரி போல் ஆகிவிடும்.

**லேனா தமிழ்வாணன்**

# துடிப்பான வெளியுறவுக் கொள்கைக்காக இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது

## அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் துடிப்பான வெளிநாட்டு கொள்கை ஒன்றை வகுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் இராஜதந்திர மற்றும் நட்புரிமையை நாடுகள் அனைத்துடன் ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை, அனைத்து நாடுகளுடனும் நட்புரீதியான உறவை தொன்றுதொட்டு பேணிவருகிறது.

இந்த நிலையில் மீண்டும் இலங்கை சர்வதேச சமூகத்துடன் இணைப்புடன் செயற்பட்டு இன்று அந்த சமூகத்தில் உரிய இடத்தையும் பெற்றுள்ளது.

இந்த நிலையிலேயே துடிப்பான வெளிநாட்டுக் கொள்கை ஒன்றுக்காக இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக மங்கள தெரிவித்தார்.

இதேவேளை வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் இலங்கையின் பொருளாதாரத்துக்கும் சமூக அபிவிருத் திக்கும் தமது பங்களிப்பை வழங்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் 68 ஆவது சுதந்திர தின நிகழ்வை முன்னிட்டு அவர் இந்த கருத்துகள், கோரிக்கைகள் அடங்கிய அறிக்கையை வெளியிட்டுள்ளார். (இ)

# பசில் ராஜபக்ஷவிடம் 6 மணிநேரம் விசாரணை

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவு நேற்று முன்தினம் புதன்கிழமை 6 மணித்தியாலங்களாக விஷேட விசாரணைகளை நடத்தியது.

சொத்துக்குவிப்பு உள்ளிட்ட மூன்று விடயங்கள் குறித்தும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியூடாக கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது உள்ளூராட்சி மன்றங்களுக்கு குழாய்கள் பகிர்ந்தளிக்கப்பட்டமை தொடர்பிலும் இதன் போது விசாரணை செய்யப்பட்டு விஷேட வாக்கு மூலம் பெறப்பட்டதாக பொலிஸ் தலைமையகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் முற்பகல் 10.10 மணிக்கு நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் உத்தரவுக்கு அமைய கோட்டையில்உள்ள அதன்தலைமை அலுவலகத்தில் பசில் ராஜபக்ஷ ஆஜரானார்.

இதனையடுத்து பசில்ராஜபக்ஷவிடம் முதலில் சொத்து குவிப்பு குறித்து விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

கம்பஹா ஒருதொட்ட பிரதேசத்தில் உள்ள இடமொன்று பசில் ராஜபக்ஷவினால் 30 மில்லியன் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டு அதில் 80 மில்லியன் ரூபா செலவில் கட்டடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

அத்துடன் மல்வானை பகுதியில் 17 ஏக்கர் காணியொன்று 64 மில்லியன் ரூபாவுக்கு பசில் ராஜபக்ஷவினால் கொள்வனவு செய்யப்பட்டு அதில் 120 மில்லியன் ரூபா செலவில் கடடடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாத்தளை புரவ்ன் ஹில் பகுதியில் 50 மில்லியன் ரூபா செலவில் ஒன்றரை ஏக்கர்நிலம்அவரால்கொளவனவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட முறைமை, அதற்கான முதலீட்டு மூலங்கள் அல்லது பணம் சம்பாதிக்கப்பட்ட மற்றும்செலவழிக்கப்பட்ட முறைமை ஆகியன தொடர்பிலேயே நேற்று முன்தினம் நீண்ட நேரம் விசாரணைகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் அந்த சொத்துக்களின் உரிமை தொடர்பிலும் வசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

இதனைத்தொடர்ந்து கடந்த ஜனாதிபதி தேர்தல் காலப்பகுதியில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியில் எடுக்கப்பட்ட 36 மில்லியன் ரூபாவால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு குழாய்கள் கொள்வனவு செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பிலும் வாக்கு மூலம் ஒன்று பதிவு செய்யப்பட்ட பின்னர் மாலை 4.15 மணியளவில் பசில் ராஜபக்ஷ நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவிலிருந்து வெளியேறிச் சென்றார். (இ)



# சிறுவர் அரங்கம்

1352

# கொக்கரக்கோ!



..."சரி? ஒருவேளை நாம் உயர்ந்த இடத்தில் ஏறி கூவினால் மயில் என் இருப்பிடத்தை அறிந்து, வந்து சேர்ந்துவிடாதா?" என்று யோசித்த சேவல், உயர்ந்ததொரு இடத்தின் மீது ஏறி நின்று "கொக்கரக்கோ" என்று ஒருமுறை கூவிவிட்டு, இறங்கி வந்தது.

சற்று நேரம் சென்றது. இன்னும் மயிலைக் காணவில்லை.

இன்னுமா கல்யாணம் முடிந்திருக்காது? ஒருவேளை பெரிய கல்யாணமாக இருக்குமோ?" என்று நினைத்த சேவல், சற்று நேரம் தன்னிடத்திற்கு வந்து கண்ணயர்ந்தது.

சேவல் உறங்க நினைத்தாலும், அடிக்கடி தன் அழகான வாலின் நினைவு வந்தது. கனவில் மயில் தன் வாலை இரவல் வாங்கிச் சென்றதே மீண்டும், மீண்டும் காட்சியாய் வந்தது. சேவலின் உறக்கம் கலைந்தது. அடிக்கடி சேவல் தன் இறக்கைகளை படபடவென அடித்துக் கொண்டது.

சேவலின் ஆர்ப்பாட்டத்தில் அருகில் உறங்கிக் கொண்டிருந்த கோழிகளும் விழித்துக் கொண்டன.

திடீரென்று கண்விழித்த சேவல், மீண்டும் உயர்ந்த இடத்திற்குச் சென்று, "கொக்கரக்கோ" என்று ஒருமுறை கூவியது.

சேவல் கூவியதைக் கேட்ட அப்பகுதி பறவைகளும், விலங்குகளும் கண்விழித்துக் கொண்டன.

சேவல் என்ன கூவியும் ஒரு பயனும் இல்லை. மயிலைக் காணவில்லை.

சேவலுக்கு ஒருபுறம் ஏமாற்றமாக இருந்தது. மற்றொரு புறம் மயிலின் மீது நம்பிக்கையும் இருந்தது. எப்படியும் மயில் தன் வாலைத் திரும்பக் கொண்டு வந்து தந்துவிடும் என்றே அது நம்பியது.

சேவலுக்கு உறக்கம் கண்களைச் சுழற்றியது. அது மீண்டும் தன் கூட்டிற்குள் வந்து படுத்துக் கொண்டது.

தன்னை அறியாமல் சற்றுநேரம் கண்ணயர்ந்து விட்டது சேவல். அதற்குள் கீழ்வானம் லேசாக வெளுக்கத் தொடங்கிவிட்டது.

சிறிது நேரத்தில் சேவலின் உறக்கம் முழுவதுமாக நீங்கி விட்டது. சேவல் கண் விழித்தது. ஒருவேளை மயில் திரும்பி வந்து தன் வாலை வைத்துவிட்டுச் சென்றிருக்கும் என்று நினைத்தது. ஆனால், மயில் திரும்பி வரவும் இல்லை. வாலைத் திரும்பக் கொண்டுவந்து தரவும் இல்லை.

மயில் சேவலிடம் வாலை இரவல் வாங்கியது திரும்பக் கொடுப்பதற்காக அல்லவே! அது நயவஞ்சகமாக சேவலை ஏமாற்றிவிட்டது. சேவலின் நீண்ட அழகான வாலைத் தான் அபகரித்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் அல்லவா இருந்தது.

சேவலிடம் வாலைப் பெற்ற மயில் அந்தக் காட்டைவிட்டு வெதுதூரம் சென்றுவிட்டது. சேவல் வரமுடியாத மலைப் பகுதிக்குச் சென்று தங்கி விட்டது.

மயிலின் துரோகத்தை சேவல் அறிந்து கொள்ளவில்லை. மயிலை கூவி அழைத்தால் வழிதவறிப் போன மயில் எப்படியேனும் திரும்பி வந்து தன் வாலைத் தந்துவிடும் என்று நம்பிய சேவல், மீண்டும் உயரமான இடத்திற்குச் சென்று பெருங் குரலெழுப்பிக் கூவியது...

"கொக்கரக்கோ.."

ஆனால், மயில் திரும்பி வரவேயில்லை. காலங்கள் கடந்துவிட்டது.

சேவலிடம் பெற்ற அழகான வாலுடன் மயில், தான் வசித்த இடத்தில் ஒய்யாரமாய் நடை போட்டது. தன் அழகான தோகையைப் பற்றி பிறரிடம் பெருமை பேசிக் கொண்டது.

சேவலோ... பாவம்! மயிலின் வார்த்தையை இன்னமும் நம்பிக் கொண்டிருக்கிறது. எப்படியும் மயில் திரும்பி வந்து தன் அழகான வாலைத் தந்துவிடும் என்ற எண்ணத்தில் ஒவ்வொரு நாள் பொழுது விடியும் போதும், உயரமான இடத்தில் ஏறி நின்று "கொக்கரக்கோ" என்று கூவிக் கூவி மயிலை அழைத்துக் கொண்டிருக்கிறது.

(முற்றும்)

## 02.2016 05 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1597 - ஜப்பானின் ஆரம்பகால கிறிஸ்தவர்கள் பலர் ஜப்பானின் புதிய அரசால் ஜப்பானிய சமுகத்திற்குக் கெடுதலாக இருப்பதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1649 - ஸ்கொட்லாந்து இரண்டாம் சார்ல்சை அந்நாட்டின் மன்னனாக நாட்டில் இல்லாத நிலையில் அங்கீகரித்தது.
- 1778 -தென் கரொலைனா அமெரிக்க கூட்டமைப்பு அரசியலமைப்பை ஏற்றுக்கொண்ட முதலாவது மாநிலமானது.
- 1782 - ஸ்பானியர் பிரித்தானியப் படைகளைத் தோற் கடித்து மினோர்க்கா தீவைக் கைப் பற்றினர்.
- 1852 - உருசியாவின் சென் பீட்டர்ஸ்பேர்க் நகரில் ஏர்மிட்டேச் அருங்காட்சியகம் பொது மக்களுககுத் திறந்துவிடப்பட்டது.
- 1885 - பெல்ஜிய மன்னன் இரண்டாம் லியோபோல்ட் கொங்கோவைத் தனது தனிப்பட்ட பிரதேசமாக ஆக்கினான்.
- 1900 - பனாமா கால்வாய் தொடர்பாக ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஐக்கிய இராச்சியத்துக்குமிடையில் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1917 -மெக்சிக்கோவின் தற்போதைய கூட்டாட்சி அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 1922 - ரீடர்ஸ் டைஜஸ்ட் மாதிகை முதலாவது இதழ் வெளியிடப்பட்டது.
- 1958 - ஐக்கிய அமெரிக்காவின் ஜோர்ஜியாவில் சவா ன்னா கரைகளில் அமெரிக்க வான் படையினரால் ஐதரசன் குண்டு ஒன்று காணாமல் போனது. இதுவரையில் இது கண்டுபிடிக்கப்பட வில்லை.
- 1958 -ஐக்கிய அரபுக் குடியரசின் முதலாவது அரசுத் தலைவராக கமல் அப்துல் நாசர் நியமிக்கப்பட்டார்.
- 1960 - ரஷ்ய மக்கள் நட்புறவுப் பல்கலைக்கழகம் மாஸ கோவில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1971 - அப்பல்லோ 14 விண்கலம் அலன் ஷெப்பர்ட், எட்கார் மிட்ச்செல் ஆகியோருடன் சந்திரனில் தரையிறங்கியது.


### பிறப்புகள

- 1914 - அலன் ஹொட்ஜ்கீன், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1998)
- 1915 - ராபர்ட் ஹொஃப்ஸ்டாட்டர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1990)

### இறப்புகள்

- **1898 - எம். சி. சித்திலெப்பை, ஈழத்துத் தமிழ் அறிஞர (பி. 1838)**
- 1999 - வசீலி லியோன்டியெஃப், நோபல் பரிசு பெற்ற ரஷ்யப் பொருளியலாளர (பி. 1906)
- 2008 - மகேஷ் யோகி, இந்திய ஆன்மிகக் குரு (பி.1917)

## முகம்மது காசிம் சித்திலெப்பை



முகம்மது காசிம் சித்திலெப்பை, 1833ம் ஆண்டில் இந்நாட்டின் முதல் முஸ்லிம் வழக்கறிஞரான முகம்மது லெப்பையின் மகனாக 1838 ஜூன் 11 இல் கண்டியில் பிறந்தார.

இவர் மரைக்காயர் நவீன உரை நடை இலககியத்தில் முன்னோடிப் படைப்பாளிகளில் முக்கியமானவர். அவரது இயற்பெயர் முகம்மது காசிம். இலங்கை முஸ்லிம்களைக் குறிப் பாகக் கல்வித்துறையில் விழிப்புணர்ச்சியடையச் செய்ய அரும்பாடுபட்ட ஈழத்து எழுத்தாளர். மறுமலர்ச்சித் தந்தை என அழைகக பபடுபவர. பாடசாலைகளை நிறுவியும், பாடநூல்களை எழுதியும் செயலாற்றினார். ஈழத்தின் முதலாவது தமிழ் நாவலான *அசன்பே சரித்திரம* என்ற நாவலை எழுதியவர். இவர் ஈழ இஸ்லாமியர்களின் உரிமைக்காக வாதாடும் *முஸ்லிம் நேசன* என்ற இதழை நடத்தியவர். இவர் சட்டவல்லுனரும், பத்திரிகையாளரும், கல்வியாளரும், சமூக சேவையாளரும் ஆவார். 1864ம் ஆண்டில் உயர் நீதிமன்ற வழக்கறிஞராக உயர் நியமனம் பெற்ற சமகாலத்தில் பிரசித்த நொத்தாரிசாகவும் பணிபுரிந்த இவரால் எழுதப்பட்ட காணி உறுதிகள் பல இன்றும் பலரிடம் உள்ளதாக அறியமுடிகிறது. இவர் தமது பிற்கால வாழ்க்கை முழுவதையும் தமது சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும், முன்னேற்றத்திற்கும் செலவிட்டார்.


இலங்கை சட்ட நிர்ணய சபையில் முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவம் இருத்தல் அவசியமென்று இடையறாது வன்மையாகப் போராடினார். இதன் பயனாக 1889 ஆம் ஆண்டில் இஸ்லாமியர் இருவர் நியமன உறுப்பினராக அங்கத்துவம் பெற்றனர். இலங்கை முஸ்லிம்களின் நன்மைக்கான எந்தச் சட்டத்தையும் முழு மூச்சுடன் ஆதரித்து வந்தார். முஸ்லிம் விவாகப் பதிவுச் சட்டத்தை பழமை விரும்பிகள் எதிர்த்த போது சித்திலெப்பை வரவேற்றார். அத்துடன் இது விடயத்தில் தமது முழு ஆதரவையும் அரசாங்கத்திற்கு நல்கினார்.

# பொன்சேகாவுக்கு எம்.பி. பதவி எதற்காக வழங்கப்படுகின்றது?

## கோத்தபாய கேள்வி

**(கொழும்பு)**

**இடது வலது எனக் கூறிக்கொண்டு கட்டளையிடுவதற்கு மேலதிகமான இயலுமை இருப்பதன் காரணத்தினாலா, முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்கப் போகின்றனர் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.**



கோத்தபாயவுக்கு இடது வலது எனக் கூறி இராணுவத்திற்கு கட்டளையிடும் இயலுமை மாத்திரமே இருப்பதாகவும் அவருக்கு அரசியல் பார்வையில்லை என அமைச்சர் ஒருவர் கூறியிருந்தமை குறித்து கருத்து வெளியிடும் போதே முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் இதனை தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா என்பவர் கடந்த தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டவர், அவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்குவது தனக்கு பிரச்சினையல்ல எனவும் அது அரசியல் கட்சிகள் எடுக்கும் முடிவு எனவும் கோத்தபாய தெரிவித்தார்.

மல்வத்து மற்றும் அஸ்கிரிய மாநாயக்க தேரர்களை நேற்று முன்தினம் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்ட பின்னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

முழு இலங்கையிலும் வெறும் 28 ஆயிரம் வாக்குகளை மாத்திரம் பெற்றுக்கொண்ட பொன்சேகாவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்குவதில் கட்சிக்கு பிரச்சினையில்லை என்றால், எமக்கும் பிரச்சினையில்லை.

இராணுவத்தில் இருந்த கோத்தபாயவுக்கு இடது வலது மாத்திரமே தெரியும் எனக் கூறியவர்களுக்கு பொன்சேகாவுக்கு அதனைவிட வேறு பல விடயங்கள் தெரியும் என நம்புகின்றனர்.

புதிய அரசியல் கட்சி ஒன்றின் தேவை வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு தற்போது ஏற்பட்டுள்ளது. அவ்வாறான கட்சி உருவாகினால், முழுமையான உதவியை வழங்குவேன்.

கட்சியினால், நாட்டுக்கு நடக்க வேண்டியது நடக்காவிட்டால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் எனக் கூறிக் கொள்வதில் பயனில்லை. தலைவர்கள் மக்கள் மத்தியில இருந்தே உருவாக வேண்டும்.

1977ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு 8 ஆசனங்களுக்கு மேல் இருந்த போதும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ் கட்சிக்கு வழங்கப்பட்டது.

அன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்க்கட்சியாக செயற்பட்டது. இப்படியான நிலைமை தற்போது அந்த கட்சிக்கு இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக பெயரளவில் செயற்பட்டாலும் எதிர்க் கட்சியின் நிலைப்பாட்டை அவர்கள் நாட்டில் பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை.

ஜனநாயக நாட்டில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற இரண்டு தரப்பு இருக்க வேண்டும். இவ்வாறான பின்னணிக்குள் புதிய அரசியல் கட்சி ஒன்றின் தேவை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது யாரை கைது செய்ய வேண்டும். யாருக்கு வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்பதை அரசியல்வாதிகளும் சிவில் அமைப்புகளுமே முடிவு செய்கின்றன.

சட்டமா அதிபரோ, பொலிஸாரோ எந்த விடயம் தொடர்பிலும் வழக்கு தாக்கல் செய்யும் அதிகாரம் இல்லை என்று கூறும் போது, இல்லை, இல்லை ராஜபக்ஷவினரை கைது செய்ய வேண்டும் எனக் கூறுவதன் மூலம் இது நல்லாட்சியா என்ற கேள்வி எழுகிறது.

செப்டெம்பர் 11 தாக்குதலுக்கு பின்னர், அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் பயங்கரவாதத்திற்கு எதிராக முன்னெடுத்த போரில் நடந்தவை பற்றி, எம்மீது மனித உரிமை மீறல் குற்றங்களை சுமத்துவோருக்கு மறந்து போயுள்ளது.


வெள்ளை வான்களில் ஆட்களை கடத்தியதாக எம்மீது குற்றம் சுமத்தும் அமெரிக்கா உலக முழுவதும் விமானங்களில் ஆட்களை கடத்தியது எனவும் கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 624

ராகுலன்




அபிசாயினி




கம்சாயினி




றுக்சினா



ராஜசேகரம்






சீலன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சாள்ஸ் அன்ரனியும் யோஷித ராஜபக்ஷவும்









பிரபாகரன் ஒரு ஆயதப் போராட்ட இயக்கத்தின் தலைவராக இருந்த போதிலும் அவர் தனது சொந்தச் சமூகத்திற்கு துரோகம் இழைக்க ஒருபோதும் நினைக்கவில்லை.

பிரபாகரனின் அர்ப்பணிப்பு மனோநிலைக்கு மாறாக, மகிந்தவின் போலித்தனமான தேசப்பற்று எவ்வாறு அமைந்துள்ளது என்பதை யோஷித மீதான ஆணைக்குழுவின் விசாரணை சுட்டிநிற்கிறது.

டிசெம்பர் 2006 இல் இலங்கை கடற்படையில் இணைந்து கொண்ட மகிந்த ராஜபக்ஷவின் மகனான யோஷித ராஜபக்ஷ கடந்த பத்தாண்டில் எவ்வாறான பதிவுகளைக் கொண்டுள்ளார் என்பதை இங்கு பார்க்கலாம்.

யோஷித கடற்படையில் இணைந்த போது, ஏனைய உலகத் தலைவர்கள் போலல்லாது தான் தனது மகனை இந்த நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் யுத்தத்தில் பங்கெடுக்க ஒப்படைத்துள்ளேன் என மகிந்த பெருமையுடன் அறிவித்தார். மகிந்தவின் இந்த அறிவிப்பின் பின்னர் பௌத்த மகா சங்கம் மகிந்தவை உண்மையான நாட்டுப்பற்றாளர் எனக் கௌரவப்படுத்தியது.

மகிந்த தனது மகனைக் கடற்படையில் இணைத்த போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகனான சாள்ஸ் அன்ரனி ஏற்கனவே இலங்கைப் படைகளுக்கு எதிராக வன்னிக் காடுகளில் இடம் பெற்ற யுத்தத்தில் பங்கு கொண்டிருந்தார்.

நோர்வே அனுசரணையுடன் இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முன்னெடுப்புக்கள் முறிந்த பின்னர், மகிந்த ராஜபக்ஷவால் ஆரம்பிக்கப்பட்ட 'செய் அல்லது செத்து மடி' என்கின்ற யுத்தத்தில் பிரபாகரன் தனது மகனையும் பங்கேற்க வைத்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் வான் தாக்குதல் நடவடிக்கைகளை சாள்ஸ் அன்ரனி பொறுப்பெடுத்து நடத்தியதாக கூறப்பட்டது.

கே.பி என அறியப்படும் குமரன் பத்மநாதனின் அண்மைய கூற்றின் பிரகாரம், தனது அப்பா, அம்மா, சகோதரி மற்றும் இளைய சகோதரன் ஆகியோரை பாதுகாப்பாக வெளிநாடொன்றுக்கு அனுப்பி வைக்குமாறு கே.பியிடம் சாள்ஸ் அன்ரனி கோரியிருந்தார். சாள்ஸ் அன்ரனி தனது தந்தையான பிரபாகரனிடம் வடக்கை விட்டு வெளியேறி பாதுகாப்பாக வெளிநாட்டிற்குச் செல்லுமாறு மீண்டும் மீண்டும் கோரிக்கை விடுத்த போதும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அதற்கு செவி சாய்க்கவில்லை என கே.பியிடம் சாள்ஸ் அன்ரனி முன்னர் தெரிவித்திருந்தார்.

எனினும், போர் இடம் பெற்ற போது யுத்த களத்திலிருந்து தப்பிச் செல்லாது தனது மகனுடன் இணைந்து போரின் தோல்வியை எதிர்கொள்ள வேண்டும் என்கின்ற பிரபாகரனின் உறுதிப்பாடானது அவர் தனது அமைப்பிற்காகச் செய்த மிகப்பாரிய அர்ப்பணிப்பாகும். இறுதியில், போரில் கொல்லப்பட்ட சாள்ஸ் அன்ரனியின் உடலம் இராணுவத்தால் கண்டெடுக்கப்பட்டது.

இதற்கு மாறாக, மகிந்த தனது அரசியல் நலன்களைப் பெற்றுக்கொள்வதற்காகவே யோஷிதவை கடற்படையில் இணைத்திருந்தார். யோஷித இந்த நாட்டைப் பாதுகாப்பதற்காகத் தன்னை ஒருபோதும் யுத்தத்தில் அர்ப்பணிக்கவில்லை. போர்க் காலத்தில் யோஷித என்ன செய்தார் என்பது எவருக்கும் தெரியாது. போர் வலயத்திற்குள் யோஷித காலடி எடுத்து வைத்தாரா என்பதற்கான எவ்வித சமிக்ஞையும் இல்லை.

மைத்திரி-ரணில் அரசாங்கம் இந்த நாட்டைப் பொறுப்பெடுத்த பின்னர், போர்க் காலத்தில் யோஷித என்ன செய்தார் என்பதை விசாரணை செய்வதற்கான மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

பிரபாகரன் ஒரு ஆயுதப் போராட்ட இயக்கத் தலைவராக இருந்த போதிலும் அவர் தனது சொந்தச் சமூகத்திற்கு துரோகம் இழைக்க ஒருபோதும் நினைக்கவில்லை. பிரபாகரனின் அர்ப்பணிப்பு மனோநிலைக்கு மாறாக, மகிந்தவின் போலித்தனமான தேசப்பற்று எவ்வாறு அமைந்துள்ளது என்பதை யோஷித மீதான ஆணைக் குழுவின் விசாரணை சுட்டிநிற்கிறது.

இலங்கை கடற்படையில் இணைவதற்கான சட்ட ஒழுங்கு விதிகளை மீறி, மகிந்த ராஜபக்ஷவின் மகனான யோஷித ராஜபக்ஷ உக்ரேய்ன் அரசாங்கத்தின் சுய ஆதரவு வெளிநாட்டு வர்த்தக மற்றும் முதலீட்டு நிறுவனமான Ukrinmarsh இன் நிதி ஆதரவுடன் 13 மாத பயிற்சியைப் பெற்றிருந்தார். இது மட்டுமல்லாது, மருத்துவ சார் முனைவர் பட்டத்தைப் பெறுதல் உட்பட மூன்று வெவ்வேறு துறை சார் பயிற்சி நெறிகளையும் யோஷித பெற்றிருந்தமை ஆணைக்குழுவின் விசாரணையின் இறுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாறான துறைசார் பயிற்சிகளை யோஷித பெற்றுக் கொள்வதற்கு, ரஸ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவரும் மகிந்த ராஜபக்ஷவின் சொந்த மைத்துனருமான உதயங்க வீரதுங்கவே காரணம் எனவும் அறியப்பட்டது. வீரதுங்க ஏற்கனவே விசாரணைக்ட்படுத்தப்பட்டு தற்போது தலைமறைவாக உள்ளார்.

ரஷய ஆதரவு கிளர்ச்சிக் குழுக்களுக்கு ஆயுதங்களை விற்பனை செய்ததாக உக்ரேய்ன் அரசாங்கத்தால் குற்றம் சுமத்தப்பட்ட வீரதுங்க, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனும் அவரது சகோதரரான முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுடனும் நெருங்கிய தொடர்பைப் பேணியிருந்தார் என்பதை இவ்வாறான சில சம்பவங்கள் சான்று பகர்கின்றன.

மைத்திரி-ரணில் அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர், யோஷித ராஜபக்ஷ தொடர்பாக விசாரணை செய்வதற்காக மூன்று உறுப்பினர்களைக் கொண்ட சபை ஒன்றை கடற்படைத் துணைத் தளபதி ஜெயந்த பெரேரா நியமனம் செய்தார். இந்த ஆணைக்குழு ஜனவரி 2015 தொடக்கம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படுகிறது.

யோஷித மீதான விசாரணைக் குழுவில் றியர் அட்மிரல் டி.டபிள்யு.பி. வெட்டேவ, கொமடோர் யு.எஸ்.ஆர்.பெரேரா மற்றும் கொமடோர் எம்.எம்.வி.பி. மெடேகொட ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இவர்களது விசாரணை அறிக்கையின் முடிவுகள் அதிர்ச்சியளிக்கின்றன.

மூன்று உறுப்பினர்களைக் கொண்ட விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரகாரம், யோஷித ராஜபக்ஷ கடற்படையில் இணைந்த பின்னர் கடற்படையின் ஒழுக்க விதிகள் மற்றும் பிரமாணங்கள், விதிகள் போன்றவற்றை மீறிச் செயற்பட்டுள்ளார் என்பது தெளிவாகிறது. கடற்படையில் இணைவதற்கான கோவை விதிகள் கூட யோஷித கடற்படையில் இணைக்கப்பட்ட போது மீறப்பட்டுள்ளது. (தொடரும்)

**மொழியாக்கம்**
**நித்தியபாரதி**

# சர்வதேச நாடுகளில் படைகளுக்கு பயிற்சி

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

**உலகின் முன்னேறிய நாடுகளில் கிடைக்கும் புதிய தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொள்ளும் வகையில், முப்படையினருக்கும் மேலதிக பயிற்சிகளை அனைத்துலக மட்டத்தில், பெற்றுக் கொடுபபதற்கான வாய்ப்புகளை தமது அரசாங்கம் கண்டறியும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**



திருகோணமலை கடற்படைப் பயிற்சிக்கல்லூரியில பயிற்சியை முடித்த 81 அதிகாரிகள், பயிற்சியை முடித்து வெளியேறும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

திருகோணமலைக் கடற்படைத்தளத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பயிற்சியை முடித்து வெளியேறும் கடற்படை அதிகாரிகளின் அணிவகுப்பைப் பார்வையிட்ட ஜனாதிபதி பயிற்சியில் திறமையாகச் செயற்பட்ட ஐந்து அதிகாரிகளுக்கு வாள்களையும் பரிசளித்தார்.

இதையடுத்து அங்கு உரையாற்றிய ஜனாதிபதி

“தீவு நாடு என்ற வகையில் கடற்படை எமக்கு மிகவும் முக்கியமானது.

கடற்படையை வலுப்படுததுவதற்கு, முன்னைய அரசாங்கங்களும், தற்போதைய அரசாங்கமும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கின றன.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இந்த நடவடிக்கை அவசியமானது.

விடுதலைப் புலிகளின் தீவிரவாதத்தை தோற்கடிப்பதில் கடற்படை முக்கிய பங்காற்றியிருந்தது” என்றும் அவர் தெரிவித்தார். (இ)

# நிதிமோசடி விசாரணைப்பிரிவை உடனடியாக கலைக்க வேண்டும்

## ஹிஸ்புல்லாஹ் வலியுறுத்து

நிதி மோசடி விசாரணைப் பிரிவு என்பது தேவையற்ற ஒன்றாகும் என்பதுடன் சட்ட விரோதமான அந்நிறுவனம் உடனடியாக நீக்கப்பட வேணடும் என மீள்குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு இராஜாங்க அமைச்சர் எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

குறிப்பிட்ட சிலரை இலக்காக கொண்டு இயங்கி வரும நிதி மோசடி விசாரணை பிரிவு (எவ்.சி.ஐ.டி) சட்ட விரோதமான ஒன்றாகும்.

நாடாளுமன்றத்தினால் அங்கீகாரம் வழங்கியுள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மற்றும் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு என்பன நிறுவப்பட்டு செயற்பாட்டில் உள்ளன.


இந்நிலையில் எவ்.சி.ஐ.டி என்பது அவசியமற்றதாகும். யாரேனும் ஊழல், மோசடி செய்திருப்பாராயின் அதற்கு இலங்கை சட்டதிட்டங்களுக்கு அமைவாக நீதிமன்றத்தின் மூலம் தண்டனை பெற்றுக் கொடுக்க வேணடும்.

மாறாக ஒரு நிறுவனம் தன்னிச்சையாக குறிப்பிட்ட சிலரை பழிவாங்கும் வகையில் செயலாற்றுவது மிகவும் மோசமான ஒன்றாகும் எனத் தெரிவித்தார். (இ)

# நல்லாட்சியால் புதிய அரசியல் அமைப்பு அறிமுகப்படுத்தப்படுமென நம்புகிறேன்

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

நல்லாட்சியின் கீழ் ஜனநாயக மரபுகளுக்கும், அடிப்படை மனித உரிமைகளுக்கும் மதிப்பளிக்கும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் முயற்சியின் பயனாக உத்தேச புதிய அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்படும் என தாம் நம்புவதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.



இந்த சுதந்திர தினத்தின் போது இதனையே மக்கள் எதிர்பார்ப்பதாகவும் அவர் விடுத்துள்ள சுதந்திர தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளுக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் ஹக்கீம் சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஹக்கீம் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவித்ததாவது,

கொடூர யுத்தமும், கொடுங்கோல் ஆட்சியும் முடிவுக்கு வந்த பின்னர் நாட்டில் நல்லாட்சி நிலவும் வேளையில், இலங்கையின் 68ஆவது சுதந்திர தினம் சகல இன மக்களாலும் மிகவும் மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடப்படுகின்றது.

இன ரீதியாகவும், சமய ரீதியாகவும், மொழி ரீதியாகவும் நாட்டு மக்களை வேறுபடுத்தி நோக்கிய அப்போதைய ஆட்சியாளர்கள் மண்கவ்வியுள்ள சூழ்நிலையில், இவ்வாறு எல்லா இன மக்களும் ஒற்றுமைப்பட்டு தேசிய அரசாங்கத்தின் கீழ் சுதந்திர தினத்தை வரவேற்பது சாலப் பொருத்தமானது.

நாட்டுக்கு புதிய அரசியலமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கான அபிப்பிராயங்களைத் திரட்டுவதற்கான முன்னெடுப்புகள் பல்வேறு மட்டங்களிலும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதை சகித்துக் கொள்ள முடியாத தீய சக்திகளின் தந்திரோபாயங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய காலம் வந்துவிட்டது என்பதை சுதந்திர தினத்தின் போது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள உற்சாகம் நன்கு எடுத்துக் காட்டுகின்றது என மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# செய்தித் துளிகள்

## உள்ளூராட்சி தேர்தல்களை வலியுறுத்தி அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல்

மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களின் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் நேற்று உயர்நீதி மன்றத்தில்அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்தனர்.

உள்ளூராட்சிசபைகளின தேர்தல்களை உடனடியாக நடத்தவேண்டும் என்று கோரி இந்த மனுவை 18 பேர் தாக்கல் செய்துள்ளனர்.

மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களின் உள்ளூராட்சிசபைகளின் ஆயுட்காலம்முடிவடைந்து விட்டன.

எனவே அவற்றுக்கு தேரதல்கள் நடத்தப்பட வேண்டும் என்று மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

இம் மனுவில் அவர்கள் தேர்தல்கள் ஆணையாளர் உட்பட 24 பேரை பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளனர். (இ)

## மாலபே தனியார் பல்கலையில் அமைச்சர்களின் உறவினர்கள்

மாலபேயில் அமைந்துள்ள இலங்கையின் தனியார் பல்கலைக்கழகத்தில் அமைச்சர் ராஜித சேனாரத்னவின் மருமகள் மாத்திரமல்ல, பல அமைச்சர்களின மகள்மாரும் மருமகள் மாரும் கல்விகற்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலபே தனியார் பல்கலைக்கழகத்தின் தலைவர் நெவில் பெர்னாண்டோ இதனை தெரிவித்துள்ளார்.

இந்த பல்கலைக்கழகத்தில் குறைந்த கல்வி தகைமைகளை கொண்டவர்கள் கல்வி பயில்வதாக கூறப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில் கருத்துரைத்துள்ள அவர், பல்கலைக்கழகத்தில் சிறந்த பெறுபேறுகளை கொண்டவர்கள் கல்வி பயில்வதாக தெரிவித்தார்.

உயர்தரத்தில் 3 ஏ சித்தி பெற்றவர்களும் இங்கு கல்வி பயில்வதாக அவர் தெரிவித்துள்ளார். (இ)

## இயற்கை நீர்வீழ்ச்சி அமைந்துள்ள வனப்பகுதியில் திடீரென தீப்பரவல்

திம்புள்ளபத்தனைபொலிஸ பிரிவிற்குட்பட்ட இயற்கை நீர்வீழ்ச்சி அமைந்துள்ள டெவோன் வனப்பகுதியில் நேற்று முன்தினம் திடீரென ஏற்பட்ட தீப்பரவலில் சுமார் 10 ஏக்கர் வரை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் குறித்த தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீப்பரவல் ஏற்பட்டுள்ள பகுதியில் இயற்கை நீர்வீழ்ச்சியான டெவோன் நீர்வீழ்ச்சி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

திம்புள்ள பத்தனை பொலிஸாரும் பொது மக் களும் பெரும் சிரமத்திற்கு மத்தியில் தீயை கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர.

இந்த தீ விபத்து சம்பந்தமான மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## நுளம்புச்சுருள் வாசத்தால் சிக்கிய போதைப்பொருள் விற்பனையாளர்

நுளம்பு சுருள் வாசத்தை மோப்பம் பிடித்து சென்ற அம்பலாங்கொட பொலிஸார், பிரதேசத்தில் பாரியளவில்ஹெரோயின்போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த நபரை கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். பாறை ஒன்றுக்கு அருகில் எப்படி நுளம்பு சுருள் வாசம் வீசும் என்பதை அறிய சென்ற போதே இந்த நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பலாங்கொட பிரதேசத்தில் அண்மையில் 20 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார் அவரிடம்விசாரணை நடத்திய போது மற்றுமொரு சந்தேக நபர் பற்றிய தகவல் தெரியவந்துள்ளது. நேற்று முன்தினம் அந்த நபரே கைது செய்யபபட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## இராணுவப் புலனாய்வாளர்களின் பிணை மனு மன்றால் ஒத்திவைப்பு

பிரபல சிங்கள ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள இராணுவப் புலனாய்வாளர்களின் பிணை மனு பிற்போடப்பட்டுள்ளது.

பிரகீத் எக்னெலிகொட கடத்தல் தொடர்பாக தற்போதைக்கு லெப்டினன் கேணல் தர அதிகாரிகள் உள்ளிட்ட ஆறு இராணுவப புலனாய்வாளர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிரான வழக்கு ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றது. பல தடவைகள் இவர்களுக்கு பிணைவழங்குமாறுகோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் நீதிபதி ரங்க திசாநாயக்க அபேசிங்க பிணை வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளார். (இ)

# தமிழ் சினிமா வரலாறு

92

## கீற்றுக் கொட்டகையில் தயாரான நாம் இருவர் மகத்தான வெற்றி

**ஸ்டுடியோ தயார்!**

எந்தக் கதையை படமாகத் தயாரிக்கலாம் என்று யோசித்தார், ஏவி.எம்.

**நாம் இருவர்**

அப்போது சென்னை ஒற்றைவாடைத்தியேட்டரில் நாம் இருவர் என்ற சமூக நாடகத்தை என்.எஸ்.கே. நாடக சபையினர் நடத்தி வந்தனர். பிற்காலத்தில் பெரிய டைரக்டராக உருவான ப.நீலகண்டன் எழுதிய கதை இது. அந்த நாடகத்தைப் பார்த்த ஏவி.எம். அதையே படமாகத் தயாரிக்கத் தீர்மானித்தார்.

அப்போது ப.நீலகண்டன், புதுக்கோட்டையில் ஒருமாதப் பத்திரிகையை நடத்திக்கொண்டிருந்தார். அவரை அழைத்துப் பேசினார் ஏவி.எம்.

நாம் இருவர் கதையைப் படமாக்க விரும்புகிறேன். என்ன சொல்கிறீர்கள்? என்று ஏவி.எம். கேட்க, அதற்கு மகிழ்ச்சியுடன் சம்மதம் தெரிவித்தார், ப.நீலகண்டன்.


அந்தக் கதைக்காக உங்களுக்கு எவ்வளவு வேண்டும்? என்று ஏவி.எம். கேட்டார். மூவாயிரம் கொடுங்கள் என்று சொன்னார் நீலகண்டன்.

உடனடியாக மூவாயிரம் ரூபாய் கொடுத்து உரிமையை வாங்கினார். ஏவி.எம்.அத்துடன் துணை டைரக்ட் பொறுப்பையும் கொடுத்தார்.

நாம் இருவர் நாடகத்தை சினிமாவுக்கு ஏற்றபடி மாற்றி எழுதினார் ப.நீலகண்டன்.

**பாரதியார் பாடல்கள்**

நாம் இருவர் படத்தில் பாரதியார் பாடல்களை இடம் பெறச்செய்ய



ஏவி.எம்.விரும்பினார்.

அப்போது கிராமபோன் ரெக்கார்ட் கம்பெனியை நடத்தி வந்த சுராஜ்மல் அண்டு சன்ஸ் என்ற நிறுவனம், பாரதியார் பாடல்களை இசைத் தட்டுகளாக வெளியிட விரும்பி, பாரதியார் பாடல்க்ளின் உரிமையை 600 ரூபாய்கது வாங்கி வைத்திருந்தனர். ஆனால், கிராம போன் ரெக்கார்ட் கம்பெனியையே அவர்கள் மூடி விட்டனர். பாரதியார் பாடல் உரிமை மட்டும் அவர்களிடமே இருந்தது.

சுராஜ்மல் கம்பெனி அதிபரை ஏவி.எம். சந்தித்துப் பேசினார். இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ரூபாய்க்கு பாரதியாரிடம் பாடல் உரிமையை வாங்கிவிடலாம் என்று ஏவி.எம்.நினைத்தார். ஆனால் பத்தாயிரம் ரூபாய் தந்தால்தான் உரிமையைக்கொடுப்பேன் என்றார் சுராஜ்மல் முதலாளி.

ஏவி.எம். உடனடியாக 10 ஆயிரம் ரூபா கொடுத்து உரிமையை வாங்கி விட்டார்.

**மீண்டும் மகாலிங்கம்**


நாம் இருவர் நாடகத்தில் எஸ்.வி.சகஸ்ரநாமம் நடித்த வேடத்தில் சினிமாவில் டி.ஆர்.மகாலிங்கம் நடித்தார். கதாநாயகி டி.ஏ.ஜெயலட்சுமி.

நாடகத்தில் நடித்து வந்த வி.கே.ராமசாமி, இந்தப் படத்தின் மூலம் தான் சினிமாவுக்கு அறிமுகம் ஆனார். அப்போது அவருக்கு சுமார் 20 வயதுதான் இருக்கும். பெரிய மீசையுடன், கள்ள மார்க்கெட் வியாபாரியாக (டி.ஏ.ஜெயலட்சுமியின் தந்தையாக) பிரமாதமாக நடித்தார்.

*(தொடரும்)*

# தற்கால சர்வதேச அரசியல் பொருளாதார நோக்கு

....அதாவது இந்து நாடு இந்தியாவென்றும் இஸ்லாமிய நாடு பாகிஸ்தான் என்றும் பிரிவே இருக்கக் கூடாது என்றும் வலியுறுத்தினர். ஆனால் பாகிஸ்தானிய தேச தந்தையாக கருதப்பட்ட தலைவர் முகமது அலி ஜின்னா தான் முஸ்லீம்களுக்கு ஒரு நாடு, இந்துகளுக்கு ஒருநாடு என்று கூறி வந்தார். இப்பொழுது இந்தியாவில் மோடியின் வெற்றியுடன் இந்தியா இந்து நாடாக இன்று மாறியுள்ளது. இன்று பாகிஸ்தானியர்கள் தமது விருப்பப்படி இஸ்லாமிய நாடாகவும், இந்தியா இந்து நாடாகவும் மாறி, ஜின்னா விருப்பப்பட்ட அந்த மாதிரி அமைப்பை, மோடி இட்டு நிரப்பியிருக்கிறார்" என்றும் குறிப்பிட்டிருந்தார்.



அமர்தியா சென்னின் அதே பேட்டியில் இந்தியா மதசார்பற்ற நாடாக இருப்பதாக கொண்ட சிந்தனையை மோடியால் மாற்ற முடியாது. ஆனால் பாகிஸ்தான் மத சார்புடைய நாடாகவே இருக்கும் சிந்தனையைக் கொண்டது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இந்தியாவின் வளர்ச்சியும் அமெரிக்க இராணுவ தொழில் நுட்ப, இராஜதந்திர பலமும் தெற்காசியாவின் பல நாடுகளை சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களை உருவாக்கி வருகிறது. சென் அவர்களின் கூற்றுக்கு இணங்க ஆரம்பத்திலிருந்தே இந்திய-பாகிஸ்தானிய போட்டி நிலையை தமது பூகோள நலன்களின் தேவைக்கு ஏற்ப இன்றும் ழத வடிவிலான ஒருபார்வை மேலை நாடுகளால் நகர்த்தப்படுகிறது.

இந்த நகர்வு அதீத போட்டி மனப்பாங்கை ஒருபகுதிக்கும் அதீத அதிகார நிலையை மறுபகுதிக்கும் உள்ளார்ந்த நிலையில் உருவாக்குவதில் கரிசனை காட்டப்படுகிறது. போட்டி மனநிலை கொண்ட பாகிஸ்தான், இந்தியாவுக்கு நிகரான கேந்திர முக்கியத்துவத்தை தனது வளர்ச்சிக்கு உறுதுணையாக கொண்டு செயற்பட்டு வருகிறது.

சீன- பாகிஸ்தானிய பொருளாதார பாதை ( China-Pakistan Economic Corridor (CPEC) என்ற, இதுவரை காலத்திலும் சீனா முதலீடு செய்திராத மிகப்பெரிய 46 பில்லியன் டொலர் பெறுமதியான ஒப்பந்தம் ஒன்றை பாகிஸ்தான், சீன அரசுடன் செய்து கொண்டுள்ளதை இந்திய- பாகிஸ்தான் போட்டி நிலைக்கு மிகச்சிறந்த உதாரணமாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

பிராந்திய அளவிலும் உலகப் பரப்பிலும் மேற்கின் கடல் போக்குவரத்தில் அதிகாரம் செலுத்தும் நீண்டகால பண்பை மாற்றியமைக்கும் சக்தியாக உள்ள இந்த CPEC ஒப்பந்தம் ஆட்டம்-மாற்றீட்டு சக்தி கொண்டதாக அமையும் என்ற பரப்புரை பரவலாக உள்ளது. வெறும் அதிவேக வீதி அமைக்கும் ஒப்பந்தமாக அல்லாது போக்குவரத்துடன் தொலைதொடர்பு, சக்திவள கட்டமைப்பு ஆகியவற்றையும் உள்ளடக்கிய 3000 கிலோ மீட்டர் நீளமான திட்டமாக இருப்பதால் பாகிஸ்தானிய பொருளாதார வளர்ச்சியில் பெரு மாற்றத்தை கொண்டு வரும் என எதிர் பார்க்கப்படுகிறது.

தனது உள்நாட்டு பொருளாதாரத்தில் சுழற்சியை ஏற்படுத்தும் குறிக்கோள் கொண்ட"ஒரு சூழல் ஒரு பாதை" திட்டத்தின் கீழ், சீன வட-மேற்கு பிராந்தியமான Xinjiang - Uygur Autonomous Region- Kashgar எனும் பகுதியிலிருந்து தெற்காக பாகிஸ்தானிய காஷ்மீர் பகுதி பிரதான நகரான கில்கிட் ஊடாக இந்து நதி கரையோரமாக காரக்கோரம் வேகப் பாதை அமைக்கப்பட்டு பாகிஸ்தானிய தலைநகரான இஸ்லாமாபாத் ஊடாக பாகிஸ்தானின் பிரதான மாநிலங்களான பஞ்சாப், சிந்து, பலூசிஸ்தான் மாநிலங்களுடாக தெற்கே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகமான குவடார் வரை அமைகிறது.

இந்த திட்டத்தின் கேந்திர முக்கியத்துவம் குறித்து பல ஆய்வுகள் பிராந்திய அளவிலும் சர்வதேச அளவிலும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. பாகிஸ்தானிய பொருளாதார பாதையின் மூலம் சீனாவுக்கு என்ன நன்மைகள் என்பதை நோக்கினால் இத்திட்டம் நிறைவு பெறும் பட்சத்தில் கோர்மூஸ் நீரிணைக்கு மிக அருகில் அமைந்துள்ள குவடார் துறைமுகம் மூலம் அடுத்த நாற்பது வருடத்திற்கு சீனா உலகின் அறுபது சதவீத மசகு எணணெய் ஏற்றுமதியை கொண்ட கடற் போக்குவரத்தை கண்காணிக்க முடியும்.

அடுத்து பெரும் தொகையான எண்ணெய் வளங்களை இந்த பாதையூடாக செல்லும் எண்ணெய்க் குழாய்கள் வழியாக பாதுகாப்பாக பெற்றுக்கொள்ளலாம். இதன் மூலம் பல பில்லியன் பெறுமதியான பணச் செலவையும் நேரமிச்சத்தையும் பெற்றுக்கொள்ளலாம். இந்து சமுத்திரம் வழியாக மிக நெருக்கமான மலாக்கா நீரிணையை ஊடறுத்து தென் சீனக்கடல் வழியாக வந்தடையும் எண்ணெய் வளத்தை மிகக்குறுகிய காலப் பகுதிக்குள் குறைந்த செலவில் பெற்றுகொள்ளக்கூடிய சாத்தியகூறுகள் இருப்பதாக சீன தொழில்நுட்ப பொருளியலாளர்கள் கருதுகின்றனர்.

இது தவிர ஐக்கிய அமெரிக்க கடற்படையின் பிரசன்னம் கூடியளவில் காணப்படும் தென் சீன கடல் பகுதியை தவிர்த்துக் கொண்டு, தனது வழங்கல்களை உறுதி செய்து கொள்ளும் நிலை சீனாவுக்கு ஏற்படும். இதன் முலம் அமெரிக்க கடற்படையினால் தென் சீனக் கடற்பகுதிக்கு கொடுத்து வரும் பெறுமானத்தை வலுவிழக்க அல்லது நீர்த்து போக வைக்க முடியும். (தொடரும்)

**லோகன் பரமசாமி-**

அவசரக்குடுக்கை தலையைப் பட்டினி போடுகிறான்.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வீதியில் பயணித்தால் வீடு வந்து சேர முடியுமோ!

யாழ். குடாநாட்டில் நாளுக்கு நாள் நடக்கும் வீதி விபத்துக்களை அறியும்போது நெஞ்சம் வலித்துப் போகிறது. அந்தளவுக்கு வீதி விபத்துக்கள் ஒவ்வொரு நாளும் நடந்த வண்ணம் உள்ளன.

நேற்று முன்தினம் மட்டும் யாழ்ப்பாணத்தில் மூன்று விபத்துக்கள் அடுத்தடுத்து நடந்து மக்களை ஏக்கம் கொள்ள வைத்துவிட்டது.

திருநெல்வேலியில் நடந்த ஒரு விபத்தைப் பார்த்தபோது இதயம் கருகிக் கொண்டது. வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் வண்டியை முந்துவதற்காக இளம் மினிபஸ் சாரதி ஒருவர் நடத்திய சங்காரத்தில் நடந்த நாசங்கள் ஏராளம்.

பாடசாலை விட்டு ஆட்டோ ஒன்றில் தாயுடன் பயணித்த ஒரு பாலகன் அந்த விபத்தில் சிக்குண்டு படுகாயம் அடைந்த சம்பவம் மிகப்பெரும் வேதனையைக் கொடுத்தது.

வீதியில் யாரும் இறங்க முடியாது. இறங்கினால் வீடு வந்து சேர்ந்தால் பார்ப்போம் என்று நினைக்கும் அளவுக்கு பொறுப்பற்ற சாரதிகளும் பொறுப்பற்ற வாகன ஓட்டங்களும் நடந்து கொண்டிருக்கின்றன.

தட்டிக் கேட்பதற்கு ஆள் இல்லை என்ற நிலைமையில் பயணிகளும் பாதசாரிகளும் மௌனமாக இருக்கவேண்டி உள்ளது.

அதிவேகத்துடன் செல்லும் வாகனங்களில் பயணிப்போர், தம்பி! ராசா! ஏன்? இப்படி ஓடுகிறாய் என்று கேட்டால், கேட்பவர் அடிவாங்காமல் வீடு போக முடியாது என்பதே நிலைமை. அந்தளவுக்கு சண்டித்தனம் தலைவிரித்தாடுகிறது.

போக்குவரத்தை சீர்ப்படுத்த வேண்டிய பொலிஸாரின் முதல் நண்பர்களாக வேகக்கட்டுப்பாட்டை மீறி ஓடுகின்ற சாரதிகளே இருக்கின்றனர்.

ஏதேனும் பிரச்சினை வந்தால் போக்குவரத்துப் பொலிஸார் எங்களைக் காப்பாற்றுவர் என்று நினைக்கின்ற சாரதி யார் பற்றியும் கவனம் கொள்ள மாட்டார்.

இதற்கு மேலாக வடபுலத்தில் சாரதிகளுக்கு வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் என்பதன் பின்னால் பணமே அதி கூடிய செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்பதையும் இந்த இடத்தில் கூறித்தானாக வேண்டும்.

பயிற்சி என்பதை விட பணம் இலஞ்சமாகப் பாய்ந்ததால் வீதி ஒழுங்குகள் பற்றி இம்மியும் தெரியாதவர்களும் கனரக வாகனம் ஓடக் கூடியதான சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுள்ளனர்.

இதன் விளைவுதான் எங்கள் மண்ணில் நாளுக்கு நாள் நடக்கும் விபத்துக்களாகும். வீதி ஒழுங்கு முறைகளை மீறி விபத்தை விளைவிக்கின்ற சாரதிகள் மீதான சட்ட நடவடிக்கைகள் அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாமையும் வீதி விபத்துக்கள் நீண்டு செல்வதற்குக் காரணம் எனலாம்.

எதுவாயினும் முந்தி ஓடுகின்ற; போட்டி போடுகின்ற; கையடக்கத் தொலைபேசியில் கதைத்தபடியே வாகனத்தைச் செலுத்துகின்ற; கல், மண் ஏற்றி பயப்பீதியுடன் வாகனத்தைச் செலுத்துகின்ற சாரதிகள் இருக்கும்வரை, வீதியில் இறங்கியவர் வீடு வந்து சேருவார் என்பதை நிச்சயப்படுத்திக் கூறமுடியாது.

# மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்.நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வதிரி உல்லியனொல்லை ஆலய அருகாமையில் நடைபெறவுள்ளது.

அதிபர் ந.தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்வி அலுவலர் க.பொன்னையா கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக ஹரி பொறியியலாளர் மற்றும் ஒப்பந்தகாரர்கள் நிலைய நிர்வாக இயக்குநர் பழைய மாணவர் சோ.யாதவன் கலந்து கொள்ளவுள்ளார்.

மாணவர்களுக்குரிய பரிசில்களை திருமதி குமுதினி பொன்னையா வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (இ-5)

♦ ♦ ♦ ♦ ♦

கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் த.தயானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவியும் ஆயுர்வேத வைத்திய கலாநிதியுமான திருமதி மேனகா தவநேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். விஜேந்திரசர்மா கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக திருமதி சிவகுமார் சாத்தியநாயகி கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

திருவருள்மிகு ஸ்ரீ பத்மாவதி தாயாா கோதை நாச்சியார் உடனுறை திருவெங்கடேஸ்வரப் பெருமாள் ஆலய நூதன ஸ்ரீசனீஸ்வர பகவான் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் வைபவம் இடம்பெறவுள்ளது. (இ-5)

# இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

## நற்செயல்களைச் செய்யுங்கள்

★ பிரார்த்தனையைத் தவிர வேறு எந்த செயலாலும் விதியை மாற்றிக் கொளள முடியாது. நற்செயல் களைத் தவிர எந்தச் செயலாலும் ஆயுளை நீடிக்கச் செய்ய முடியாது.

★ எவர் ஒருவர் துன்பத்திற்கு ஆளானவரை நெருங்கி ஆறுதல் மனமிரங்கி கூறுகிறாரோ, அவருக்கு துன்பத்திற்கு ஆளானவருடைய நன்மைக்குச் சமமான நன்மை கிடைக்கும்.

★ வெட்கம் நன்மைகளை இழுத்து வரும். உனக்கு வெட்கம் இல்லையாயின் உனது இஷ்டம் போல் நடந்து கொள்.

★ இறைவனிடத்தில் சிறந்தவர் யார் என்றால், தன்னுடைய நண்பர்களிடம் நல்லவராக நடப்பவரே!

★ உங்களுக்குள் அன்பளிப்புகளை பரிமாறிக் கொள்ளுங்கள். ஏனென்றால் அன்பளிப்புகளைக் கொடுப்பது மனதிலுள்ள பொறாமைகளை அழித்து விடுகின்றது.

★ கெட்டவர்களுடன் தோழமை கொள்ளாதே. ஏனென்றால் அவர்களுடன் தோழமை கொண்டால் அவர்களின் கணக்கில் உன்னையும் சேர்த்துக் கொள்ளப்படும்.

# சர்வதேச இந்து சகோதரத்துவ மாநாடு கொழும்பில் நடைபெறும்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய சர்வதேச இந்து சகோதரத்துவ மாநாடு ஒன்று நாளையும் நாளை மறுதினமும் கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

"எமது மண்ணில் மேலும் வளரட்டும் எமது சமயம்" என்ற தொனிப் பொருளில் அமைந்துள்ள இம்மாநாட்டில் தமிழ்நாடு - பேரூர் ஆதீன இளைய பட்டம் வணக்கத்திற்குரிய **சீர்வளர் சீர் மருதாசல அடிகளார**, ஐக்கிய அமெரிக்காவின் 'ஹவாய் ஆதீன வணகத்திற்குரிய **ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள**, நல்லை ஆதீன முதல்வர் வணக்கத்திற்குரிய **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சமபந்த பரமாச்சாரிய சுவாமிகள்** உட்பட பல ஆன்மீகப் பெரியார்களும் அறிஞர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள அருளாளர்களின் அருளாசிகளைத் தொடர்ந்து, கலாநிதி சிவஸ்ரீ ம.பாலகைலாச நாத சர்மா **"எமது மண்ணில் ஆன்மீகப் பணிகள் மேலும் வளர..."** என்னும் தலைப்பிலும், தமிழருவி த.சிவகுமாரன் **"எமது மண்ணில் கல்விப் பணிகள் மேலும் வளர.."** என்னும் தலைப்பிலும், சைவஞான பானு கலாநிதி ஆறுதிருமுருகன் **"எமது மண்ணில் சமூகப் பணிகள் மேலும வளர.."** என்னும் தலைப்பிலும் பொருள விளக்க உரைகளை நிகழ்த்தவுள்ளனர். அதனைத் தொடர்ந்து பலர் பங்குபற்றும் கலந்துரையாடலும் இடம் பெறும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன் **"எமது மண்ணில் இந்து இளைஞர்கள் மேம்பட .."** என்னும் தலைப்பிலும், திருமதி வானதி காண்டீபன் **"எமது மண்ணில் இந்து மாதர்களின் பங்கு..."** என்னும் தலைப்பிலும் பொருள் விளக்க உரை நிகழ்த்தவுள்ளனர். அதனைத் தொடர்ந்து பலர் பங்குபற்றும் கலந்துரையாடலும் இடம்பெறும்.

எனவே இம் மாநாட்டில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை இந்துமாமன்றம் கேட்டுள்ளது. (இ-5)

# சதுர்த்தி விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சதுர்த்தி விரதம் எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ-5)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியி லிருந்து மாலை 5 மணி வரை வட மாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

அந்தவகையில் 06.02.2016 சனிக்கிழமை யாழ் பிரதேசத்தில் சாரையடி, கிராமக்கோடு, பருத்தித்துறை நகரம், ஏ.ஆ வீதி, கல்லூரி வீதி, தம்பசிட்டி, சாளம்பை, சுதந்திரபுரம், குட்டியப்புலம், அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு, சோளாவத்தை, மணக்கும்பான் தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை, மணக்கும்பான் கடற்படை முகாம், மண்டைதீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் பல்லவராயன்கட்டு, முழங்காவில், நாச்சிக்குடா, வெள்ளாங்குளம், முழங்காவில் கடற்படை முகாம், முழங்காவில் ஐஸ் தொழிற்சாலை, வெள்ளாங்குளம் 651ம் பிரிகேட் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சாம்பல் தோட்டம் கிராமம், கிறிட்டிலிருந்து வவுனியா நகரம் வரை, வவுனியா புகையிரத வீதி பிரதேசம், வவுனியா HNB, ஓவியா விடுதி, ராணி அரிசி ஆலை, லங்கா ஆலை, செல்வராஜா ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் முசலிப்பிரதேசம், பரிகாரிக் கண்டல், பூந்தீவுக் கண்டல், மடுக்கரை, புதுக்காமம், மருதமடு, பொன்னாச்சிக்குளம், மணற்குளம், மேதாவெளி, பொற்கேணி, கொக்குப் படையான், தம்பட்டமுசலி, மறிச்சுக் கட்டி, கூழாங்குளம், புதுவெளி, அரிப்பு நீர்ப்பாசன சபை, சிலாவத்துறை, CECB, முள்ளிக்குளம் கடற்படை முகாம், சிலாவத்துறை கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும். மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)



# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## நிந்தனையும் துன்பமும்

(ஓர்) உலகம் சார்ந்த மனிதன் துன்பத்தில் இருக்கும்போது, அவன் தன்னைச் சுற்றியுள்ள மனிதர்களையும் சமுதாய அமைப்பு முறைகளையும் பொதுவாக இந்த உலகையும் நிந்திக்கின்றான்.

ஒரு சாதகனீ துன்பத்தில இருக்கும்போது, அவன் உலகை மட்டும் நிந்திக்காது தான் பின்பற்றும் மார்க்கத்தையும் ஞானத்தையும் தன்னையும் நிந்திக்கின்றான்.

ஒரு சாதகனாக இல்லாமல் இருப்பது நல்லது. ஏனென்றால் நீங்கள் குறைவாகவே நிந்தனை செய்வீர்கள். ஆனால் அதேவேளை ஒரு சாதகன் எல்லாவற்றையும் அதிகமாகவே அனுபவிக்கிறான். வாழ்க்கையில் அன்பும் அதிகம், வேதனையும் அதிகம். மகிழ்ச்சி அதிகமாக இருக்கிறபோது, அதற்கு மாறான துன்பமும் அதிகமாக இருக்கிறது.

நீங்கள் பின்பற்றும் மார்க்கத்தையோ உங்களையோ அல்லது இந்த உலகத்தையோ நிந்திக்காது, உள்ளதை உள்ளபடியே பார்ப்பதற்கு ஓரளவு மனப்பக்குவம் வேண்டும்.

என்ன நான் சொல்வது புரிகிறதா?

ஒருவன் நிந்தனைகளையும் துன்பங்களையும் கடந்து தாண்டிச் செல்லும் மனப்பக்குவம் அடைந்துவிட்டால், அவனுக்கு வாழ்வில் வீழ்ச்சி என்பதே இல்லை. அது ஒரு மொத்தமாகத் தாண்டியதுபோல் எல்லாம் கடந்த நிலை.

இறைவன் உங்களைச் சோதிப்பதில்லை. சோதனை என்பது அறியாமையின் ஒரு பகுதி. யார் ஒன்றைச் சோதனை செய்வார்கள்? ஏதோ ஒன்றை அறியாதவர்கள்தான் சோதிப்பார்கள். இறைவன் உங்கள் ஆற்றல் அறிவான், அப்படியிருக்க எதற்காக அவன் உங்களைச் சோதிக்க வேண்டும்?

பிறகு துன்பங்கள் ஏன் உள்ளன, திதிக்ஷாவிற்காக அதாவது உங்களிடம் உள்ள அளவற்ற பொறுமைக்காக நேர்மையான சரணாகதியால் நீங்கள் உங்களின் பொறுமையை அதிகரித்துக்கொள்ள முடியும். உங்களுடைய பொறுமைக்கு வலிமையான சவாலாக உள்ளவைகளாலும்! (சிரிப்பு)

# தென்னாபிரிக்காவை வென்றது இங்கிலாந்து







தென் ஆபிரிக்காவுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் டக்வொர்த் லூவிஸ் முறைப்படி 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது.

தென் ஆபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

முதல் ஒருநாள் போட்டி மாங்குவாங் ஓவல் மைதானத்தில் நடந்தது.இதில் முதலில் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு அசத்தலான தொடக்கம் தந்தனர்.

ஜேசன் ராய்(48), அலெக்ஸ் ஹேல்ஸ் (57), அணித்தலைவர் மோர்கன் (23), ஜோ ரூட் மார்கல் (52), பட்லர் (105), பென் ஸ்டோக்ஸ் (57) என அனைவருமே தம் பங்கிற்கு சிறப்பாக விளையாட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 399 ஓட்டங்கள் எடுத்தனர்.

கடின இலக்கை விரட்டிய தென் ஆபிரிக்கா அணியின் தொடக்கத்திலேயே அம்லா 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார், அடுத்த வந்த டுபிளசி, குயிடன் ஜோடி பொறுப்பாக விளையாடினர்.

55 ஓட்டங்கள் எடுத்த நிலையில் டுபிளசிஆட்டமிழந்தார். அடுத்து வந்த அணித்தலைவர் டிவில்லியர்சும் 8 ஓட்டங்களில் நடையை கட்டினார்.

தொடர்ந்து 33.3 ஓவரில் 250 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழை குறுக்கிட்டது. இதனை தொடர்ந்து டக்வொர்த் லூவிஸ் முறைப்படி 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இந்த போட்டியில் அணித் தலைவர் டிவில்லியர்ஸ் அடித்த சிக்சர் பந்தை சுப்பராக கேட்ச் பிடித்து ஆட்டமிழக்க செய்தார் பென் ஸ்டோக். (க)

# நிர்ப்பந்தம் காரணமாகவே ஓய்வு முடிபு எடுத்தேன்

## சந்தர்போல் விளக்கம்



மேற்கு இந்திய கிரிக்கெட் வாரியத்தின் மறைமுக நிர்ப்பந்தம் காரணமாகவே ஓய்வு முடிவை எடுத்துள்ளதாக சந்தர்போல் விளக்கமளித்துள்ளார்.

மேற்கு இந்திய துடுப்பாட்ட அணிக்காக 20 ஆண்டுகளுக்கும் மேலாக விளையாடியவர் சந்தர்போல்.

இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிப்பதாக கூறி மேற்கிந்திய கிரிக்கெட் வாரியம் அவரை நிரந்தரமாக ஓரங்கட்டியது.

இதனால் கடந்த மாதம் அவர் சர்வதேச துடுப்பாட்டங்களில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

மேற்கு இந்திய அணிக்காக அதிக டெஸ்டுகளில் (164) ஆடியவர் என்ற பெருமைக்குரியவர் சந்தர் போல்.

இதனிடையே தமது ஓய்வு விவகாரம் குறித்து பல தரப்பில் சர்ச்சை எழுந்துள்ள நிலையில் அவரே அது குறித்து விளக்கமளித்துள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வரும் மாஸ்டர்ஸ் சம்பியன்ஸ் லீக் போட்டிகளில் பங்கேற்பதற்காக மேற்கு இந்திய கிரிக்கெட் வாரியம் தமக்கு தடையில்லா சான்றிதழை வழங்கியுள்ளது என குறிப்பிட்ட அவர்,

ஜனவரி 23- ஆம் திகதி தாம் அதிகாரபூர்வமாக ஓய்வு அறிவிப்பை வெளியிட்ட பிறகே அந்த சான்றிதழை அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தாம் ஓய்வு குறித்து அறிவிக்காவிட்டால் அவர்கள் தமக்கு அந்த சான்றிதழை தந்து இருக்கமாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்கு இந்திய அணிக்காக நீண்ட காலம் விளையாடியிருக்கும் தம்மை, இதை விட நன்றாக நடத்தியிருக்க வேண்டும் என்பதே தமது உணர்வு என்றார். (க)

# 500 கோல் அடித்து மெஸ்ஸி சாதனை




உலகின் தலைசிறந்த காற்பந்தாட்ட வீரரான மெஸ்ஸி 500 கோல்களை அடித்து சாதனை படைத்துள்ளார்.


கோபா டெல்ரே காற்பந்து தொடரின் அரையிறுதி முதல் லெக் ஆட்டம் நேற்று முன்தினம் கேம்ப் நியூ மைதானத்தில் நடந்தது.

இந்த ஆட்டத்தில் பார்சிலோனா 7-0 என்ற கோல் கணக்கில் வாலென்சியா அணியை வீழ்த்தியது.

பார்சிலோனா அணியில் விளையாடிய மெஸ்ஸி மூன்று கோல்களை அடித்தார். இதில் ஒன்று மெஸ்ஸியின் 500வது கோலாகும். (க)

# இருபது-20 உலக கிண்ணத்தை இந்தியா வெல்லும்

## அஸ்வின் நம்பிக்கை



வேலூர் வி.ஐ.டி.பல்கலைக் கழகத்தில் ரிவேரா 2016 கலை விழா நேற்று தொடங்கியது.

விழாவை இந்திய கிரிக்கெட் அணி சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் தொடங்கி வைத்தார்.

அவர் அங்கு பேசியதாவது.

முதன் முதலாக வி.ஐ.டி. பல்கலைக்கழகத்துக்கு நான் வந்துள்ளேன். இது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. இங்கு தெலுங்கு பேசுபவர்கள் அதிகம் உள்ளனர். அடுத்த முறை நான் இங்கு வரும் போது தெலுங்கில் பேசுகிறேன்.

20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டி விரைவில் நடைபெற உள்ளது. இந்த போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்று உலக கோப்பையை வெல்லும். வெற்றி பெற்றுவிட்டு வந்து உங்களை சந்திக்கிறேன். இவ்வாறு அஸ்வின் கூறினார். (க)

# வடக்கு மாகாணத்துக்கென தனியான நீரியல் கொள்கை

## அமைச்சரவை அனுமதித்துள்ளதாக முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்துக்கென தனியான நீரியல் கொள்கை ஒன்றை நடத்துவதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். சபையின் அடுத்த அமர்வில் கடல் நீரினை நன்னீராக்கும் திட்டம் தொடர்பில் நடைபெறவுள்ள விவாதத்தை இடைநிறுத்துமாறு கோரி வடக்கு மாகாண பேரவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்திற்கு முதலமைச்சரால் எழுதப்பட்டுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உங்களால் அனுப்பப்பட்ட வடக்கு மாகாண சபையின் நாற்பத்தி ஐந்தாவது அமர்வில் யாழ்.குடா நாட்டுக்கான குடிநீர் விநியோகம் மற்றும் கடல் நீரினை நன்னீராக்கும் திட்டம் தொடர்பான விவாதம் எடுத்துக்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டு உள்ளது. குடாநாட்டுக்கான குடிநீர் விநியோகம், மற்றும் கடல் நீரினை நன்னீராக்கும் திட்டம் என்பன மத்திய அரசின் கீழ் இயங்கும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் என்பதோடு சர்வதேச உதவிகள் வழங்கும் நிறுவனங்களின் நிதி பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் ஆகும்.

இத்திட்டங்கள் தொடர்பாக நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, நிதி வழங்கும் நிறுவனங்களின் பூரண விளக்கங்களை எமது உறுப்பினர்கள் பெற்ற பின்னர்தான் இவ்வாறான விவாதங்களை நடத்துவது பொருத்தமானதாகும். போதிய விளக்கங்கள் இன்றி நடத்தப்படும் விவாதம் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்.

பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்தில் பல திட்டங்களை முன்னெடுத்து வரும் நிதி நிறுவனங்களின் செயல்பாடுகளினையும் இது பாதிக்க கூடும். அந்த வகையில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மற்றும் நிதி நிறுவனங்களுடன் கலந்துரையாடிய பின்னர் இவ்வாறான விவாதத்தை நடத்துவது நல்லதாகும்

அத்துடன் இத்தகையதொரு விவாதம் தனியே யாழ்.மாவட்டத்திற்கு மாத்திரம் அன்றி முழு வடக்கு மாகாணத்திற்கும் உரியதாக நடத்தப்படல் வேண்டும். வடக்கு மாகாணத்திற்கு என ஒரு நீரியல் கொள்கை ஒன்றை நடத்துவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கும் நிலையில்,

தற்போது இவ்விவாதம் மாநாட்டின் சுயாதீனங்களை பாதிப்பதாகவே அமையும். எனவே மேற்படி விவாதத்தை எதிர்வரும் ஒன்பதாம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபை அமர்வில் எடுத்துக் கொள்ள வேண்டாம் என தயவாக கேட்டுக்கொள்கின்றேன் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)

# சீஎஸ்என் தொலைக்காட்சிக்கு யோஷித ராஜபக்ஷவே தலைவர்!

## ஆதாரங்கள் பல மேலும் சிக்கின

(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷவின் புதல்வர் யோஷித ராஜபக்ஷ, கால்டன் ஸ்போர்ஸ்ட் நெட்வேர்க் நிறுவனத்தின் தலைவர் என்பதை உறுதிப்படுத்தும் பல சாட்சிய ஆவணங்கள் கிடைத்துள்ளன.

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் சீஎஸ்என் தொலைக்காட்சி நிறுவனத்தில மேற்கொண்ட தேடுதலின் போது இந்த ஆவணங்கள் கிடைத்துள்ளதாக தெரியவருகிறது.

இவற்றில், யோஷித ராஜபக்ஷ, நிறுவனத்தின் தலைவராக செயற்பட்டு பரிமாறிக் கொண்ட 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மின்னஞ்சல்களும், சில குறுந்தடுகளும் தலைவர் என்பதற்கான முகவரியுடன் கூடிய இறப்பர் முத்திரை, யோஷிதவின் கையெழுத்துடன் கூடிய இறப்பர் முத்திரை, நிறுவனத்தின தலைவர் என்ற வகையில் அனுப்பிய கடிதம் என்பனவும் இந்த ஆவணங்களில் அடங்குவதாக கூறப்படுகிறது.

யோஷித ராஜபக்ஷ உள்ளிட்ட பணிப்பாளர் சபை மீது, போலி ஆவணம் தயார் செய்தமை, நம்பிக்கையை மீறிய குற்றம், நிறுவன சட்டத்தை மீறியமை, சுங்க சட்டத்தை மீறியமை, அரச சொத்துக்களை முறைகேடாக பயன்படுத்தியமை உட்பட பல குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்ய பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அரசுக்கு சொந்தமான கட்டிடம் ஒன்றை தொலைக்காட்சி நிறுவனத்தின் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியமை, கட்டிடத்தை பெற்றுக்கொண்டமை தொடர்பில் யோஷித்த உட்பட சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர்கள் தெளிவான பதில்களை வழங்கவில்லை என கூறப்படு கிறது.

இளைஞர்களுக்கான எதிர்காலம் அமைப்பினால், சீஎஸ்என் தொலைக்காட்சி நிறுவனத்திற்காக பிரித்தானியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வாகனம் ஒன்றுக்கான உதிரிப் பாகங்களுக்காக ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 482 பவுண்களுக்கான கட்டணச் சீட்டும் தேடுதலின் போது கிடைத்துள்ளது.

இது குறித்தும் விசாரணை நடத்தப்பட்டு வருவதுடன் விசாரணைகளுக்காக நாமல் ராஜபக்ஷ விரைவில் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்படலாம் எனவும் அறிய முடிகிறது. (செ-12)

# தமிழில் தேசிய கீதம் பாடுவதை பிரிவினைவாதிகளே எதிர்க்கின்றனர்

## பிரதியமைச்சர் அஜித் பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய கீதத்தை தமிழில் பாடுவது புதிய விடயம் அல்ல என அது பழைய சம்பிரதாயம் எனவும் பிரதியமைச்சர் அஜித் பீ.பெரேரா தெரிவித்துள்ளார்.

பழைய சம்பிரதாயத்தை மீண்டும் ஏற்படுத்தியதே இன்று நடந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

களுத்துறை பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நாட்டை பிரிக்க ஆசைப்படுவோரே தேசிய கீதம் தமிழில் பாடுவதை எதிர்க்கின்றனர்.

வடக்கு, கிழக்கில் மாத்திரமல்ல, மேல் மாகாணத்தில் உள்ள தமிழ்மொழிமூல பாடசாலைகளில் தேசிய கீதம் தமிழிலேயே பாடப்பட்டது. கடந்த 4,5 ஆண்டுகள் அது நடைமுறையில் இருந்தது.

அரசியலமைப்புச் சட்டத்தில் தமிழில் தேசிய கீதத்தை பாட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தாம் உணரும், தாம் அறிந்த மொழியில் பாட வேண்டுமே தவிர தாம் அறியாதமொழியில் தேசிய கீதத்தை பாடுமாறு எந்த இனத்திற்கும் அழுத்தம் கொடுப்பது பொருத்தமில்லாதது.

சுதந்திர தின நிகழ்வில் தேசிய கீதம் தமிழில் பாடியதை பாரிய பிரச்சினை யாக கருத்தும் தரப்பினர் நாட்டை பிரிக்க வேண்டும் என்ற தரப்பினர் என்பதுடன் நாட்டில் அழிவை காண விரும்பும் தரப்பினர் எனவும் பிரதியமைச்சர் அஜித்.பீ.பெரேரா குறிப்பிட்டுள்ளார். (செ-12)

# யாழிலிருந்து கொழும்பு சென்ற பஸ் சாவகச்சேரியில் இடைமறிப்பு

## வழித்தட அனுமதி இல்லாததால்




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு புறப்பட்ட தனியார் பஸ் ஒன்று வழித்தட அனுமதிப்பத்திரம் இல்லாததால் சாவகச்சேரியில் வைத்து போக்குவரத்து பொலிஸாரால் இடைமறிப்புச் செய்யப்பட்டது.

இதனால் கொழும்புக்கு செல்லும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். வழித்தடை அனுமதி இருப்பதாக கூறியே மேற்படி பஸ்ஸில் பயணிகள் ஏற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வழித்தடை அனுமதிப்பத்திரம் இல்லாததால் இடைமறிப்புச் செய்யப்பட்ட பஸ்ஸிலிருந்த பயணிகள் கொழும்பு செல்லும் இன்னொரு பஸ்ஸில் ஏற்றப்பட்ட போதிலும் ஏற்கெனவே செலுத்தப்பட்ட பஸ் கட்டணத்தை திருப்பிக் கொடுப்பதில் தாமதமாக்கப்பட்டதால் பயணிகள் மேலும் சிரமமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (செ)

# ஜனாதிபதிக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வீடியோவை பதிவு செய்த இருவர் குறித்து விசாரணை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் வீடியோவை பதிவு செய்த பெண் ஒருவர் உள்ளிட்ட இருவர் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ள முறைப்பாடுகளுக்கு அமைய இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்த ஞானசாரதேரரை கைதுசெய்து விளக்கமறியலில் வைத்தமை தொடர்பில், நபரொருவரால் வீடியோ ஒன்று அண்மையில் பதிவேற்றப்பட்டது.

மேலும், இவ்வாறானதொரு வீடியோவை பெண்ணொருவரும் இணையத்தில் பதிவு செய்திருந்தார்.

இதன்படி இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (செ-12)

# சிறுபான்மை...

சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவடைவதற்கு கட்சியின் கீழ்மட்ட உறுப்பினர்கள் விரும்பவில்லை. அவர்கள் கட்சி பிளவுபடாது ஒன்றிணைந்து செயற்படுவதையே விரும்புகின்றனர். எமக்குக் கோரிக்கையும் முன்வைக்கின்றனர்.

கடந்தகால சில துரதிர்ஷ்டவசமான செயற்பாடுகளால் சிறுபான்மை மக்கள் கட்சியை விட்டு தூரமாகியுள்ளனர். அவர்களுக்கு எமது கட்சி மீது நம்பிக்கை ஏற்பட்டு இணைந்து செயற்பட வைப்பதற்கு தற்போதைய தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் மாத்திரமே முடியும்.

சிறுபான்மை மக்களது ஆதரவின்றி ஜனாதிபதியாகவோ, அரசு அமைக்கவோ, நாடாளுமன்றத்தில் ஆதிக்கம் செலுத்தவோ எவருக்கும் முடியாது. சுதந்திரக் கட்சித் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சிறுபான்மை மக்களது அங்கீகாரம் உள்ளது.

ஆகவே, எதிர்வரும் தேர்தலை தொகுதிவாரி முறையிலேயே நடத்தவுள்ளோம். நாங்கள் அனைத்து பகுதிகளிலும் எமது அதிகாரத்தை செலுத்தவேண்டுமாயின் சிறுபான்மை மக்களது ஆதரவு எமக்கு அத்தியாவசியமாகின்றது. அதனால் கட்சியைப் பிளவுபடுத்த இடமளிக்க வேண்டாம் என அடிமட்ட தொண்டர்கள் எம்மிடம் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

கட்சியின் தலைமைக்குக் கட்டுப்பட வேண்டும். பிரச்சினைகள் இருக்குமாயின் கட்சி மத்திய செயற்குழு மற்றும் நிறைவேற்றுக் குழு என்பவற்றுடன் கலந்தாலோசிக்க வேண்டும். மாறாக, அதன் முடிவுகளுக்கு எதிராக செயற்பட்டு கட்சியைப் பிளவுபடுத்த முனைபவர்கள் கட்சித் துரோகிகள் என்றார். (செ-12)

# லலித் கொத்தலாவலவின் மனைவி கைது

(கொழும்பு)

லலித் கொத்தலாவலவின் மனைவி சிசில் கொத்தலாவல வெளிநாடொன்றில் இருந்து இலங்கை திரும்பிய போது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட இவர் குற்றப் புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கோல்டன் கீ நிறுவன மோசடி தொடர்பில் அவரை கைது செய்வதற்கு உயர் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (செ-12)

# நாட்டின் நலன்களை...

இலங்கையின் 68-வது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று காலி முகத்திடலில் இடம்பெற்றன. இதில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதி மேலும் குறிப்பிடுகையில்,

1948-ம் ஆண்டுகளில் பெற்ற சுதந்திரத்தை நாம் இப்போது கொண்டாடுகிறோம், 1948 முதல் 2012-ம் ஆண்டு வரை பார்த்தால் அன்று முதல் இன்று வரை அரசியல், பொருளாதார ரீதியில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அன்று மக்கள் எதிர்பார்த்த சுதந்திரமும் இன்று எதிர்பார்க்கும் சுதந்திரமும் பாரிய மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளன.

1950-களில்பிறந்த குழந்தையை ஒரு கலாசார சிந்தனையுடைய குழந்தையாகவே நான்பார்க்கிறேன. இன்று பிறந்த குழந்தைகளை தொழில்நுட்ப சிந்தனையுடைய குழந்தையாகவே நான் பார்க்கிறேன்.

இரு குழந்தைகளையும் ஒன்று சேர்த்து நாம் முன்னேற வேண்டும். 400 ஆண்டுகளாக வெளிநாட்டு ஆட்சியாளர்களினால் நாம் பலவற்றை இழந்தோம். எமது கலாசாரத்தை, பண்பாட்டை, பொருளாதாரத்தை, பண்டைய மன்னர்கள் நிர்மாணித்த பலவற்றை நாம் இழந்தோம்.

உயிர் தியாகத்துடன் போராடி 1948இல் சுதந்திரம் பெற்றோம். ஜாதி, மத, பேதமின்றி அதற்காக போராடினோம். எனினும் ஒற்றுமை, சகோதரத்துவம் சரியாக இருந்திருந்தால் பிரச்சினை இருந்திருக்காது, பயங்கரவாதம் உருவாகியிருக்காது. மொழி, மத, கலாச்சார பிரச்சினைகளை ஆட்சியாளர்கள் புரிந்து சரியாக செயற்பட்டிருக்க வேண்டும்.

சுதந்திரம் என்ற சொல்லின் சரியான அர்த்தத்தை புரிந்து செயற்படுவது மிக மிக முக்கியம்

சுதந்திரம் எனும் சொல்லுக்கு பல அர்த்தத்தை முன்வைக்க பலர் முயற்சிக்கின்றனர். ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். எமது மக்களை நாம் சரியான வழியில் இட்டுச் செல்ல வேண்டும்.

யுத்தத்தின் பின்னரான கால கட்டத்தை சரியாக வழி நடத்தாமையால்தான் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தால் இலங்கைக்கு எதிராக பிரேரணை ஒன்று கொணடு வரப்பட்டது. மூவின மக்களும் 2015-ம் ஆண்டு ஜனவரி 8-ம் திகதி ஆட்சியை எம்மிடம் ஒப்படைத்தனர்.

1948-ல் இருந்து தொடர்ந்த பிரச்சினைகளை 2015-க்கு பினனர் தீர்க்க வேண்டி ஏற்பட்டது. எமக்கு பின் சுதந்திரம் பெற்ற பல நாடுகள் முன்னேறியுள்ளன. உங்களை, நாட்டை, நாட்டின் சுதந்திரத்தை பாதுகாப்பேன்.

கடந்த ஒரு வருடத்திலே ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் முழுமையாக பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொணடோம்.

நாங்கள் நாட்டில் சுதந்திர ஆணைக் குழுக்கள் பலவற்றை ஏற்படுத்தி இருக்கின்றோம். இலஞ்சம் மற்றும் ஊழலை முற்றாக இல்லாதொழிக்க நாம் செயற்படுகின்றோம்.

பாராளுமன்றத்தை மேலும் பலப்படுத்தியுள்ளோம். ஊடகத்துறைக்கும் என்றுமில்லாத சுதந்திரத்தை வழங்கியுள்ளோம். அவர்கள் அதை சரியாக பயன்படுத்தி பாதுகாக்க வேண்டும்.

குறுகிய அரசியல்நோக்கங்களுக்காக செயற்பட்டு நாட்டை நெருக்கடி நிலைக்கு தள்ள வேண்டாம்.

உயிர்த்தியாகம் செய்து நாட்டிற்கு சுதந்திரத்தைப்பெற்றுக்கொடுத்த தேசிய வீரர்களை நாம் இங்கே நினைவுபடுத்துகின்றாம். எமது நாடு தீவாக இருக்கின்றது. எமதுநாட்டைச்சூழகடல்வளம்இருக்கின்றது. ஆகவே எம்மைச்சூழ உள்ள கடலவளத்தை நாம் சரியாக பயன்படுத்த வேண்டும் என ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்தார் (செ-12)

# இலங்கையின் சுதந்திரதின...

இந்த நிகழ்வுகளின் முடிவில், காலை 11.15 மணியளவில் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டது. அத்துடன் காலை நிகழ்வுகள் நிறைவடைந்தன.

1949-ம் ஆண்டுக்குப் பின்னர் முதற்தடவையாக இரண்டு மொழிகளிலும் தேசிய கீதம் தற்போதே பாடப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்த திருப்பம் கடும்போக்கு சிங்கள தேசியவாதிகளுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், பிரிவினை கோரிய விடுதலைப் புலிகளுடனான உள்நாட்டுப் போர் முடிந்து 7 ஆண்டுகள் கடக்கின்ற நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கம் முன்னெடுக்கின்ற நல்லிணக்க முயற்சிகளின் அங்கமாக இந்த இருமொழி தேசிய கீதம் பார்க்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் சிங்கள மொழியில் மட்டும் தேசிய கீதம் பாடப்பட வேண்டும் என்ற கோசம் சில தரப்பினரால் முன்வைக்கப்பட்டமை சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது.

நாட்டில் சிறுபான்மை சமூகங்களான தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் தாய்மொழியாக தமிழ் மொழியே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)


## தேவை

- இலங்கையின் முதற்தர பழச்சாறு நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை (சிங்களம்) பேசத்தெரிந்தவர் மட்டும்.
- வாடகை அடிப்படையில் வாகனம் தேவை.

(3500)

தொடர்புகளுக்கு : - 076 986 5338

## போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்
( சமுர்த்தி உத்தியோகத்தர் - தரம் - III )
பிரிவு - 1 சனி, ஞாயிறு
9.00 - 11.00 am (30 மணித்தியாலங்கள்)

SLAS, SLEAS
பிரிவு - 1 சனி, ஞாயிறு
3.00 - 5.00 pm (60 மணித்தியாலங்கள்)
ஆரம்பம் - 06.02.2016 சனி 9.00 am

மேலதிக தொடர்புகள் - 077 217 0065
ஐடியல் கல்லூரி - மானிப்பாய்
(கிறீன் ஆஸ்பத்திரி பின் வீதி)

(3499)

## 2மணித்தியாலத்தில் கணினி திருத்தம்

உங்களது வீடுகள் அலுவலகங்களுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள் 0779086737
கணினி திருத்தக் கட்டணம் 500/- Computer Repair
லப்டொப் டெஸ்க்டொப் கணினிகள் திருத்தம்
கணினிகள் விற்றல் பாவித்தகணினிகள் வாங்குதல்
GUNA BEST PC 50/12, Hospital Road, Vairavar Kovil Lane, Jaffna.
கணினி பயன்பாட்டின் உச்ச அனுகூலங்களை எமது மக்கள் பெறவேண்டும் என்பதற்காக நிபந்தனையுடனான சேவைகளை வழங்குகிறோம்.

(C-3631)

## போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்

- வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் (சமுர்த்தி உத்தியோகத்தர்)
  தரம் - III க்கான ஆட்சேர்ப்பு போட்டிப்பரீட்சைக்கான வழிகாட்டல்
  வகுப்புக்கள் ஆரம்பம் :- 06.02.2016 - 12.00 pm
  உளச்சார்பு :- திரு.இ.சர்வேஸ்வரா
  சமூக அபிவிருத்தி பொது அறிவு :- V.தபேந்திரன்
- அலுவலக உதவியாளருக்கான வகுப்புக்கள் புதன் தொடக்கம் வெள்ளிவரை 3.00 pm தொடக்கம் 5.00 pm வரை நடைபெறும்

(C-3634)

021 222 8148, 021 568 9477
077 846 9721, 077 314 4762
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.


# சம்பந்தன்...

நிகழ்வு ஒன்றில், தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டது இது இரண்டாவது முறையாகும்.

முதல்தடவை 1949 ஆம் ஆண்டு டி.எஸ்.சேனநாயக்க பிரதமராக இருநத போது, முதலாவது சுதந்திர நாள் நிகழ்வில் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டிருந்தது.

நேற்று தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டபோது, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா உள்ளிட்ட இராணுவ அதிகாரிகள் அனைவரும், பிரமுகர்கள் மற்றும் பொது மக்களும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர்.

இது ஒரு வரலாற்று சந்தர்ப்பம் என்று இலங்கையின் பிரதி வெளிவவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வா ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

அதேவேளை நேற்றைய அதிகாரபூர்வ நிகழ்வில் தமிழ், சிங்கள மொழிகளில் தேசிய கீதம் பாடப்பட்டது நல்லிணக்கத்தை நோக்கிய நகர்வின் சமிக்ஞை என்று அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப், ருவிட்டரில் பதிவிட்டுள்ளார். (செ-12)

# கேபியிடம் தொட...

சட்டமா அதிபர் நேற்று முன்தினம் புதன் கிழமை சமர்ப்பித்தார்.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜயந்த ஜயசூரியவும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பிரியந்த நாவன்னவும், கே.பி.யிடமிருந்து இப்போதும் வாக்குமூலங்கள் பெறப்பட்டுவருவதாக நீதிமன்றில் தெரிவித்தனர்.

நீதியரசர்களான விஜித் கே.மலல்கொட, தேவிகா தென்னகோன் அடங்கிய குழு, வழக்கை எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

கே.பி என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதனைக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்கும்படி, மக்கள் விடுதலை முன்னணயின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத், ஆணைகோரும் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# தெருத் தெருவாய்...

போன உறவினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்று மட்டக்களப்பில் நடைபெற்ற காணாமல் போன உறவினர்களின் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கதறியழுத தாய் ஒருவர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இந்த சுதந்திரதினத்தை எப்படி நாங்கள் சுதந்திரமாக கொண்டாடுவது. எங்கள்வாழ்க்கை இருண்டு போயுள்ளது. இதை நாங்கள் நல்லாட்சி என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. எங்கள் கணவர் வரனும் எங்கட பிள்ளைகள் வரனும் வந்தாத்தான் நாங்கள் நல்லாட்சி என்று ஏற்றுக்கொள்வோம்.

இந்த சுதந்திர தினத்தை சுதந்திரமாக கொண்டாடுவதற்கு அரசாங்கம் வழிவகுத்து தர வேண்டும்.

எங்கள் வாழ்க்கை இருண்டு போயுள்ளது. எப்போது எங்கள் வாழ்க்கைக்கு ஒளிகிடைக்கும் என்பதை சொல்லத்தெரியவில்லை.

இப்படியே தேடித்தேடி தெருத் தெருவாய் இருந்து ஒருநாள் இறந்துபோவதுதானா எங்களுக்கு முடிவு. எங்கள் பிள்ளைகளை இந்த அரசாங்கம் ஏமாற்றக் கூடாது.

அண்மையில் பொங்கல் தினத்தில் பிரதமர் சொன்ன வார்த்தை எங்களுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த வார்த்தையை கேட்கவா நாங்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினோம்.

காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதற்கு இந்த அரசாங்கம் சொல்லியே ஆக வேணடும் என தெரிவித்தார். (செ-12)

# தமிழ் மக்களுக்கு அரசு...

விராஜ் காரியவசம் கோரிக்கை விடுத்தார்.

இந்நிலையில், தேசிய கீதம் தமிழ் மொழியில் இசைக்கப்பட்டமைக்கு எதிராக இனவாதிகளினால் முன்னெடுக்கப்படுகின்ற போராட்டங்களுக்கு நாம் ஒரு போதும் அஞ்சப்போவதில்லை.

அரசின் நல்லிணக்க செயற்பாடுகளை இழிவுப்படுத்த வேண்டாம் எனவும் அவர் மேலும் கோரிக்கை விடுத்தார்.

இவ்வாறான போராட்டங்களுக்கு அச்சம் கொண்டால் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது.

போராட்டங்களினால் எதனையும் சாதிக்க முடியும் என்பது தப்பான எண்ணமாகும்.

இதனை அரசாங்கம் கணக்கில் எடுக்காது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் 68 ஆவது சுதந்திரதின விழாவில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டமைக்கு எதிராக கருத்துக்கள் வெளியிடப்படுகின்றமை தொடர்பில் வினவிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (செ-12)

# பிரேமதாசவின் பாரியார்...

ருந்த எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், ஆசனத்தில் இருந்து எழுந்திருக்க, முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் பாரியார் ஹேமா பிரேமதாச உதவியுள்ளார்.

68-வது தேசிய சுதந்திர தினத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நிகழ்வு நடைபெற்ற இடத்திற்கு வந்த போது, அதில் கலந்து கொணடவர்கள், ஜனாதிபதியை வரவேற்பதற்காக எழுந்து நின்றனர்.

இதன் போது, எதிர்க்கட்சித் தலைவர் தனது ஆசனத்தில் இருந்து எழுந்திருக்க சற்று சிரமப்பட்டுள்ளார்.

அப்போது அவர் அருகில் அமர்நதிருந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் பாரியார் எதிர்க்கட்சித் தலைவர் எழுந்து நிற்க கை கொடுத்து உதவியுள்ளார். (செ-12)

# 68ஆவது சுதந்திர தின...

பினர் எம்.ஏ.சுமந்திரன ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

கடந்த வருடம் ஜனவரி மாதம் 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் நடைபெற்ற சுதந்திரதின நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இவர்கள் இருவரும் பங்கேற்றிருந்தனர். இது தொடர்பில் பரவலான விமர்சனங்களும், கண்டனங்களும் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், சமஷ்டி அமைப்புத் தொடர்பில் ஆராய ஸ்கொட்லாந்து சென்று நேற்று முன்தினம் காலை நாடு திரும்பிய இவர்கள் இருவரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடைபெற்ற சுதந்திரதின நிகழ்வுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கலந்து கொண்டுள்ளனர்.

இந்நிகழ்வில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஆளும் கட்சி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டுள்ளனர்.

அதேவேளை, மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான கூட்டு எதிரணி இந்த சுதந்திர தின நிகழ்வுகளைப் புறக்கணிப்பதாக அறிவித்திருந்தது.

இந்தக் கூட்டு எதிரணி சுதந்திர தின நிகழ்வுகளை தனியாக கொணடாடவுள்ளதாக கூறப்படுகின்றது.

இலங்கையின் 68ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்றுக் காலை காலி முகத்திடலில் இடம் பெற்ற சுதந்திரதின அணிவகுப்பில் 4,025 படையினர், 984 கடற்படையினர், 1,216 விமானப் படையினர், 887 பொலிஸார், 674 சிவில் பாதுகாப்புப் படையினர் மற்றும் 7 மாணவப் படையணியின் அதிகாரிகள் உட்பட 438 மாணவ படையணியினரும் கலந்து கொண்டுள்ளதாக கூறப்படுகின்றது.

அத்துடன், இந்த சுதந்திரதினத்தை முன்னிட்டு சுதந்திரத்தின் இதயத்துடிப்பு என்ற கருப்பொருளில் நேறறு மாலை 7 மணிக்கு காலிமுகத்திடலில் மாபெரும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (செ-12)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.